19 MAY .979

# முகவுரை.

பாரத, ராமாயண முதலிய இதிகாசங்களிலும் மற்றுமுள்ள சாஸ்திரங்களிலும் ஆங்காங்குக் காணப்படும் இந்தப் பதிவிரதைகளின் சரித்திரத்தை ஒருங்கு சேர்த்துப் பள்ளிப் பிள்ளைகளுக்கு வசன ரூபமாய்த் தருதல் அவர்களுக்குப் பெரிதும் பயனாகுமென்பதை உணர்ந்து, யான் இப்போது சில பதிவிரதைகளின் சரித்திரங்களை எழுதினேன். மேலும் சில சரிதங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு புஸ்தகமாக வெளியிட உத்தேசம். இப்புத்தகங்கள் பழைய சரித்திரங்களின் நினைவைப் பாலியருக் கறிவித்து, நீதி புகட்டுவதுடன், அவர்களுக்கு உரைநடைப் பழக்கத்தையும் விருத்திசெய்யும் ஆதலால், இவை பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு உப பாடமாக வைக்கும் தகுதியுடையனவாகும் என்பதைப் பள்ளிக்கூடங்களில் உபாத்யாயர்கள் பாராட்ட வேண்டுகிறேன்.

5, உலகப்பமேஸ்திரி வீதி
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை

நூலாசிரியன்.

உ

முருகன் றுணை

# பதிவிரதைகள் சரித்திரம்.

## 1. அருந்ததி சரித்திரம்.

தேவலோகத்தில், வஸிஷ்டர் என்னும் பெயருடைய தெய்வமுனிவர் ஒருவர் இருந்தார். அவர் தேவர்களுக்குக் குருவாய் விளங்கி அவர்களுக்குப் புரோகிதமும் செய்துவந்தார். அவர் பிரமசாரியாகப் பலநாளிருந்து, பின் கிருகஸ்தராக வேண்டும் என்னும் எண்ணங்கொண்டு, நற்குண நற்செய்கைகளையுடைய கற்புடைய பெண்ணொருத்தியைத் தேடுவாராயினர்.

அவர் அங்ஙனம் இருக்கும் நாளையில் பூலோகத்தில் மதங்க முனிவர் என்பவர் வானப்ரஸ்தாச்ரமத்தில் ஒழுகி, அருந்ததி என்னும் பெண்ணைப் பெற்றனர். அந்த அருந்ததி என்பவள் அழகிலும் அருங்குணத்திலும், சிறந்தவளாய்த் தன் தாய் தந்தையரையே தெய்வமெனப் பாவித்து, அவர்களுக்கான குற்றேவல் பலவற்றையும் செய்துவந்தனள். வஸிஷ்டர் அந்தப் பெண்ணைக் கண்டு அவளுடைய பலவாய உயர்குணங்களைப் புகழ்ந்து, அவளையே மனைவியாக்கிக்கொள்ள மனங்கொண்டார். மதங்கமாமுனிவரும் தமக்கு அருமையாய்ப் பிறந்த புதல்விக்கு ஏற்ற நல்ல நாயகன் எப்போது வருவான், எப்போது

வருவான் என்று எதிர்பார்த்திருந்தனர். அப்போது வசிஷ்ட முனிவர் மதங்கமாமுனிவரின் ஆச்ரமத்தை யடைந்தார். அவரை மதங்கமுனிவர் வரவேற்றுபசரிக்க, அவ்விரண்டு முனிவர்களும் ஒருவர்க்கொருவர் குசல வார்த்தையாடிக் கொண்டனர். பிறகு மதங்கமுனிவர், வசிஷ்டர் வந்த காரணத்தை விசாரித்தனர். அப்போது வசிஷ்டர், "முனிசிரேஷ்டரே! தாம் அருமையாய்ப் பெற்றெடுத்த புதல்வியை மணம்புரிந்து கொள்ளும் மனமுள்ளவனாய் நான் இவ்விடம் வந்தேன். ஆதலால், தாங்கள் அம்மாதினை எனக்கு மணத்திற்கொடுக்க மனநாடவேண்டும். இதுவரையில் யான் பிரமசாரியாக இருந்தது, நற்குணம் நற்செய்கை யமையப்பெற்ற பெண்ணொருத்தியைக் காணாமையினாலே யாகும். இப்பொழுது தங்கள் புதல்வி எல்லாக்குணங்களும் நிறையப்பெற்று, அழகிலும் சிறந்தவளாய் விளங்குவதால், அவளையே மணந்து இல்லறதர்மத்தை இனிது நடத்தத் துணிந்தேன்" என்றனர். அம்மொழியினை ஆவலுடன் கேட்ட மதங்கர், "வசிஷ்டரே! தமது இஷ்டம் போற் செய்யலாம். தங்களுக்கு என் பெண்ணைக் கொடுக்க என்ன தடையுண்டு? தாம் எனது பெண்ணின் நாயகராக அம்மாது நோற்ற நோன்பன்றோ நோன்பென்பது!" என்று கூறி, நல்ல நாளொன்றில் சாஸ்திரவிதிப்படி தமது புதல்விக்கும் வசிஷ்டருக்கும் மணமுடித்து வைத்தனர்.

வசிஷ்டர், மணமுடிந்ததும் தமது மனைவியுடன் அவ்விடத்திலேயே சில நாள் இருந்து, பின் மதங்கமா முனிவரிடம் விடை பெற்று, விண்ணுலகம் அடைந்தனர்.



அங்கு அருந்ததியம்மையார், தமது கணவனையே தெய்வமென வழிபட்டு நாளும் அவருக்கான குற்றேவல் பலவற்றையும் ஒரு குறைவுமின்றிச் செய்து வந்தார். அங்ஙனம் அவர் ஒழுகிவரு நாளையில் ஒரு நாள், வசிஷ்ட முனிவர் தமது மனைவியை அருகழைத்து, "பெண்ணே! நீ என்பால் வைத்துள்ள அன்பைக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தேன். ஆதலால், உனக்கு என்ன வேண்டுமோ, அதனைக் கேள்; யான் தருகிறேன்" என்றார். அதனைக் கேட்ட அந்த அம்மையார், "சுவாமி! தாங்கள் எனக்கு என்றும் அழியாத் துணையாக இருக்க, யான் உலகில் விரும்பும் வேறு ஒரு பொருளும் உண்டோ? தங்கள் பாதசேவை செய்யும் பாக்யத்தையே நான் நாடியுள்ளேன். ஆயினும் தாங்கள் அடியாளை ஏதாவதொன்று 'கேள்' எனக் கட்டளையிட்டதால் யான் கேளாமல் இருப்பதும், நல்லதாகாது. ஆதலால், யான் வேண்டுவதொன்றைக் கேட்கிறேன். அனுக்ரஹம் செய்யுங்கள்." என்றனர். வசிஷ்டர் அந்த அம்மையாரின் குணாதிசயங்களைக்கண்டு மனம் பூரிப்பவராதலால், அவ்வம்மை சொல்லிய வார்த்தைகள் அனைத்தையும் அதிக ஆவலுடன் கேட்டு, "கண்ணே! நீ 'கேட்கிறேன்' என்று சொன்னதும் எனக்கு அளவிலா ஆனந்தம் பெருகியது. அதை மேலும் என்னிடமிருந்து நீ பெற, அதையான் கண்டபின் நான் மேலும் பரமானந்த மடைதல் வேண்டும். ஆதலால், உடனே நீ கேட்பதாகக் கூறிய அதனைக் கேள்." என்றனர். அப்போது அருந்ததிதேவியார்,

"என் உயிரினும் சிறந்த தேவரீர், யான் உய்வடைய தர்மவழி யின்னதென்பதைத் திருவாய் மலர்ந்தருளினாற் போதுமானது." என்ன, வசிஷ்டர், "பெண்ணே, நீ என்னை எத்தகைய அரிய ஆடையாபரணங்கள் கேட்கப்போகிறாய் என்றல்லவோ யான் எண்ணி இருந்தேன்! கடைசியாக நீ என்னை ஏமாற்றம் செய்துவிட்டாயே!" என்றனர். அம்மொழி கேட்ட உத்தமி, "சுவாமி! அடியாளை மன்னிக்கவேண்டும். தாங்கள் கருதிய ஆடையாபரணங்கள் அடியாளுக்கு எத்தனை காலம் அழியாமல் உதவும்? அவையனைத்தும், இன்றோ, மறு கணத்திலோ அழிந்துபோகும் தன்மையுடையன அன்றோ? ஆகவே, அவ்வழிய பொருள்களையோ மேலாகத் தங்களிடம் யான்பெற மனநாடுவேன்? சுவாமி! யான் நல்வழிப்படத் தரும வழிகளைக் காதுகுளிரக் கேட்டேனாயின், இனிப் பிறவாத உயர்நிலையாகிய மோக்ஷத்தை யடைவேன்." என்று பணிவுடன் கூறினர்.

வசிஷ்டர், தமது அரிய மனைவியாரின் அற்புத வார்த்தைகளைக் கேட்டு, கரையடங்காக் களிபொங்க, "கண்ணே! நீ கூறியனயாவும் உண்மையே. உலகில் சாதாரணமாகப் பெண்கள் எல்லோரும் நிலையற்ற பொருள்களிடத்திலேயே அதிகப் பிரியம் வைத்து, அவற்றைப் பெறுவதிலேயே மனநாடுவர். ஆனால் நீயோ அப்பொருள்கள் அனைத்தும் துச்சம் எனத் துணிந்து, உய்வைத் தரும் உண்மை வழியையே நாடினை. ஆதலால், பெண்கள் நடந்துகொள்ள வேண்டிய தருமவழி யின்னதென்பதை உனக்கு யான் விஸ்தாரமாகச் சொல்ல வேண்டியதில்லையாயினும், நீயே அதைக் கேட்டதால் யான் சொல்கிறேன்; கேள். உலகில் எவன் ஒருவன் கடவுள் வழிபாடு செய்கிறானோ அவனே மோக்ஷ ராஜ்யத்தை அடைந்தவனாகிறான். அதுபோல, பெண்களும் தமக்குக் கடவுளாக விளங்கும் கணவரையே தெய்வமாகப் பாவித்து வழிபாடு செய்வாராகில், அவர்களும் எளிதில் அந்த மோக்ஷமாய பேரின்பத்தினை அடைந்தவராவர். அத்தகைய உயர்வாகிய குணம் உன்னிடத்தில் நிறைந்திருப்பதால், நான் அதைப்பற்றி விசேஷமாக ஒன்றும் சொல்ல வேண்டுவதில்லை. ஆதலால், நீ இப்போது கடைப்பிடித்துள்ள அவ்வுயர்வழியையே மேலெனக் கருதி நடப்பாயாயின், சுகிர்தத்தையே அடைவாய்" என்றனர். அவற்றை யாதரவுடன் கேட்ட அருந்ததி யம்மையார் தம்முடைய நாயகரதுபாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித் தெழுந்து, "அடியாளை ஆட்கொண்ட அருள்வள்ளலே! தேவரீர், அடியாள் உய்வடைய நிமித்தம் உபதேசித்த இவ்வுயர்வழியை என்றும் மறவேன்" என்று கூறி, அன்று முதல், எல்லாப் பொருளும் தம்முடைய கணவரின் உருவமே எனக் கொண்டு, இல்லற தருமத்தில் எள்ளளவும் தவறாது ஒழுகி வந்தனள்.



அங்ஙனம் அந்த அம்மையார் இருக்குநாளையில், நாரதர் என்னும் முனிசிரேஷ்டர், மூன்றுலகத்திலும் கற்பிற் சிறந்த உத்தமி யொருத்தியைக் காண வேண்டுமென்ற ஆவலுடையவராய்க் கடலை அளவுள்ள மலைக்கற்களை ஒருபடி அளவிற்கு எடுத்துத்

தமது மடியிற் கட்டிக்கொண்டு, அவற்றைக் கடலையாகப் பொரித்துத் தருபவர் எவரோ என்று ஒருவராய்த் தேடிக்கொண்டே, சத்தியலோகம் வந்து, சரஸ்வதி தேவியைப் பணிந்தார். சரஸ்வதி தேவியார் தம்மை வந்து பணிந்த நாரதரை ஆசிர்வதித்து, "நாரதா! க்ஷேமமாக இருக்கின்றாயா? ஏது என்னைநாடி இவ்வளவு தூரம் வந்தது?" என்று கேட்டனர். அப்போது நாரதர், "அம்மா! எனக்குக் கடலை சாப்பிடவேண்டுமென்ற ஆவல் உண்டாயது. அதனால் இச்சிறு கற்களைக்கொண்டு வந்தேன். இவற்றைத் தாம் பொரித்துக்கொடுக்கத் திருவுளம் பற்றவேண்டும்" என்று கூறினர். அதனைச் சரஸ்வதி தேவியார் அதிசயத்துடன் கேட்டு, "நாரதா! உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? எங்கேனும் கற்கள் கடலையாகுமா?" என்று கூற, நாரதர் வருந்தியவர் போலப் பாசாங்கு செய்து, அத்தேவியாரிடம் விடைபெற்றுக் கொண்டு, விஷ்ணுமூர்த்தி வாழும் வைகுண்டமடைந்து லக்ஷ்மி தேவியைப் பணிந்தனர். லக்ஷ்மிதேவியும் நாரதரை எழுப்பி ஆசிர்வதித்து, அவர் வந்த காரணத்தை வினவ, அவ்வம்மையினிடத்தும் முன் சரஸ்வதி தேவியிடம் கேட்டதுபோல் அவர் கேட்டனர். அதற்கு அவ்வம்மையும் அதிசயித்து, "நாரதா! இது என்னால் முடியவே முடியாத காரியம். வேண்டுமானால் பார்வதி தேவியாரைப் போய்க் கேள். ஒருவேளை அந்த அம்மையாருக்கு அந்த ஆற்றல் இருக்கலாம்" என்றனர். உடனே நாரதர் அந்த அம்மையினிடம் விடைபெற்றுக் கயிலயங்கிரியை அடைந்து, பார்



வதிதேவியாரைத் துதித்து, "அம்மா! கற்பே உருவாய் அமைந்த பரமேஸ்வரி, அடியேன், கடலை தின்னவேண்டுமென்று ஆசை கொண்டு, இந்த மூட்டையைக் கட்டிக்கொண்டு எல்லாவிடங்களிலும் சென்றேன். அதனை எவரும் பொரித்துத்தர இயலாதெனக் கூறிவிட்டனர். ஆதலால் அடியேன் தங்கள் சமூகம் அடைந்தேன். தாங்கள் தயைசெய்து இந்த முடிப்பில் உள்ளதைப் பொரித்துக் கொடுங்கள்" என்று தாம் கொண்டுவந்த முடிச்சை அவிழ்த்துக் காட்டினர். பார்வதிதேவியார் அந்த முடிச்சைக் கண்டு, "நாரதா! இது என்ன விபரீதம்? நீ என்னை ஏளனம் செய்யவந்தாயா, அல்லது பித்துக்கொண்டு சேர்ந்தனையா? எங்கேனும் கற்கள் கடலையாகுமா? இது யாரால் ஆகக் கூடும்?" என்று கூறினர். நாரதர் அதனைக் கேட்டதும் "அம்மா! இப்படியோ என் ஆசை அழியவேண்டும்! தங்களாலும் இக்காரியம் கைகூடாதென்றால், உலகில் வேறு எவர்தான் செய்யப்போகிறார்கள்? பதிவ்ரதா மஹத்துவத்தால் எல்லாம் ஆகுமே என்ற துணிவுடன் தங்களிடம் வந்தேன். தாங்களே இங்ஙனம் முடியாது என்று சொல்லியபோது, நான் என் ஆசையை விட்டுவிடவேண்டியதே. ஆயினும், மற்றும் சிலரிடம் சென்று வருகிறேன்; எனக்கு விடைகொடுங்கள்" என்று சொல்லிப் பார்வதி தேவியாரிடம் விடை பெற்று, வசிஷ்டமா முனிவருடைய ஆஸ்ரமத்தை வந்தடைந்தார்.

வசிஷ்டர், நாரத முனிவரைக் கண்டதும் அன்புடன் அவரை வரவேற்று உபசரித்தனர். அவரு

டன், அவரது பத்தினியாராகிய அருந்ததி தேவியும் துணையாய் இருந்து அதிதி பூஜை செய்து அருகில் நின்றனர். அப்போது வசிஷ்டர் நாரதரது வரவை விசாரிக்க, அவர் தாம் வந்ததன் காரணத்தைக் கூறினர். வசிஷ்டர் நாரதமுனிவர் கூறிய வார்த்தையைக் கேட்டு, ஒன்றும் பதில் சொல்ல முடியாதவராய்த் திகைப்புடனிருந்தனர். அருந்ததி தேவியோ நாரத முனிவரை வணங்கி, "சுவாமி! தேவரீர், அடியாளுக்கு இக்கட்டளை யிடும்போது, யான் இதனைச் செய்யாமல் இருப்பது நல்லதாமோ? அடியாளை யாட்கொண்ட அருணையகரது அநுக்ரஹத்தாலும், தேவரீரது அநுக்ரஹத்தாலும், அப்படியே செய்கிறேன்" என்று கூறி, அக்கல்முடிச்சைப் பெற்றுச் சமையலறையை அடைந்தனர். அடைந்த அவர், தமது கணவருடைய பாதாரவிந்தங்களையே தியானித்து, அந்தக் கற்களைத் தீயிலிட்டுப் பொரித்தனர். உடனே அவருடைய கற்பின் வல்லமையால், அந்தக் கற்கள் அனைத்தும் கடலையாகப் பொரிந்தன. பொரிந்த கற்களை, அவ்வம்மை வெளியே யிருந்த நாரதமுனிவரிடம் கொண்டுவந்து கொடுத்து, "சுவாமி! இவற்றையுண்டு தமது ஆசையை நீக்கிக்கொள்ளுங்கள்." என்றனர். நாரதர், கற்கள் கடலைகளாகப் பொரிந்திருப்பதைக்கண்டு அதிசயித்து, அந்த விஷயத்தை சரஸ்வதி தேவி முதலானோருடன் சொல்ல ஆவலுடையவராய், அருந்ததியாரிடத்தும் வசிஷ்ட முனிவரிடத்தும் விடைபெற்று, சத்தியலோகம் அடைந்தனர். அங்கு சரஸ்வதி தேவியார் நாரதரைக்கண்டு, "நாரதா! கற்களைப் பொரித்துக் கொண்டனையா? என்று கேட்க,



நாரதர், "அம்மா! தங்களால் அது ஆகாது என்று தாம்கூற யான் வைகுண்டத்தில் லக்ஷ்மி தேவியிடம் சென்றேன். அந்த அம்மையும் தம்மால் முடியாதென்றனர். பிறகு கைலைக்கும் சென்றேன். அங்கும் என் ஆசை முடிவு பெறவில்லை. பிறகு அருந்ததி தேவியார் இவற்றைப் பொரித்துக் கொடுத்தார். இதோ அவற்றை யான் தின்றுகொண்டே வருகிறேன்" என்று சொல்லி அவ்விடத்தைவிட்டு நீங்கி, அப்படியே மற்ற இருவரிடத்தும் சென்று சொல்லிவிட்டுப் பின் தமது ஆச்ரமத்தை யடைந்தனர்.

அவ்விஷயத்தினை ஆச்சர்யத்துடன் கேட்ட அந்த மூவரும் தமது நாயகரிடத்தில் அருந்ததி தேவியாரது சிறப்பைத்தெரிவித்து, உடனே அந்தப் பதிவ்ரதா ரத்தினத்தைப் பார்க்கத் தம்மை யழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று மன்றாடினர். அதனால், பிரம்மா, விஷ்ணு, ருத்திராகிய மும்மூர்த்திகளும், தங்கள் தங்கள் மனைவிமாரின் ஆவலைப் பூர்த்திசெய்யவும், தாமே அந்தக் கற்பிற்கரசியைக் காணவேண்டும் என்ற ஆவலோடும், தத்தம் மனைவியருடன் வசிஷ்டரது ஆஸ்ரமத்தை யடைந்தனர்.

வசிஷ்டர், தமது ஆஸ்ரமத்தில் மும்மூர்த்திகளும் வந்திருப்பதறிந்து, அவர்களை எதிர்கொண்டு பணிந்தெழுந்து, ஆஸ்ரமத்துள் அழைத்து வந்து, "பெண்ணே! மும்மூர்த்திகளும் நமது ஆஸ்ரமத்தை நாடிவரும் பெரும் பாக்யத்தை நாம் அடைந்தோம். இதோ விரைவில் வருவார்" என்று தமது மனை

வியை அழைக்க, அருந்ததி தேவியார் உடனே அவ்விடம் வந்து, மும்மூர்த்திகளையும் அவர்களது மனைவிமாரையும் கண்டு வணங்கினர். அப்போது, பத்தினி சமேதராக வந்த அம் மும்மூர்த்திகளும், அருந்ததி தேவியாரைப் புகழ்ந்து, "அம்மா, நீ எங்கள் பாதத்தில் வீழ்ந்து நமஸ்கரித்தல் ஆகாது. பதிவிரதா குணமே உருவெடுத்து வந்ததுபோல் இப்பூவுலகில் அவதரித்த நீ, எவரும் செய்தற்கரிய செயலை நாதனுக்குச் செய்து காட்டினை. ஆதலால், அதனைக் கேள்விப்பட்ட நாங்கள் எங்கள் மனைவியருடன் வந்து, உன்னைத் தரிசித்துப்போக வந்தோம். நீ சுகஜீவியாய், நித்யகல்யாணியாய்ப் பதினாறு பேறும் பெறுவாயாக! உன்னை இந்நாள் முதல் எண்ணித் துதி செய்வார் அனைவரும் தரித்திரம் என்னும் கொடிய முதலைவாயினின்றும் விடுபட்டுச் செல்வவந்தராவார்கள். அன்றியும், உன்னைத் தமது கல்யாணகாலத்தில் எண்ணும் தம்பதிகள் எல்லோரும் அஷ்டைஸ்வர்ய சம்பன்னராய் அகிலத்தில் நல்வாழ்வு பெற்றிருப்பர்." என்று அநுக்ரஹம் செய்து தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

அருந்ததி தேவியார் தமது கணவரையே தெய்வமெனப் பாவித்து அவரை வழிபட்டு வந்ததால், எவரும் செய்தற்கரிய அரிய செயலைச் செய்து, எவராலும் காணுதற்காகாத மும்மூர்த்திகளையும் அநாயாசமாகக் காணப் பெற்றுப் பெருவாழ்வடைந்தனர்.

காரிகையார்க்குக் கணவனே தெய்வம்.



## 2. அனுசூயை சரித்திரம்.

முன் யுகத்தில் அத்திரி என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் இருந்தனர். அவர் தேவலோகத்திலுள்ள சப்தரிஷிகளுள் ஒருவர். அவர் பல வருஷங்களாக, பிரம்மாதி தேவர்களும் அதிசயிக்கத்தக்க கோரமான தவத்தைச் செய்திருந்தனர். பின்னர் அவருக்கு எல்லா அறங்களினும் கற்புடைய மனைவியுடன் கூடி கிருகஸ்தாஸ்ரமத்திலிருந்து நடத்தும் அறமே மிகவும் சிறந்ததாகும் என்பது தெரிய வந்தது. அதனால் அவர், சாஸ்திரங்களில் கூறியுள்ள கற்புலக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவளும், அதிரூபவதியுமாகவுள்ள ஒரு பெண்ணைத் தேடி, அவளை மணம் செய்து கொண்டனர். அங்ஙனம் அவர் மணம் செய்துகொண்ட அந்த உத்தமியே, எல்லோரும் புகழ்ந்தேத்தும் அனுசூயை என்னும் பெயருடையவர்.

அனுசூயா தேவியார், தமது கணவனையே தெய்வமென வழிபட்டு வந்தனர். அவர் தினந்தோறும் அதிகாலையில் தமது கணவருடைய பாதாரவிந்தத்தை நெஞ்சில் சிந்தித்துக் கொண்டே எழுந்து, நீராடித் துவைத்துலர்ந்த ஆடையணிந்து, நெற்றியில் குங்குமப் பொட்டணிந்து, தமது கணவருடைய பாதத்தைப் பூஜிப்பர். உடனே அத்திரிமுனிவர் நித்திரையினின்று நீங்கித் தமது மனைவியாரது லக்ஷ்மி விலாசம் பொருந்திய முகத்தில் விழித்தெழுவர். அவர் எழுந்ததும் அனுசூயா தேவியார், அவருடைய அனுமதி பெற்று அவருடைய பூஜைக்கான சாமான்

களைச் சேகரித்து வைத்து, அவராஞ்ஞைப்படி அவர் பிரியப்பட்ட பதார்த்த வகைகளுடன் கூடிய நல்லுணவைச் சமைத்து வைப்பார். அவர் சமையல் வேலையை முடிப்பதற்குள் முனிவரும் தமது பூஜையை முடித்துவிடுவார். இவ்வாறு தமது நாயகரின் சேவையன்றித் தவம் பிறிதில வென்றெண்ணும் மங்கைமாருட்டலைமை வாய்ந்த அநசூயையை அத்திரி முனிவர் நோக்கி "நீ செய்யுந் தொண்டுகளால் யான் பெரிதும் மனமுவந்தேன். உனக்கு விருப்பமுள்ள பொருள் ஏதேனுமிருந்து தெரிவித்தால் தடையின்றித் தருகிறேன்" என்று கூறினர். உடனே அநசூயா தேவியார் மிகுந்த பயபக்தியுடன் "சுவாமி! எதனால் ஸ்திரீகளுக்கு பதிவிரதை என்கிற பேரும் நல்ல கீர்த்தியும் மோக்ஷமும் கிடைக்கிறது? அவ்வுண்மையை எனக்குச் செப்பி அருள வேண்டும்" என்று பணிவுடன் மறுமொழி புகன்றனள். முனிவர், "பெண்ணே! மாதர்களுக்குத் தங்கள் கணவனே தெய்வம். கணவனுக்குச் செய்யும் பணிவிடைகளே தவம். கணவனையே தெய்வமாகப் பாவித்து மனோவாக்குக் காயம் என்னும் மூன்று உறுப்புக்களாலும் அவன் மனதுக்குகந்தனவற்றையே செய்யும் மங்கையையே பதிவிரதையென்று உலகத்தார் போற்றுவார்கள். அன்றியும், மோட்சம் அவளுடைய கையிலிருக்கிறது.

"பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு."

என்று கூறினர்.

இவ்வாறிருக்கையில் ஒருகால் மும்மூர்த்திகளும், தங்கள் தங்கள் வாகனங்களிலேறி உலக சஞ்



சாரஞ் செய்து வருகையில் அத்திரி முனிவரது ஆச்சிரமத்தண்டை வந்தனர், வாகனங்கள் அப்பால் செல்லமாட்டாது நின்றுவிடவே, விடயம் யாதென வினவலும் விட்டுணுவின் வாகனமாகிய கருடன் அவர்களை நோக்கி, "இறைவர்காள்! இவ்விடம் ஒரு பதிவிரதையின் வாசஸ்தானம் போலிருக்கிறது. அவ்வன்னை கற்பெனும் பொங்கு வெந்தீ ஆகாயமளாவி எரிகிறபடியால் அது சுடப் பொறுக்க லாற்றேம். இவ்வழியை நேரே கடத்தலரிது" எனப் புகன்றனன். அது கேட்ட இறைவர் மூவரும் பிறிதொரு நெறியே தங்கள் ஊர்திகளைச் செலுத்திக் கொண்டுபோவாராயினர்.

சிலநாட் சென்றபின், மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்து, கற்புடையாள் மகிமை இப்படியும் இருக்குமா? என்று ஆச்சரியப்பட்டு, அதை இன்னும் செவ்வனே பரிசோதித்தறிய வெண்ணி, அத்திரி ஆச்சிரமத்தை அணுகுதலும் முனிவர் மூவிறைவர்க்கும் முறைப்படி வந்தனை வழிபாடியற்றி, "வந்த காரியம் யாது" என வினவினர். அக்காலை அரி அயன் அரன் மூவரும் முனிவரை நோக்கி "யாம் நமது இல்லத்துக்கு அதிதிகளாய் வந்தோம்" என்று கூறினர். கேட்ட முனிவர் களிபெருவகை பூத்தவராய், "இந்நாள் நன்னாளாயிற்று. ஊழியி னிறுதியனவும் உறு தவ முயன்றாரும் பெறுதற்கரிய காட்சியினையுடைய இறைவராம் நீவிர் அதிதிகளாய் வருதற்கு இச் சிறுகுடில் பண்ணிய பாக்கியந்தான் என்னே!" எனப் பலவாறு புகழ்ந்து, [illegible] நாட்டு தகுதிக்கேற்ற உபசார வினைகள் [illegible]

னும் என்னாலியன்றவைகளை உண்டு களிப்படைய வேண்டுகிறேன்" எனக் கூறினர். பின்னர் முனிவரர் தமது மனைவியை நோக்கி "பாவாய்! மேலொரு பொருளுமில்லா மெய்ப் பொருளாம் மூவரும் நமதில்லின்கண் விருந்தினராய் வந்திருக்கின்றனர். விரைவில் அறுசுவையோடு கூடிய போசனம் சித்தமாகட்டும்" எனக் கட்டளையிட்டனர். கற்பிற் சிறந்த கரிகையாம் அநசூயை கணவன் கட்டளையைக் கடிதின் நிறைவேற்றி, "அடிகாள்! அமரருக்கரிய அதிதிகளை அமுதுசெய்ய அழைக்கலாம்" என்று பணிவுடன் பகர்ந்தனள். அத்திரியும் அவ்வாறே அயன் முதல் மூவரையும் ஆசனங்களிலிருத்தித் தானும் போசனத்தில் வீற்றிருந்து, "அன்புடையாளே! அன்னம் படைப்பாய்" என்றனர். என்னுமளவில் இறைவர் மூவரும் மனைமுனிவியை நோக்கி, "நினது மனைவி ஆடையின்றி அன்னம் படைப்பின் யாம் புசிப்போம். அவ்வாறு செய்யாவிடில் உண்ணோம்" என்றனர். முனிவர் அவ்வாறே செய்யும்படி ஏவினர். அநசூயை தனது நாயகன் ஏவியபடியே ஆடையைக் களைந்து வைத்து, திருவாணியாய்ப் போஜன பதார்த்தங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அவர்களெதிர்ச் சென்று "காமம் பாவமும் தருவதும் அப்பதங் கடந்தால் சேமவீடுறச் செய்வதும்" ஆகிய மறையெழுத்தை மனதில் தியானித்தாள். அவ்வளவில் மறையும் தடவுதலரிவரு தனி முதல்வராம் மூவரும் "தாய் உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்டு அன்னாய்!" என்னும் குழவிகளாயினர். உடனே முனிவர் இறும்பூதெய்தினர். அநசூயை, குழவிகளை



எடுத்துப் பாலூட்டிச் சீராட்டி, மைதீட்டி, மலர் சூட்டி வெண்மையான தொட்டிலிற் கிடத்திக் கண்வளர்த்தினள்.

இங்ஙனமொரு தினங்களாய்த் தமது கணவர் முதலானோர்களைக் காணாது இலக்குமி, சரஸ்வதி, பார்வதி முதலிய மூவரும்; ஓர் பணிப் பெண்ணால் நிகழ்ந்த செய்தியை அறிந்து துக்காக்கிராந்தர்களாய் உயிரிழந்த உடல் போலவும் மணியிழந்த நாகம் போலவும் அறிவற்றுச் செயலற்று அத்திரி யாச்சிரமத்துக்கு ஓடோடியும் வந்தார்கள். வந்தவர்களை அநசூயை பரிவுடன் உபசரித்து, "அன்னைமார்களே! அடியாளது சிறுகுடிலுக்கு நீவிர் பாதசாரிகளாய் வர நேர்ந்தது யாது காரணத்தால்? உங்கள் தரிசனத்தால் என் ஜன்மம் சாபல்யமாயிற்று." என்று பல பணிவுடை மொழிகளைக் கூறினள். அப்பொழுது, வந்திருந்த மூவரும் அநசூயையின் அடிகளில் விழுந்து தண்டனிட்டு "அன்னாய்! நினது கற்பின் மகிமையை யாங்களோ கூறவல்லோம்? தயைபுரிந்து எங்களுக்கு மாங்கல்யபிச்சை தந்தருள வேண்டும்" என்று இறைஞ்சினார்கள். உடனே அநசூயை அம்மூன்று குழவிகளையுமெடுத்து வந்து "இதோ வாங்கிக்கொள்ளுங்களம்மா; உங்கள் கணவர்களை" என்று அவர்களிடத்தில் கொடுத்தாள். திரும்பவும் அவர்கள் "அம்மா! யாங்கள் இக்குழவிகளை எவ்வண்ணம் கொண்டு போவோம்? நினது கற்பின் மகிமையில் இவர்களை முன்போலச் செய்தருள்க!" என்று வேண்டிக்கொண்டார்கள். கற்பினுக்கணிகலமாகிய அநசூயை, தமது கணவனுடைய

திருவடிகளை மனதில் தியானித்தாள். அவ்வளவில் குழந்தைகள், தேவரும் முனிவரும் தெரிக்கலா முதல் மூவராய் நின்றனர். நின்ற மூவரும் அநசூயையின் பாதங்களில் தெண்டனிட்டு "அன்னையே! நினது மகிமையை யறியாமல் பரிசோதிக்க வந்த எங்களை மன்னிப்பாயாக! உத்தமியாம் நின் வயிற்றில் நாங்கள் மூவரும் பிள்ளைகளாய்ப் பிறக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அநசூயை அவர்களைப் பார்த்து "உம்மை யொத்தவர்களைப் பிள்ளைகளாய்ப் பெறுவதினும் உயர்ந்த பேறு வேறுண்டோ? உங்களுடைய திருவுளப்படியே நடக்கட்டும்" என்று கூறினள். உடனே அலைமகள் கலைமகள் மலைமகள் என்னும் தேவிமாரொடும் மூவரும் தத்தம் இருப்பிடஞ் சேர்ந்தனர். சிலநாட் சென்ற பின், பிரமன் சந்திரனாகவும், விஷ்ணு, தத்தாத்திரேயனாகவும் சிவன் துருவாசனாகவும் பிறந்தனர். அநசூயை என்னுங் கற்பரசியும் கணவன் களிக்க நடந்து இம்மை மறுமைப் பயன்களை யடைந்தாள்.

கற்புடையவளுக்குக் கடவுளரும் அஞ்சுவர்.

## 3. உலோபாமுத்திரை சரித்திரம்.

விதர்ப்ப தேசத்தரசன் புத்திரியாகிய உலோபா முத்திரை என்பவள் நற்குணங்களும் அழகும் ஓருருவெடுத்து வந்ததுபோல் விளங்கிக் கொண்டிருந்தாள். அத்தருணம், அவ்வரசனது சமுகத்திற்குக் கலைக்கடலையேயன்றி, அலைக்கடலையும் வாரியுண்ட அகத்தியர் என்னும் முனிபுங்கவர் எழுந்தருளினர். முனிவரைக் கண்ட அரசன் பன்முகமன்கூறி வரவேற்று அடிபணி



ந்து, ஆசனத்திருத்தி அர்ச்செய்திருந்த பயனெய்தினன்; மற்றினிச் செய்வதருள்க" என்றனன். முனிவன், அரசனை நோக்கி, "புரவல! அநேக அரசர்கள் முகமன் எதுவேண்டினும் செய்கிறேனென்று வாக்களித்துப் பிறகு மொழி தவறுகின்றனர். நீயும் அவருள் ஒருவனானால் யான் வேண்டுவது ஒன்றுமேயின்று. அன்றிச் சொன்னவண்ணம் செய்ய வல்லையானால் எனது விருப்பத்தை விளம்புகிறேன்" என்றனர். அரசன் தன்னால் முடியுமான எதையும் தவறாமற் செய்வதாய்ச் சொல்ல, அகத்தியர் "நினது மகள் உலோபா முத்திரையை எனக்கு விவாகஞ் செய்து கொடுக்கவேண்டும்" என்றார். அரசனுக்கு இச்சொற்கள் எரிவேல் பாய்புண்ணிலாம் பெரும் புழையிற் கனல் நுழைந்தாலென்ன ஆயின. உடனே அரசன் பாற்கடற் செல்வியை ஒத்த என் மகளை, காட்டிலுழன்று காய்கனியைத்தின்று சடையும் என்புமே உருவாயிருக்கிற முனிவனுக்கோ கொடுப்பேன். ஒருபோதுங் கொடேன்" என்று உரத்துக் கூவினான். அதனைக் கேட்ட அமைச்சர் அரசனை அணுகி, "வேந்தே! இம்முனிபுங்கவர் தாங்கள் கருதுகின்றவாறு, எளியவரல்லர். இந்திரத்யும்னனென்னும் மன்னனை யானையாகும்படி சபித்தவர். இமையவர்க் கிடுக்கண் செய்த அசுரர், அலைகடலிற்புக்கு மறைந்தபோது, உம்பர் வேண்டுகோளால் உததியை உண்டவர். ஆகாயத்தையளாவிய விந்தியமென்னும் மலையைப் பாதலத்திலழுந்தும்படிச் செய்தவர். வாதாபி என்னும் அரக்கனது உடலை உண்டு உலகுக்கு உற்றதாய துன்பத்தை நீக்கினவர். சிவபெருமானால் உபதேசிக்கப்பட்ட

தமிழ் என்னும் கரையில்லாத கடலைத் தந்தவர். இத்தகைய பெருந்தகுணமுடைப் பெருந்தவத்தினரை இகழ்தல் நன்மை பயத்தலன்று" என்று கூறினர். அப்போது அருகிலிருந்து அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த லோபாமுத்திரை தனது தந்தையை நோக்கி, "ஐய ! நாம் பல பிறப்புக்களிற் செய்த நல்வினை இம்முனிவரை நமதில்லிற் கொண்டு சேர்த்திட்டது. தாங்கள் தேடியலைய வேண்டிய அவசியமில்லாமல் தாமாகவே வந்த இம்முனி புங்கவருக்கு என்னைத் தாரைவார்த்துக் கொடுத்திடுக!" என்றனள். அதைக் கேட்ட அரசன், "கண்மணீ ! இவரு உனக்கேற்ற கணவன்? எத்தனையோ அழகிற் சிறந்த அரசகுமாரர்களில்லையா ? அவருள் உனக்கேற்ற ஒருவனுக்கு உன்னை விவாகஞ் செய்து கொடுக்கிறேன்." என்று சொன்னான். கேட்ட உலோபாமுத்திரை "தந்தையே ! தாங்கள் இம்முனிவரை அழகில்லாதவரென்று இகழ்தல் கூடாது. இவ்வாறே முன்னொரு காலத்தில் மாந்தாதா என்னுமரசனிடத்தில் ஸௌபரி என்னும் முனிவர் எழுந்தருளி அவரது புத்திரிகளில் ஒருத்தியைத் தமக்கு விவாகஞ் செய்து கொடுக்கவேண்டும்" என்று கேட்டார். அவ்வரசனும் உம்மைப்போலவே முனிவரை அழகில்லாதவரென்று மனதில் நினைத்து, முனிவரைப்பார்த்து, "ரிஷிசிரேஷ்டரே ! எனது புதல்விகளை உம்மெதிரில் கொண்டு வந்து நிறுத்துகிறேன். அவர்களுள் எவளாவது உம்மை விரும்பினளாகில் அவளை உமக்கே விவாகஞ் செய்து கொடுக்கிறேன்" என்று புகன்றனன். அதற்கந்த முனிவர் சம்மதித்ததன்மேல் அவ்வாறு செய்



யவே, அவனது புத்திரிகள் பதினைந்து பேர்களும் அம்முனிவரை விரும்பலானார்கள். விஷயத்தை நேரிற்கண்ட அரசன், தன் இஷ்டம் நிறைவேறாதது கண்டு பதினைந்துபேரையும் முனிவருக்கு விவாகஞ் செய்து முடித்தனன். இவ்வாறு பெரியோர்கள் சொல்ல யான் கேட்டிருக்கிறேன். ஆகையால் இவரைத் தவிர மன்மதனானாலும் நான் கண்ணெடுத்துப்பாரேன்" என மொழிந்தனள். அரசன் ஒன்றுஞ் செய்ய இயலாமல் முனிவருக்கே தன் மகளைக் கலியாணஞ் செய்து கொடுத்தனன்.

அகத்தியர் மனைவியோடு மாமனாரகத்தில் ஆறு மாதங்களுக்கதிகம் இருந்தனர். உலோபா முத்திரை கணவனுக்கு வேண்டிய எல்லாத் தொண்டுகளையும் குறைவற இயற்றி, அவரது திருவடிகளையே மனத்திற் சிந்தித்திருந்தாள். ஒரு நாள், முனிவர் தமது மனைவியை நோக்கி, பெண்ணே, யான் பருகுவதற்குப் போதுமான அளவு பசுவின்பால் கொடுக்க மாட்டுவாயா? என்று கேட்க, அதற்கு அவள், "சுவாமி, தேவரீருக்குத் தேவையான அளவு பால்கொடுக்க அடியாளாலாகுமா? ஆயினும் கட்டளையிட்டபடி யால் கூடியமட்டில் செய்கிறேன்." என்று சொல்லி, ஒரு பாத்திரத்தில் பாலைவார்த்துத் தனது கணவனது திருவடிகளை மனதில் நினைத்து அட்சயமாக வளர வேண்டுமென்று பிரார்த்தித்து முனிவர் கையில் கொடுத்தாள். கடல்குடித்த முனிவர் அப்பாத்திரத்திலுள்ள பாலைக் குடிக்கக்குடிக்க வற்றாது பால் பெருகிக்கொண்டேயிருந்தது. அதைக் கண்டு முனிவர் அடங்கா மகிழ்ச்சியடைந்தார்.

சிலநாள் சென்ற பிறகு அவர் மனைவியுடன் ஆரணியத்துக்குச் சென்றார். செல்லும்போது உலோபாமுத்திரையார் தமது ஆபரணங்கள் அனைத்தையும் களைந்து வைத்துவிட்டு மரவுரியுடன் பிரயாணமானார். ஆச்சிரமத்தை அடைந்து இல்லறம் நடத்தி வரும் நாளில் கருவடைந்து மாதங்கள் சென்றவாறே ஒரு புத்திரனை ஈன்றனர். புத்திரோற்சவத்திற்கு வந்திருந்த முனிவர் குழாம் அனைத்திற்கும் வேண்டிய அறுசுவை போஜன பதார்த்தங்களை அந்தம்மாள் தான் ஒருத்தியே செய்து முடித்தனள்.

பின்பொருக்கால் தங்களாச்சிரமத்துக்கு வந்திருந்த விபுலர் என்னும் ரிஷியின்பத்தினி விமலாங்கி என்பவள், ஆபரணங்கள் வேண்டுமென்று கேட்க உலோபாமுத்திரை தனது கற்பின் மகிமையால் பக்கத்தி லிருந்த ஒரு மரத்திலிருந்து அவள் வேண்டிய எல்லா அணிகளையும் உண்டாக்கிக் கொடுத்தனள். பிறகு வெகு காலம் முனிவருடன் இம்மையின் பயனுகர்ந்து மறுமைப் பயனையு மடைந்தனள்.

**கற்புடையவளால் கற்பிக்கக் கூடாதது ஒன்று மில்லை.**

## 4. சீதையின் சரித்திரம்.

செல்விய, மதுரஞ் சேர்ந்த, நற்பொருளிற் சிறிய, கூரிய, தீஞ்சொல் வல்லிய கவிஞர் அனைவரும், வட்டநால் முனிவரும், புகழ்ந்ததும், எவராலும் வெல்லப்படாததுமாகிய அயோத்திமா நகரத்தில் தசரதன் என்ற ஒரு அரசர் இருந்தார். அவருக்கு அனைத்துல



கம் படைத்தளித்துத் துடைக்கும் அரியே புத்திரனாகப் பிறந்து, இராமன் என்று பெயர் பூண்டிருந்தார். அவர் மகா ஞானவானாகிய மிதிலாநகரத் தரசனாகிய ஜனகன், கன்யாசுல்கமாக வைத்திருந்த சிவதனுசை ஒடித்து, அவரது புத்திரி சீதையை மணந்தார். பின் பொருகால் இராமன் தமது சிறியதாயாகிய கைகேசியின் ஏவலின்படி காட்டிற்குப் பிரயாணமானார். அப்போது சீதையும் கானகத்துக்கு வருவதாய்ச் சொல்ல, இராமன் "அரண்மனையில் சகல போகங்களை அனுபவித்திருந்த நீ, காட்டிலுள்ள கஷ்டங்களை எவ்வாறு சகிப்பாய்! பஞ்சின் மேல் நடப்பினும் கொப்புளங் கொண்டு வருந்தும் நின் அடிகள் முள்ளினுங் கூரியவாகிய பருக்கைக் கற்களின்மேல் எவ்வாறு நடக்க வல்லதாகும்? ஆகையால் எனக்கு ஏற்பட்டிருக்கிற வனவாச காலமாகிய பதினான்கு வருஷத்தையும் பதினான்கு நொடியாகப் பாவித்து, விரைவில் உன்னை வந்தடைகிறேன். நீ வருந்தாது இவ்விடமே யிருப்பாயாக!" எனப்புகன்றனர். அவ்விதங் கேட்ட சீதாதேவியார், வெயிலிற் சேர்ந்த புழுவைப்போல் துடித்து, "நாதா! தாங்கள் அரச செல்வத்தைத் துறந்து, அணிகளையும் பொற்பட்டாடைகளையும் நீக்கி, மரவுரியுடுத்து, சடைமுடி தாங்கி, காய்கிழங்குண்டு காட்டிற் படுக்கவும், யான் பொற்பணி பூண்டு பொன்னாடையுடுத்து அறுசுவையுண்டு அரமனையிற் படுப்பேனோ? இவ்வாறு அடியாளைச் சோதிக்க முறையோ? யான் செய்த பிழையாது?" எனக்கூறிக் கண்ணீர் ஆறாகப் பெருக, [illegible] பஞ்சணைக்காட்டிலும் அன்பு செய்வதோ அக்காடு?" என்றுகூறி, உடனே

தனது அணிகலன்களையெல்லாம் கழற்றி யெறிந்து, பொன்னுடை களைந்து மரவுரியுடுத்து இராமனுக்கு முன்னே நடக்கலாயினள். பிறகு இராமன் இலக்குவன் சீதை ஆகிய மூவரும் காட்டை அடைந்தனர். முள்ளுங்கல்லும் நிறைந்த அக்காடு சீதைக்குக் கணவன் பின் செல்லுவதால் அயோத்தி மாநகர்போலவே யிருந்தது. கணவன் மேலுள்ள அன்பின் பெருக்கால் சீதை கல்லிலும் முள்ளிலும் தான் முன்னே நடந்து சென்று தனது கணவன் காலுக்கு அவற்றால் ஊறு உண்டாகாதபடி செய்தனள். காட்டிற் சென்று வசித்துவருநாளில் தனது கணவனுடைய பணிவிடைகளில் சிறிதும் குன்றாது செய்து வந்தனள்.

இவ்வாறிருக்கையில் இலங்கைக்கு அதிபதியாகிய இராவணன் என்னும் அரக்கன் மாரீசன் என்னும் அரக்கனை மாயமானாக உருவெடுக்கச் செய்து சீதையின் முன்னே போய் விளையாடச் செய்தனன். அந்த மானினது அளவிலா அழகைக்கண்டு அதனைத் தனக்குப் பிடித்துத்தர வேண்டுமென்று சீதை இராமனை வேண்டினள். இராமன் அதைப் பிடிக்கப்போகையில் அது நெடுந்தூரம் இராமனை இழுத்துச் சென்றது. வெகுதூரஞ் சென்ற இராமன், அதை ஓர் பாணத்தாலடிக்க அடியுண்டு வீழ்ந்த அரக்கன் இறக்கும்பொழுது "ஆ சீதா! லட்சுமணா!" என்று இராமனது குரலால் தீனஸ்வரமாகக் கூறி யிறந்தனன். அம்மொழி சீதா தேவியார் செவியிற் புகுந்த அளவில், இடியேறுண்ட நாகம்போல் உயிரிழந்தவளாய் இலக்குவனை இராமனிடத்துக்கு அனுப்பினர். இலக்குவன் போன பிறகு தனித்திருந்த தேவியாரை இராவணன் பர்ணசாலையோடு பெயர்த்துத் தேரின்மேல் வைத்துக்கொண்டு போய் இலங்கையில் அசோக வனத்துள் சிறை வைத்திட்டான். பிறகு மாயையில் வல்லவர்களாகிய அரக்கிமார் பலரைக் காவல்வைத்துச் சாமபேததானதண்டமென்கிற சதுர்வித உபாயங்களாலும் இவளை என் வசஞ் செய்யுங்களென்று சொல்லிப் போனான். சீதா தேவியார் அவ்வனத்திலிருந்து கொண்டு ஊணும் உறக்கமுமின்றி இராமனையே சதாகாலமும் தியானித்தவராய் அவர் வரும் வழியையே நோக்கிக் கொண்டிருந்தார். இராமன் பிறகு அனுமன் சுக்கிரீவன் முதலிய அநேக வானரர்களைத் துணையாகக் கொண்டு கடலில் அணை போட்டு இலங்கையை அடைந்து, இராவணனைக் குலத்தோடும் கொன்று சீதையைச் சிறைமீட்டார். மீட்டவுடன் தேவியை அவரது கற்புடைமையை உலகமறியும் பொருட்டு அக்கினி ப்ரவேசம் செய்யவேண்டுமெனக் கட்டளையிட்டனர். நாயகன் பணியைச் சிரமேற்கொண்ட சீதையார் அவ்வாறே எரியில் இறங்குதலும் அது தண்புனலிடைச் சேறலை ஒத்திருந்தது. உடனே அக்கினிதேவன் இராமன் முன்வந்து, "ஐய! இவ்வன்னையின் கற்புத்தீ என்னைச் சுட்டுவிட்டது. அன்னையார் கற்பினை உலகத்தார்க்கு உணர்த்த வேண்டி என்னைத் தகித்துவிடுதல் முறையோ ஐயா!" என்று குறையிரந்தனன். பிறகு, சீதாராமர் அயோத்தியையடைந்து தேவர்களால் போற்றப்பட்டு இன்புற்றிருந்தனர்.



**தீயையும் சுடுந் தீ, கற்புத் தீயே.**

## 5. ஜயப்ரதை சரித்திரம்.

முன்னொரு காலத்தில் புரூரவன் என்னும் சக்ரவர்த்திக்கு ஜயப்ரதை யென்னும் பெயருள்ள நற்பிறந்த காரிகை ஒருத்தி மனைவியாயிருந்தாள். அவள் தன் கணவனை தெய்வமென்றும், அவனுக்குச் செய்யும் பணிவிடைகளே பூஜையென்றும் அவன் திருவடிகளைத் தொழுவதே மோக்ஷமார்க்கமென்றும் அவன் அருகிலிருப்பதே பரமபதமென்றும் மனதிற்கொண்டு அந்தப்படி நடந்துவந்தாள். அங்ஙனமிருக்கையில், அரசர்க்கரசனாகிய புரூரவன் சனியினது கொடுமையால் தன் நாடு நகரங்களை இழந்து காட்டிற்சென்றான். ஜயப்ரதையுங் கணவனுடனே காட்டில் பல துன்பங்களையும் அனுபவித்து வந்தாள்.

சில காலத்திற்குப் பின் அவர்கள் வேறு நாட்டையடைந்து அங்குள்ள ஒரு வியாபாரியான குடியானவனுடைய பாதுகாப்பில் இருந்தார்கள். அரசன் குடியானவனுடைய வியவசாய சம்பந்தமான கணக்குகளை எழுதும் கணக்கனாய் அமர்ந்தான்.

அவ்வூரிலுள்ள தனவானாகிய வணிகனொருவன் குளம் ஒன்று வெட்ட வேண்டிக் குடியானவர்களை அழைப்பித்து வேலையில் ஏவினன். அரசன் வேலை பார்த்த குடியானவன் முதல் எல்லாரும் குளம் வெட்டுவதற்குச் சென்றார்கள். தினந்தோறும் குளம் வெட்டிக் கூலி பெறும் பொழுது குடியானவர்கள் தங்கள் கணக்கனுக்குமொரு ஆள் கூலி வாங்கிக் கொண்டுபோவது வழக்கம். இவ்வாறிருக்க, அக்



காரணத்தாலோ ஒரு நாள் செட்டியார் கூலியாட்களை நோக்கி, "இனி உங்கள் கூலிகளைப் பெற்றுப் போவதற்கு உங்களுடைய மனைவிமார்களை அனுப்புங்கள்" என்று கட்டளையிட்டார். அவ்வாறே குடியானவர்களுடைய மனைவிமார்கள் தங்கள் கூலியைப் போய்ப் பெற்றுவந்தனர். அரசர் மனைவியாகிய ஜயப்ரதையும் கூலிபெறச் சென்றபோது செட்டியார் கண்டு காமாந்தகார வசப்பட்டு மதியிழந்து பலாத்காரம் செய்ய எத்தனிக்கையில், ஜயப்ரதையானவள் தனது கணவன் திருவடிகளை மனதில் தியானித்து அருகிலிருந்த ஒரு பெட்டிக்குள் புகுந்து மூடிக்கொண்டு தன் கணவனன்றி யாருக்கும் அது திறக்கக்கூடாதென்று சாபமிட்டுக் கொண்டனள்.

அங்கே அரசன் நெடுநேரங் காத்திருந்தும் மனைவி வாராமையால் மிக வாட்டமுற்று எங்குந் தேடிக்காணாமல் தனது குழந்தைகளிருவரையு மழைத்துக்கொண்டு ஒரு காட்டின் வழியே போகையில் ஒரு ஆறு காணப்பட்டது. அதனைக் கடக்க எண்ணிப் பிள்ளைகளில் ஒருவனை இக்கரையில் விட்டு ஒருவனைக் கையில் எடுத்துக் கொண்டுபோய் அக்கரை சேர்த்துவிட்டு, மற்றொருவனையும் அக்கரை சேர்க்கும்பொருட்டு வருகையில் ஆற்றில் வெள்ளம் வந்து அரசனை அடித்துக்கொண்டு போய் விட்டது. அங்கிருந்து, இவையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஓர் இடைச்சி நீர் வடிந்ததும் இரண்டு பிள்ளைகளையும் எடுத்துக்கொண்டுபோய் வளர்த்துவந்தனள். ஆற்றிற் போன அரசனை ஓரிடையன் பாதுகாத்துக் கரை

யேற்றி உணவளித்துத் தனது ஆட்டு மந்தையிடமாகக் கொண்டுபோய்ப் படுக்க வைத்தான். அன்றிரவு சில திருடர்கள், அவ்வூர் ராசனரண்மனையிலுள்ள நகைகளைத் திருடிக்கொண்டு வருகையில், சில நகைகளைப் படுத்திருந்த புரூரவன் பக்கத்தில் நழுவ விட்டுப் போனார்கள்.

மறுநாட் காலையில் திருடர்களைத் தேடிப் பிடிக்க வந்த ராஜ சேவகர்கள் புரூரவன் பக்கத்தில் நகைகள் கிடக்கக் கண்டு அவனே திருடனென்று நிச்சயித்து அரசன் முன் கொண்டுபோய் விட்டார்கள். பார்த்த அரசன் அவனை மாறுகால் மாறுகையை வாங்கி விடுங்களென்று கட்டளையிட்டான். ஏவலாளிகள் அவ்வாறே நிறைவேற்றினர்.

தண்டனையடையப்பெற்ற அரசன் தன்னுடைய விதியை நினைந்து புலம்பிக் கொண்டிருக்கையில், தர்மசிந்தையுள்ளவனாகிய அவ்வூர்ச்செட்டி ஒருவன் நிகழ்ந்த செய்தியையறிந்து அரசனைத் தன் வீட்டுக்குக் கொணர்ந்து வேண்டிய சிகிச்சைகளையெல்லாம் செய்து கொண்டு வந்தான்.

சிலநாட் சென்றபின் ஒருநாள் முடவனாகிய அரசன் செட்டி வீட்டின் உப்பரிகையின் மீதிருந்து, இரவு வேளையில் தென்றல் வீசும்பொழுது இனிய கீதங்களைப் பாடினான். அப்பாட்டை அவ்வூரரசன் மகள் புஷ்பாஞ்சலி என்பவள் தனது கன்னியாமடத்தின்மீது இருந்து மிகவும் ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள், சங்கீதத்தில் மிகவும் திற



மைவாய்ந்தவள். தன்னோடு பாடவந்த அநேக சங்கீத வித்வான்களைத் தோற்கடித்தவள். அத்தகையாள் புரூரவனது கானத்தில் மெய்ம்மறந்து போனாள். சிறிது நேரங் கழித்துப் பார்க்கையில் தான் அணிந்திருந்த சுட்டியில் விளங்கும் பச்சை ரத்தினம் இசையின் இனிமையால் உருகிக் கீழே விழுவதையும் கண்டனள். பார்த்ததும் "இவ்வளவு இனிமையாய்ப் பாடக் கூடியவர் இவ்வரசுக்குட்பட்ட தேசத்தில இல்லையே! பின்னர் அவர் யாவராயிருக்கலாம்?" என்று ஆலோசித்துத் தாதியரை ஏவி அறிந்துவரும்படி செய்தனள். சேடியர் அவ்வாறேபோய் விடயத்தை அறிந்து வந்து, புஷ்பாஞ்சலியை நோக்கி, "அம்மா! நமது தண்மனையில் நகை திருடினதற்காகக் கையுங்காலுங்குறைக்கப்பட்டிருக்கும் முடவனே இவ்வாறு பாடினவன்;" என்றார்கள். அதைக் கேட்ட அரசகுமாரி, "அவன் யாராயிருந்தாலும் சரி. நான் அவனுக்கே மாலையிடுவேன்." என்று கூறினள். தாதியர் இச்செய்தியை அரசனுக்கறிவித்தனர். அரசன் தன் மகளுக்குச் சுயம்வரமேற்படுத்தி எல்லாத் தேசத்து அரசர்களையும் வரவழைத்தனன். சுயம்வர மண்டபத்துக்கு, முடவனாகிய புரூரவனும் வந்து சேர்ந்தான், புஷ்பாஞ்சலி மாலையைக் கையிலெடுத்துக்கொண்டு சபையிற் பிரவேசித்து, அங்கு வந்திருந்த அரசர்கள் அனைவரையும் பார்த்து இவர்கள் எல்லாம் முன்னொருதரம், என்னுடன் சங்கீதத்தில் தோற்று ஓடினவர்களல்லவா?" என்று கூறி, மாலையை முடவன்கழுத்தில் இட்டனள். இதைக்கண்ட அரசனும் அரசியும் மிகுந்த கவலை கொள்ளவே, அருகிலிருந்த பெரியோர் தேற்றினர்.

உடனே அரசன் மகள் தாய்தந்தையர்களை நோக்கி "பெற்றோர்களே, "என் பொருட்டு நீங்கள் அவமானமடையவேண்டாம்." என்று சொல்லி தன் ஆடையாபரணங்களை யெல்லாம் கழற்றி வைத்துவிட்டு ஒரு கந்தையை யுடுத்துக்கொண்டு கணவனை முதுகின்மேற் சுமந்துகொண்டு காட்டுக்குப் போயினள்; கானகஞ்சென்று கணவன் பணிவிடைகளைக் குறைவற இயற்றிவந்தனள். இவளது கற்புடைமைக்கு உவந்த மும்மூர்த்திகளும் தம்பதிகளுக்குக் காட்சிதந்து, வெட்டுண்ட கால்கைகள் வளரும்படியாகவும் அவ்விடத்தில் ஒரு மாளிகை உண்டாகவும் அருளி அவர்களுக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் குறைவற இருக்கும்படியும் ஆசிர்வதித்துச் சென்றார்கள். தம்பதிகள் ஒருகுறைவுமில்லாமல் வாழ்ந்து வருவதைப் புஷ்பாங்கியின் தந்தை கேள்விப்பட்டு, அவ்விடஞ்சென்று தனது மகளையும் மருமகனையும் வாழ்த்திப் போனான். இவ்வாறவர்கள் அங்கிருக்கையில் அதைச் சுற்றிலும் ஜனங்கள் குடியேற ஆரம்பித்து அவ்விடத்தில் ஒரு பட்டணமுண்டாயிற்று. அப்பட்டணத்தை இவன் ஆட்சிபுரிந்து வருகையில் இடைச்சியால் வளர்க்கப்பட்ட அவனது இருகுமாரர்களும் அங்கே வந்து சேர்ந்தனர். அரசன் அவர்களைக்கண்டு அடங்கா மகிழ்ச்சியெய்தினான். பிறகு தூதர்களை விட்டுப் பழைய செட்டியைக் கொண்டுவரச் செய்து தன் முதல் மனைவியைப்பற்றி விசாரிக்க, செட்டி பயப்பட்டுப் பெட்டியைக்கொண்டுவந்து அரசன் முன் வைத்தான். அரசன் தொட்ட அளவில் பெட்டி திறந்தது. உடனே ஜயபாலை வெளிவந்தாள். அரசன் சந்தோஷப்பட்டுத் தானு



னும் மனைவியருடனும் மக்களுடனும், தனது சொந்த ஊர்போய்ச் சேர்ந்து, வெகுகாலம் வாழ்ந்திருந்தான்.

**கற்புடையவளே கஷ்டத்தைத் தீர்ப்பவள்.**

## 6. சந்திரவதனை சரித்திரம்.

காசிதேசத் தரசனாகிய சந்திரசேகரனென்பவனுக்கு சந்திரவதனை என்னும் ஒருபுத்திரி இருந்தாள். அவள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, அழகிலும் அறிவிலும் மிக்கவளானாள். அறிவு மிகுந்த அக்கன்னி இவ்வுலக வாழ்க்கை நிலையற்றதென்றும் செல்வம் சகடக்கால் போன்றதென்றும் உணர்ந்தவளாய் நிலையான மோக்ஷ சாம்ராஜ்யத்தை யடைவதற்குரிய வழிகள் எவை என்பதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் பிருகு என்னும் முனிவர் அம்மங்கையின் கன்னியாமாடத்துக்கு வந்து சேர்ந்தார். வந்தவருக்கு விதிப்படி மரியாதை செய்து ஆசனத்திலிருத்திப் பற்பல முகமன் கூறினாள். உபசாரங்களைப் பெற்ற முனிவர், உள்ளமுவந்தவராய்ச் சந்திரவதனையை நோக்கி, "பெண்ணே, "உனக்கிஷ்டமான எந்த வரத்தையாவது நீ கேட்பாயாகில் யான் கொடுக்கிறேன்." என்று திருவாய்மலர்ந்தருளினார். உடனே சந்திரவதனை முனிவரை நோக்கி, "தபோநிதியே, அறம் பொருள் இன்பம் வீடு என்கிற நான்கு உறுதிப் பொ ள்களில் மேலானதாகிய வீட்டை அடைவதற்குச் சய்யவேண்டிய முயற்சிகள் யாவை? அவற்றை என

க்கு உபதேசித்தருளல் வேண்டும். இதுவே யான் கேட்கும் வரம்'' என்றனள்.

முனிவர், "நங்காய்! உலகத்தில் மோக்ஷ மார்க்கமானது, பலபேருக்குப் பலவிதமா யேற்பட்டிருக்கிறது. சிலர் பலாபேட்சையின்றிக் கர்மங்களைச் செய்து பகவதர்ப்பணம் செய்வதாலும், சிலர் பகவானிடத்தில் பக்தி பண்ணுவதனாலும், சிலர் ஞானத்தினால் தத்துவங்களை உள்ளபடி யுணர்ந்து யோகாப்யாசத்தினால் பகவத் ஸாக்ஷாத்காரம் செய்வதினாலும் சிலர் பகவானுடைய திருவடிகளில் சரணாகதி செய்வதனாலும் மோக்ஷ சாம்ராஜ்யத்தை அடைகிறார். ஆனால் மேற்சொன்னவைகளெல்லாம் ஆடவருக்கே யாம். ஸ்திரீகள் மோட்சமடைய ஒரே வழிதானுண்டு. அதாவது, தனது கணவனைக் காட்டிலும் தெய்வமில்லை யென்றும் அவனுக்குச் செய்யும் பணிவிடையைப் பார்க்கிலும் தவம் வேறில்லை யென்றும் மனதிற் கொண்டு, அவ்வாறே செய்கையிலும் நிகழ்த்துவதாகும்'' என்று கூறிச் சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் தமதாச்சிரமம் சென்றனர்.

சில நாள் கழிந்தபின் சந்திரசேகரராஜன் சுயம்வரம் ஏற்படுத்த, பல அரசர்கள் வந்து கூடினர். சந்திரவதனை தான் கேட்ட கேள்விகளுக்கு விடை பகர்ந்தவனாகிய தெலுங்கு தேசத்தரசன் மகன் விந்தாக்கியனுக்கு மாலையிட்டனள். பிறகு அக்னி சாட்சியாக இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. சந்திரவதனை கணவனையே கடவுளெனப் பாவித்து அவன் மனதுக்குகந்தவாறு பற்பல பணிவிடைகளை இயற்றி



வந்தனள். சில நாட் சென்ற பின் விந்தாக்கியன் தன்னூருக்குச் செல்ல விரும்பித் தனது முதல் மனைவியாகிய சித்திராங்கதையுடனும் சந்திரவதனையுடனும் பற்பல பரிவாரங்கள் சூழப் புறப்பட்டுப் பிரயாணமாயினன். பிரயாணத்தில் சிலநாட் செல்லவே, ஒரு நாள் ஓரிடத்தில் இரவு வேளையிற் றங்கியிருந்தபோது ஆகாயமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருந்த தேவதாசியரிற் சிலர், சந்திரவதனையைக்கண்டு "இவ்வளவு அழகுடைய பெண் பூவுலகிலிருக்கிறாளா! என்று ஆச்சரியப்பட்டு இவளுடைய அழகை அழியச் செய்யவேண்டுமென்று மனதிலெண்ணி விந்தாக்கியனை ஒரு பறவை வடிவமாக்கிக்கொண்டு போய்த் தங்களுலகம் சேர்ந்து, இரவில் மனிதனாக்கித் தங்கள் புருஷனெனக் கொண்டும் பகலில் முன்போலவே பறவையாக ஆக்கியும் வைத்திருந்தார்கள். இதனைக் கண்ட அரசன் அளவிலாத் துக்கமடைந்தானாயினும் தன்னாற் செய்யக்கூடியது ஒன்றுமின்மையின் வாளாவிருந்தான்.

இவ்விடத்தில் மனைவியர்களிருவரும் விழித்துப் பார்க்கத் தங்கள் கணவனைக் காணாமையால் மிகுந்த துக்கமுற்று மூன்றுநாள் வரையும் காத்திருந்தும் அவன் வரவில்லை. அதனால் சித்திராங்கதை சந்திரவதனையை நோக்கி, "தங்கையே! இதோ அருகில் சிறிது தூரத்திலேயே எனது தந்தையின் நகரம் இருக்கின்றது. நாம் அங்கு போய்ச் சேர்ந்து தூதர்களை விட்டு நமது கணவனைத் தேடலாம். அல்லது ஆந்திர தேசத்திற்குச் செய்தி சொல்லி அனுப்பலாம். ஆகையால் அங்கே போய்ச் சேருவோம்வா'' என்றனள். அதுகேட்ட சந்திரவதனை, "அக்கா! நமதணை

வர் இங்கில்லாத தருணத்தில் அவருடைய உத்திரவின்றி நாமாக வேற்றிடத்திற்குப் போவது உசிதமானதன்று. கற்புடையவளால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. ஆகையால் இங்கிருந்தே நமது கணவனை வரவழைக்கிறேன்பார்." என்று கூறித் தன் கணவனது திருவடிகளை மனதிற் றியானித்துக் கொண்டு யோகத்தில் அமர்ந்தனள். உடனே அவளிடமிருந்து பொங்கி யெழுந்ததாகிய பதிவிரதாக்கினியானது தேவலோகத்திற்போய் இந்திரனுட்பட எல்லாரையும் தகிக்கத் தொடங்கிற்று. அதனைப் பொறுக்கமாட்டாத தேவேந்திரன் நடந்த செய்தியை ஞான திருஷ்டியா லறிந்து, தேவதாசிகளுக்குத் தக்க தண்டனை விதித்து, விந்தாக்கியனைக் கொண்டு வந்து சந்திரவதனையிடம் விட்டு விட்டுத் தண்டனிட்டுத் தேவலோகம் போய்ச் சேர்ந்தான். பிறகு சந்திரவதனை தனது கணவனுடனும் சக்களத்தியுடனும் கணவனது நாட்டை அடைந்து, வெகுகாலம் வாழ்ந்திருந்தாள்.

கற்புடையவட்குக் கணவனே தெய்வம்.

## 7. நளாயணி சரித்திரம்.

நளன் என்னும் அரசனுடைய புத்திரியாகிய நளாயணி என்பவள் ரூபத்திலும் குணத்திலும் மிகுந்தவளாய் இருந்தனள். ஒருக்கால் அவ்வரசனது சபைக்கு மௌத்கல்லியர் என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் வந்தார். வந்த முனிவரைத் தக்கபடி உபசரித்து அரசன் அவர் வந்த காரியம் என்னவென்று விசாரித்தான். முனிவர், "அரசே நம்முடைய புத்திரி



யாகிய நளாயணியை எனக்கு விவாகஞ் செய்து கொடுக்க வேண்டும். யான் வந்த காரியம் இதுவே" என்றனர். முனிவரது முதிர்ந்த வயதையும் கோரரூபத்தையும் பார்த்து யோசித்து முனிவரைப் பார்த்து, "சுவாமி, தேவரீர் அந்தப்புரத்துக்குப் போய், என் மகளை நேரிற்கண்டு சம்மதிக்கச் செய்து, அவள் சம்மதித்ததற் கடையாளமாக அவளுடைய முத்திரை மோதிரத்தை வாங்கி வந்தீராகில் தடையின்றித் தமதிஷ்டப்படியே செய்கிறேன் என்று சொல்லினன்." முனிவர் அவ்வாறே ஒப்புக்கொண்டு அந்தப்புரத்திற்குப் போனார். போகும் வழியில் தமது தபோமகிமையால் மன்மதனையும் வெல்லத்தக்க அழகிய உருவமெடுத்துக் கொண்டு போனார். இவரைப் பார்த்த மாத்திரத்தில் ராஜகன்னிகை மோகித்து, "நீர் யார்! எங்கே வந்தீர்?" என்று வினவினள். உடனே அவர் தனக்கவளிடத்தி லிருக்கிற ஆசை வெளிப்படும்படி, "பொற்கொடிபோன்றவளே! உன்னை விவாகஞ்செய்து கொள்ள வேண்டி உன் பிதாவிடம்வந்து கேட்டேன். அதற்கவர் நீசம்மதித்தால், அப்படியே செய்கிறேன்" என்று சொன்னார். நீ என்மேற் பிரியமுடையவளானால் உன் முத்திரை மோதிரத்தைக் கொடு. அதைக் கொண்டு போய் உன் தந்தைக்குக் காட்டி உன்னை விவாகஞ் செய்து கொள்ளுகிறேன்" என்று கூறினர். உடனே, அப்பெண் யாதொரு தடையும் சொல்லாமல் தன் மோதிரத்தைக் கழற்றி முனிவர் கையிற் கொடுத்திட்டனள். மோதிரத்தை வாங்கிக்கொண்டு வெளி வந்த முனிவர் முன்போல் கோரரூபத்தை யெடுத்துக்

கொண்டு அரசன் முன்னே சென்று மோதிரத்தைக் கொடுத்தார். அதைப் பார்த்தவுடன் அரசன் தன் மகளையழைத்து, "பெண்ணே, நீ இஷ்டப்பட்டு மோதிரத்தைக் கொடுத்தனுப்பிய புருஷன் இதோ இருக்கிறார். இவருக்கே உன்னை விவாகம் செய்து வைக்கப்போகிறேன்" என்று சொன்னான். பார்த்தநளாயனி, 'நான் மோதிரங்கொடுத்தது இவரிடமல்லவே' என்று கூறினள். அரசன் "இவரைத் தான் நான் அந்தப்புரத்துக்கு அனுப்பினேன். இவர் தான் என்னிடம் மோதிரத்தைக் கொடுத்தவர். ஆகையால் அவருக்கே யுன்னை விவாகஞ் செய்யவேண்டியது நியாயம்" என்று கூறினன். கேட்ட கன்னி, இதிலேதோ மர்மமிருக்கிறது. ஆகையால் நாம் உடன்படுவதே சரியென்று உடன்பட்டனள். பின்பு அவர்களிருவருக்கும் விவாகமாயிற்று. கொஞ்ச நாள் சென்றதும் முனிவர் அவளைப் பார்த்து "பெண்ணே! நீ என்னுடன் கூடவர விரும்புகிறாயா! அல்லது உன் தகப்பன் வீட்டிலேயே யிருக்க விரும்புகிறாயா?" என்று கேட்டார். அதற்கு அவள், "தேவரீருடன் வருவதற்கே சித்தமாயிருக்கிறேன்" என்று சொல்லினள். அப்போது முனிவர், "பெண்ணே! நான் ஆரணியத்தில் தவஞ்செய்யப்போகிறேன். அங்கே நல்ல உணவு கிடைக்கமாட்டாது. காய்கிழங்குகளைத்தான் உண்ணவேண்டும். திவ்வியவாத்தியங்களின் ஒலியில்லை; பயங்கரமான மிருகங்களின் ஒலியைத் தான் கேட்கவேண்டும். உயர்ந்த பட்டாடைகளில்லை; மரவுரியைத் தான் உடுக்கவேண்டும். மாடமாளிகைகளில்லை. தழைகளாற் கட்டப்பட்ட குடிசைதான் உண்டு. வேளையில் உணவு கிடைக்காது.



மத்தியானத்துக்குமேல் கொஞ்சம் புல்லரிசிக் கஞ்சிதான் கிடைக்கும். இராவிலதுவுங் கிடைக்காது. தவிர என்னுடைய நித்திய கர்மானுஷ்டானங்களுக்கும் தேவபூஜை, அக்னிஹோத்ரம் முதலானவைகளுக்கும், செய்யவேண்டிய உபசாரங்களால் நீ மிக்க களைப்படைந்து விடுவாய். இரவிலும் சில சமயத்தில் நித்திரையற்றிருக்கும்படி நேரிம். நானோ கிழவன்; தவசி; ஒருவேளை புசிக்கிறவன். உனக்கு என்னால் சுகம் சிறிதும் கிட்டாது. இதுவுமல்லாமல் நினைத்தபோது எங்கே வேனுமானாலும் போய்விடுவேன். அநேக நாள் ஆகார நித்திரையில்லாமலிருப்பேன். நீயும் அவ்வாறிருக்கும்படி நேரிடும். இவ்வாறு அதிக துக்கத்துக்குக் காரணமாயிருக்கப்பட்ட வனவாசம், மிக விநோதங்களுடன் கூடிய நகரத்தில் எழுநிலை உப்பரிகையின் மீது பஞ்சணைமீதிருந்து பாங்கியர் பாற்சோறூண்பிக்க உண்டு குழலும் யாழும் மிளிற்றும் இசையைக் கேட்டுக் களிக்கிற உனக்குச் சிறிதும் தகுதியுடையதன்று. ஆகையால் உன்னால் எவ்வாறு என்னுடன்வரமுடியும்" என்றுகூறினர். அதுகேட்டநளாயனி "சுவாமி, பெண்களுக்குப் புருஷனேதெய்வம். அவனுடன் கூடியிருப்பதே சகலவிதமான போகமும். புருஷனோடு சேர்ந்து வாழாத பெண் பிறந்த வீட்டில் எவ்வளவு போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாலும் அவையெல்லாம் பிணம் அனுபவிக்கும் போகத்துக்குச் சமானம். கணவனுடனே நரகிற்புகுந்தாலும் அதுவே சுவர்க்கமாகும். அவனில்லாமல் சுவர்க்கம்புகுந்தாலும் அதுவே நரகமாகும். முன்னம் இராமன் பின்னே சீதை, வனத்திற்குச் சென்றாள். நளனு—டனே

தமயந்தி சென்றாள். அரிச்சந்திரனுடன் சந்திரமதி சென்றாள். இன்னும் அநேக பதிவிரதைகள் தங்கள் பதிகளுடன் எவ்வளவோ துன்பத்தை அநுபவித்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் அறிந்த நான் தேவரீருடன் வனத்துக்கு வருவேனேயல்லது, இவ்விடத்திலிருக்கச் சம்மதியேன்'' என்று கூறினாள்.

இவ்வாறு அவள் சொன்னதைக் கேட்டுச் சந்தோஷமடைந்த முனிவர், அவளை நோக்கி, பெண்ணே! உனது ஆடையாபரணங்களைக் கழற்றிவைத்துவிட்டு மரவுரியை எடுத்துத் தரித்துக்கொள்.'' என்று ஆக்ஞாபித்தார். அவ்வாறே மரவுரியை நளாயனி தரித்துக் கொண்டாள்.

பிறகு முனிவர், தமது மனைவியை அழைத்துக் கொண்டு கங்கைக் கரையை அடைந்து தவஞ்செய்ய ஆரம்பித்தார். கற்புக்கரசியாகிய நளாயனியும் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைத் தவறாது நாள்தோறும் செய்து வந்தாள். முனிவர் அவளை இன்னும் பலமாய்ப் பரிசோதிக்க எண்ணங்கொண்டு அவளோடு ஒரு நாளாவது உல்லாசமாய்ப் பேசாததுமன்றி தமது கிழத்தன்மையால் விகாரமுற்றிருந்த தேகத்தில் பெரு வியாதியையும் வருவித்துக் கொண்டார்.

சிறிதுகாலத்திற்கெல்லாம் அவரது உடம்புபெரு வியாதியினால் அழுகி ஒரு பக்கத்தில் புழுக்கள் உதிர ஆரம்பித்தன. துர்க்கந்தமும் வீசத் தொடங்கிற்று; அப்பொழுதும் அவள் சிறிதும் அருவருப்புக் கொள்ளாமல் தன்கையினால் அவரைக் குளிப்பாட்டுகிறதும்



புழுக்களை யெல்லாம் ஒவ்வொன்றாய் எடுத்து அப்பாற் கொண்டுபோய்ப் போடுகிறதும், சீழ் முதலியவற்றைத் தன் வஸ்திரத்தால் துடைக்கிறதும் அவர் உண்டு மிகுந்த எச்சிலை அமிர்தமாக நினைத்து உண்கிறதும் அவர் பாத முதலிய உறுப்புகளை வருத்தந்தீரப் பிடிக்கிறதுமாகப் பலவித பணிவிடைகளைச் செய்துவந்தாள்.

ஒருநாள் அவர் உண்ணும்பொழுது உணவைக் கக்கிவிட்டது மல்லாமல் அதில் தமது பெருவிரலற்று விழும்படியாகவும் செய்தார். அன்றையதினம் அவள் புழுக்களோடு சீழ் வடிந்து கொண்டிருக்கிற அவ்விரலை அப்பால் எடுத்து வைத்துவிட்டு, மிகுதியான அன்னத்தை அருவருக்காமல் உண்டாள். முனிவர் இவற்றையெல்லாம் பார்த்து மனதில் மிக்க ஆனந்த மடைந்தவரா யிருந்தாலும் இன்னமும் பார்ப்போமென்று, வெளிக்கு அப்பெண்ணைத் திட்டுகிறதும் அடிக்கிறதும் உதைக்கிறதுமா யிருந்தார். அப்படியும் அப்பெண் கொஞ்சமும் மனங்கோணாமல் மிகவும் பிரியத்துடன் அவருக்கு உபசாரணை செய்து கொண்டிருந்தாள்.

இவ்வாறு நடந்து வருகிற பொழுது ஒரு நாள் அவர் தன் மனைவியைக் கூப்பிட்டு, "பெண்ணே! நான் உன்னை விவாகம் செய்து கொள்வதற்கு முன் ஒரு வியாதியுமில்லாம லிருந்தேன். துர்ப்பாக்கிய வதியான உன்னைக் கலியாணஞ் செய்துகொண்ட பிறகு இக்கொடிய வியாதிக்குள்ளானேன். நினைத்தபோது தீர்த்தங்களுக்கும் க்ஷேத்திரங்களுக்கும் போகக்கூடாமையா யிருக்கிறது. என்ன செய்வேன்! என் தலைவிதி

இப்படி முடிந்தது! அடி பாவி, உன்னைத் தெரியாமல் விவாகஞ்செய்துகொண்டேனே" என்று கூறித் தாரை தாரையாய்க் கண்ணீர் பெருக்கினார்.

அப்போது நளாயனி, அவரை நோக்கி, "சுவாமி நான் கொடிய பாவிதான். இந்த வியாதிக்கு மாத்திரம் நானொன்றும் செய்ய முடியாமற் போனபோதிலும் மற்றென்னாலாகிய பணிவிடைக் கொன்றும் குறைவில்லாமற் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். தயைசெய்து தேவரீருக் கெவ்விடத்துக்குப் போகமனமிருக்கிறதோ அதை அடியாளுக்குத்தெரிவித்தால் அவ்விடத்திற்குக் கொண்டுபோய் விடுகிறேன். தேவரீருக் குதவாத என் தேகமும் உயிரும் இருந்தென்ன பிரயோசனம்? ஆகையால் கட்டளையிட்டருள வேண்டும்" என்று வணக்கமாய்க்கேட்டுக்கொண்டாள்.

அதற்கவர், "பெண்ணே! என்னை ஒவ்வொரு புண்ணிய தீர்த்தங்களுக்கும் கொண்டுபோய் ஸ்நானம் செய்துவை" என்றார். அப்படியே அந்தப்பெண்ணானவள் அவரை ஒரு கூடையில் வைத்துத் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்டு தீர்த்தயாத்திரை போகும்போது ஒரு பட்டணத்தில் தங்கினாள்.

அப்போது முனிவர் அவளை நோக்கி, "நானொரு பொருள்மீது ஆவல்கொண்டேன். ஆகிலும் அது எனக்குக் கிடைப்பதரிது," என்று விசனப்பட்டார். அதைக்கேட்ட நளாயனி, "சுவாமி, அதென்னவென்று எனக்குத் தெரிவித்தால் என்ன கஷ்டப்பட்டாவது கொண்டுவந்து கொடுக்கிறேன், என்று சொன்னாள்."



முனி அதை நான் உன்னிடம் சொல்வேனாகில் உன் மனதுக்கு மிக வருத்தமாயிருக்கும். என் காரியமும் நிறைவேறாது" என்று சொன்னார். அக்கற்புடையாள், சுவாமி தேவரீர் மனதுக்குகந்தவெல்லாம் எனக்கும் பிரியமானதாகவே யிருக்கும். ஆகையால் தயவுசெய்து சொல்லவேண்டும்." என்று மன்றாடினாள்.

உடனே அவர் அவளைப் பார்த்து "பெண்ணே இப்பட்டணத்துக் கீழண்டை வீதியில் வேசியொருத்தி யிருக்கிறாள்; அவள் ரம்பையோ, ஊர்வசியோ, ரதியோ என்று சந்தேகப்படத்தக்கவளா யிருக்கிறாள். அவளைப் பார்த்து ஆசை கொண்டேன். விசாரித்ததில் அவள் ஒரு ராத்திரிக்கு நூறு பொன் வாங்குகிறாளாம். எனக்கோ பொன்னில்லை. என்று மிகுந்த வருத்தத்துடன் சொன்னார்."

அதைக் கேட்ட நளாயனி, சுவாமி என்னால் கூடிய பிரயாசைப்பட்டு தேவரீரது கருத்தை முடிக்கிறேன் என்று கூறினள். பிறகு, அவள நாள்தோறும் அதிகாலையிலெழுந்து அந்த தாசி வீட்டுக்குப் போய் அவள் வீட்டு வாசற்படியை நன்றாக மெழுகிக் கோலமிட்டு வாசலெல்லாம் பெருக்கிச் சுத்தம் செய்துவிட்டு வந்துவிடுவாள். இப்படிச் சில நாள் செய்து வருகையில் தாசியின் வேலைக்காரிகள் தங்களுடைய வேலையை யாரோ செய்து போகிறார்களென்று தாசிக்குத் தெரிவித்தார்கள். அவளும் ஆச்சரியப்பட்டு இதைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று விழித்திருந்து பார்த்திருந்தாள். மறுநாள் இவள் போய் வேலை செய்ய ஆரம்பிக்கும் பொழுது தாசி வந்து,

அம்மா, 'நீயார்? மகா லட்சுமிபோலிருக்கிறாய். என்ன காரணத்தால் இவ்வேலை செய்கிறாய்? என் வீட்டுக்கு நீ பணி செய்யத்தகுமா?'' என்றுகேட்டாள். அதற்கு நளாயனி, நீ என்னிடத்தில் அன்புவைத்து வினவுவதுபோலவே யான் கேட்கும் காரியத்தையும் முடித்துக்கொடுப்பாயானால் சொல்லுகிறேன். இல்லாவிடிற் சொல்லிப் பயனென்ன? என்று கூறினள். அதற்கு விலைமாது, ''அம்மா, என்னால் முடியக்கூடிய காரியத்தைத் தடையின்றிச்செய்கிறேன்.'' என்றுசொன்னாள்.

முனிவர் மனைவி அவளைநோக்கி, ''கணிகையே! எனது கணவர் சகல கலைகளையுமுணர்ந்தவர்; தபோநிதி; மகாநுபாவர்: அவருக்குச் சிலகாலமாய் நான் செய்த தீவினையினால் குஷ்டநோய் சம்பவித்தது. அவர் தீர்த்தயாத்திரையின் பொருட்டு இவ்வூர் வந்து சேர்ந்திருக்கிறார். உன்னைக்கண்டு மையல்கொண்டு உழல்கிறார்.'' அவரது மையலைத் தீர்க்கவேண்டும். இதுவே எனது கோரிக்கை. என்று கூறினள். உடனே விலைமாது, ''நல்லது அவரையழைத்துக்கொண்டுவா'' என்றனள். அதைக்கேட்ட நளாயனி சந்தோஷத்துடன் விரைவாகச்சென்று இச்செய்தியைக் கணவனுக்கறிவித்து அவரைக்கூடையில்வைத்து எடுத்துக்கொண்டு தாசிவீட்டில் கொண்டுவந்து விட்டாள். உடனே அவர் தனது மனைவியை நோக்கி ''பெண்ணே! நீ அப்பாற் போய்விடு; நான் கூப்பிடும்பொழுது வரலாம்.'' என்று கூறிக் கதவைத்தாளிட்டு மன்மத வடிவமெடுத்துக் கொண்டார்

அவரைக்கண்ட தாசி, மன்மதனே என்று பிர



மித்து ஓடிவந்து ஆலிங்கனம் செய்துகொண்டு சகல உபசாரங்களும் செய்து உபசரித்தாள்.

பிறகு, விடியற் காலத்தில் முனிவர் முன்போல உருவந்தாங்கிக் கூடையுள் உட்கார்ந்து மனைவியைக் கூப்பிட்டனர். உடனே நளாயனி ஓடிவந்து கூடையைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு போனாள். அப்பொழுது இருட்டானதால் வழிதெரியாமல் அலைந்துகொண்டிருக்கையில், அங்கோரிடத்தில் அரசனது கட்டளையால் கழுவேற்றப்பட்டு உயிரிழக்காமல் தொங்கிக்கொண்டிருக்கும் மாண்டவியர் என்னும் ரிஷியின்மீது கூடையானது பட்டது. அதனால் அவர் அதிக துன்பமுற்று இவளாரோ பெண்ணென்றறிந்து; ''பொழுது விடிந்தவுடனே நீ மாங்கல்யம் இழக்கக்கடவாய்.'' என்றுசபித்தனர். அதைக்கேட்ட இவள், ''இவர் ஒரு ரிஷிபோலிருக்கிறது''. என்றெண்ணி, ''பொழுது விடியாமற் போகக்கடவது!'' என்று சாபமிட்டாள். இவளது கற்பின் மகிமையால் அவ்வாறே எட்டுநாள் பொழுது விடியாமலிருந்தது. அதைக்கண்ட தேவர்கள் மாண்டவ்யரிடம் சென்று முறையிட அவர் நளாயினியிடம் போகும்படி சொன்னார். தேவர்கள் நளாயினியை வந்துவேண்ட, ''அவன் முனிவர் தமது சாபத்தை மாற்றினால் யானும் எனது சாபத்தை மாற்றுகிறேன்'' என்று கூறினள். உடனே எல்லாருமாய்ப்போய் மாண்டவ்யரிடம் சொல்ல, அவர் தாமிட்ட சாபத்தை மாற்றினார். நளாயனி தானிட்டசாபத்தையும் மாற்றினாள். உடனே பொழுது விடிந்தது.

இத்தகைய கற்புடையமாதின் தன்மையைக் கண்டு மௌத்கல்லிய முனிவர் மிகவும் சந்தோஷமடைந்து தமது மனைவியைப் பார்த்து, உனது பணிவிடைகளுக்கு மிகவும் மனமுவந்தேன். உனக்கு வேண்டிய வரத்தைக்கேளென்று சொன்னார். அதற்கு, அவள், "சுவாமி தேவரீரிஷ்டப்பட்டது எதுவோ அதையே எனக்கு வரமாகத் தந்திடுக" என்றனள். பிறகு அம்முனி, தமது மன்மத சமானமான ரூபத்துடன் அநேககாலம் அவளுடன் வாழ்ந்து அவளுடைய இச்சையை எல்லாவழியாலும் பூர்த்திசெய்து வைத்தார். தான்பட்ட கஷ்டங்களுக்கு, ஆயிரமடங்கதிகமான எல்லாச் சுகங்களையும் வெகுகாலம் அநுபவித்து, நளாயனி முடிவில் புருஷனுடன் நற்கதியையும் அடைந்தாள்.

கஷ்டமடைந்தும் கணவனைப் போற்றுபவளே கற்புடையாள்.

## 8. சுமதிசரித்திரம்.

அதிஷ்டான புரமென்னும் பட்டணத்தில் வாழ்பவனாகிய கௌசிகன் என்னும் பிராமணன் அழகும் குணமுமே ஓர் உருவெடுத்து வந்ததுபோன்ற சுமதி என்னும் கன்னிகையை மணஞ்செய்து கொண்டான். அவளைக்கல்யாணம் செய்துகொண்டது முதல் ஒருநாளாவது அவளுடன் இன்பமாய்ப்பேசாமலும் கூடிவாழாமலும் பரத்தையின் வீட்டே கதியெனக் கிடந்தான். ஒரு நாள் அவன் தனது தந்தைக்கு



சிராத்தம் செய்து; அது முடிந்தவுடன் புசிக்காமலேயே வேசி வீட்டுக்குப் போக ஆரம்பித்து மனைவியைநோக்கி, "அடியே, இன்று இரவு ஜாமநாழிகைக்குப் பிறகு இரண்டு பேருக்குப் போதுமான பலகாரவர்க்கங்களை எடுத்துக்கொண்டு தாசிவீட்டுக்குவா" எனக் கட்டளையிட்டான்.

சுமதியும் கணவன் கட்டளைப்படியே ஒரு தட்டு நிறையப் பலகாரங்களை எடுத்துக்கொண்டு இரவு ஜாமத்துக்குமேல் தாசிவீடு சென்றாள். சென்று தட்டையவன் முன்னே வைத்தாள். அதையவன் எடுத்துக்கொண்டு தாசியும் தானும் விநோதமாகப் புசித்துக் கடைசியில் அந்தத் தட்டினாலேயே மனைவியை நன்றாகப்புடைத்து! "சீசி, நாயே! நான் இருவருக்குப் பலகாரம் கொண்டுவரும்படி சொல்லியிருக்கையில் நீஏன் குறைவாய்க் கொண்டுவந்தாய்?" என்று பலவாறு திட்டினான்.

அதற்கந்த சுமதியானவன் சிறிதும் விசனமடையாமல் நமது வினையின் பயனாகும் இது என்றெண்ணி வீட்டிற்குவந்து கொண்டிருந்தாள். வழியில் ஓர் பெரியபாம்பு படமெடுத்துக்கொண்டு சீறிவந்தது. அதைக்கண்டு, இதனால் கடிக்கப்பட்டாகிலும் உயிரை இழக்கலாம் என்றெண்ணி அதைக் கையில் எடுக்க முயன்றாள்.

அப்பாம்பு கையிலகப்படாமல் விசையாய் ஓட முயன்றது. இவள் விடாமல்போய்த் தீண்டினவுடனே பாம்பு தர்மதேவதை உருவந்தாங்கி, "பதிவிரதாசிரோமணியே? நீவேண்டுவதுயாது?" என்று கூறி

ற்று. அதற்குச் சுமதி, "ஓதேவனே! பிறவித்துன்பங்களினின்றும் நீங்கி மோட்சமடைய அநுஷ்டிக்க வேண்டிய செய்கை என்ன? அதை எனக்கு உபதேசிக்கவேண்டும்" என்று கேட்டனள். உடனே தேவதையானது "தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்-பெய்யெனப் பெய்யுமழை" என்பது பொய்யாமொழி. அம்மொழியின்படி கணவனையே தெய்வமாக மதித்து அவனுக்குச் செய்புந்தொண்டையே தவமாகவும், கணவனிடத்தில் நீங்காப்பிரியமும் நாயகன் குணங்களை கீர்த்தனைகளும் நாயகன் திருவடிகளில் இடைவிடத்தியானமும்; ஆகிய இவைகளைச் செய்வதே ஸ்திரீகளுக்கு மோட்ச ஏதுவாகும் என்று கூறி மறைந்து விட்டது.

தர்மதேவதையின் உபதேசங்களைக்கேட்ட சுமதிதேவியானவள் அவ்வாறே செய்துவந்தாள். சிலநாள் சென்ற. பிறகு, அவள் புருஷன் தன் பொருள்களையெல்லாம் தாசிக்கு அர்ப்பணம் செய்துவிட்டதனால் கையில் பொருளில்லாமல் தாசியால் துரத்தப்பட்டு ஜீவனத்துக்கு மார்க்கமின்றி மிக விசனமடைந்தான். அதைக்கண்ட சுமதி விஷயம் யாதென வினவினாள். அதற்கு அவன் கஷ்டமுண்டையே உன்னாலேயெல்லாம், தானமென்றும் தருமமென்றும் பிச்சையென்றும் என் செல்வத்தையெல்லாம் அழித்து விட்டையே! இனி இங்கே ஜீவனத்துக்கு மார்க்கம் ஒன்றும் கிடையாது. "நான் தேசாந்தரம் போகிறேன். நீ இங்கேதானேயிரு" என்றுசொன்னான். சுமதிதேவி 'பிராணநாதரே, அடியாளை விட்டுத் தேவரீர் பிரிந்து



போனால் அடியாள் எப்படித் தனியே வாழ்வேன். ஜீவனத்துக்காகப் பயப்படவேண்டாம். நான் எவ்வகையிலாவது பிச்சையெடுத்தாவது தேவரீரைப் போஷிக்கிறேன் என்று சொன்னாள். என்ன சொல்லியும் அவற்றை அவன் பொருள் செய்யாமல் அன்றிரவு தனியே புறப்பட்டுத் தேசாந்திரம் போயினான்.

சுமதி, விழித்துப்பார்த்து நாயகனைக்காணாமல் துக்கித்தவளாய்த் தானும் புறப்பட்டுக் கணவனைத் தேடிக்கொண்டு வந்தாள். இதற்குள் கௌசிகன் வெகுதூரஞ்சென்று பசியால்வருந்திக் காய்கனிகளைப் பறித்துத் தின்றுகொண்டே வழி நடக்கலாயினான். அங்கே சில திருடர் வந்து அவனை வளைத்துக்கொண்டனர். அந்த சமயத்தில் அவனைத் தேடிவந்த சுமதி அவ்விடத்தை யடைந்தனள். அவள் கள்ளர்களை வேண்டிக் கொண்டதன்மேல் அவர்கள் கௌசிகனை விட்டனர். அப்பொழுது சுமதி கணவனை நோக்கி, "பிராணநாதா! வீட்டிற்குவாரும்" என்று அன்புடன் அழைத்தனள். அந்த துன்மார்க்கன் மிகுந்த கோபத்தை யடைந்து அவளை ரத்தம்வரும்படி நன்றாக அடித்து அங்குள்ள ஒரு மரத்தில் அவளைக்கட்டிப்போட்டுத் தன்வழியே போனான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த சில வேடர்கள் அவ்வழியே வந்து அவனைப் பிடித்துக்கொண்டு அவளைக் கொண்டே அம்மாதின் கட்டுகளை அவிழ்க்கச்செய்து புருஷனையும் பெண்சாதியையும் ஒன்றாகப் பிரயாணம் செய்யும்படி ஏவினார்கள். உடனே அவனுக்கு நல்ல புத்தி வந்து, பெண்சாதியைப்பார்த்து "மாதே! கற்புக்கரசியென்று உன்

னைத்தான் சொல்லத்தகும். நான் இதுவரையில் எவ்வளவோ துன்பங்களைச் செய்தேன். நீ அவற்றையெல்லாம் மனதில் வைக்காதே" என்றுசொல்லி அவளைப் பிரியத்துடன் அழைத்துக்கொண்டு அடுத்தாற்போலிருக்கிற ஒரு பிராம்மண அக்ராகரத்துக்குப்போய்ச் சேர்ந்தான். அப்பொழுது சுமதியானவள் அந்தக் கிராமத்தில் பலவித குற்றேவல்களைச் செய்து அதனால் வந்த ஊதியத்தைக்கொண்டு கணவனைப் போஷித்து வந்தாள். மேலே நளாயனி சரித்திரத்திற் சொல்லியபடியே, கௌசிகன் ஓர் விலைமாதின் மோகங்கொள்ள அதை சுமதிதேவி நளாயனி செய்ததுபோலவே செய்து கணவனைத் தூக்கிக்கொண்டு வருகையில் ரிஷிசாபமுண்டாயிற்று. இவளும் பொழுது விடியாதபடிக்குச் சபிக்க தேவர்கள் வேண்டுகோளால் தன் சாபநிவர்த்தி பெற்று தானும் சாபமாற்றினாள். இவளது கற்புடைமைக்கு மகிழ்ந்த தேவர்கள் தம்பதிகளுக்குநோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் அளித்தார்கள். பின்னர் சுமதி கணவனுடன் நெடுங்காலம்போகபோக்கியங்களை அனுபவித்திருந்து, இறுதியில் மோக்ஷமடைந்தாள்.

**கஷ்டத்தைப் பெறுபவளே கற்புடையாள்.**

## 9. சுரபியின் சரித்திரம்.

கனகபுரி என்னும் பட்டணத்தில் வசிப்பவனாகிய சுவேதன் என்னும் பிராமணனுக்கு சுரபி என்னும் பெயருடைய ஒரு புத்திரி இருந்தாள். அவள்



தனது தந்தையை நோக்கி, "ஸ்திரீகள் எதனால் புண்ணியலோகத்தை யடைவார்கள்?" என்று கேட்டாள். அவன், பதிவிரதாதர்மத்தாலென்று பதில்சொன்னான், பதிவிரதாதர்மம் எப்படிப்பட்டது; அதைக் கையாளுபவர் கொள்ளவேண்டிய நியமங்களென்ன? அவைகளை எனக்கு உபதேசிக்கவேண்டுமென வேண்டிக்கொண்டாள். பிராமணன், "அம்மா, பதிவிரதாதர்மத்தை அனுஷ்டிப்பது கஷ்டம். ஆகிலும் நீபுத்திசூட்சமுள்ளவளாகையால் சொல்லுகிறேன். ஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வம். ஆகையால் புருஷனைக் கடவுளாக எண்ணி, அநேக உபசாரங்களால் பூஜிக்கவேண்டும். அவனது திருவடிகளையே தியானம் செய்துகொண்டும் இருக்கவேண்டும். இவ்வித நியமமுடைய மாதுக்கு மும்மூர்த்திகளும் ஏவல்செய்வார்கள். சாயுஜ்ஜியபதவி அவளுடைய கையிலிருக்கிறது." என்று போதித்தான். அதைக்கேட்ட சுரபியினித் தனக்கு வாய்க்கப்போகிற கணவனையே மனதில் சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

சிலகாலஞ் சென்றபிறகு, சுவேதன் வீட்டிற்கு மிக்க வேதாந்தியான பரனாகிய அக்கினி தத்தன் என்னும் ஒரு பிராமணன் வந்தான். அவன் தன் பசிக்குக் கொஞ்சம் அன்னமிட வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவனுக்குச் சுவேதன் தேவையான அளவு அன்னபானாதிகளுதவி உபசரித்து இவன் நமது மகளுக்குத் தக்க கணவனாவானென்று நினைத்துத் தன் கருத்தை அவனுக்குத் தெரிவித்தான். அதைக்கேட்ட அக்கினி தத்தன், நான் அந்தக் கன்னியைச் சிலகேள்

விகள் கேட்பேன். அதற்கவள் தக்க மறுமொழி கூறுவாளாயின் அவளை யான் மணத்தற்குத் தடையாதுமில்லை என்று கூறினான். நவேதன் அதற்குச் சம்மதித்துச் சுரபியைக்கூப்பிட்டு அந்தணரெதிரில் கொண்டு வந்து விட்டான். அக்னிநந்தன் அவளைப்பார்த்து பெண்களுக்குத் தாழ்மையையுண்டாக்குவது எது என்று கேட்டான். சுரபி, இம்மைச் சுகத்தில் விருப்பத்தை வைப்பது என்ன, "உயர்வைத்தருவது எது? ஆபரணமாவது எது?" என்னுங் கேள்விகளையும் கேட்டான். அதற்கவள், கணவன் சொற்படி நடப்பதும், பதிவிரதா தர்மமும் என்று பதிலுரைத்தாள். இதைக் கேட்ட பிரமசாரி மகிழ்ச்சியடைந்து, விவாகத்திற்குச் சம்மதித்தான்; விவாகம் நடந்தேறிற்று.

பிறகு, அவன் மாமனார் வீட்டிலேயே சிலகாலஞ் சுகமாய் வசித்துக் கொண்டிருந்தான். இது இப்படியிருக்க, வருணனுடைய லோகத்திலுள்ள வருணனுடைய பெண்ணாகிய சாரசையென்பவள் தனது பாங்கிமார்களை நோக்கி, "தோழிகளே! வேதாந்தவிசாரணை செய்தவனும் சாஸ்திரங்கள் முற்றும் உணர்ந்தவனும் பிரும்மஞானியுமாகிய ஒரு ஏழை பிராமணனை எனக்குக் கணவனாக நீங்கள் கொண்டுவருதல் வேண்டும். சந்திரகிரகணம்சமீபத்தில்வருகிறது. அப்பொழுது கடலில்மூழ்க அநேகம் ஆடவர்கள் வருவார்கள் என்று சொன்னாள். சிலநாட் சென்றதும் சந்திரகிரகணம் வந்தது. அக்னிநந்தனும் சுரபியும் கடலில் மூழ்குவதற்காக வந்து, ஒருவருடைய வஸ்திரத்தோடு மற்றொருவர் வஸ்திரத்தை முடிபோட்டுக்கொண்டு கடலில்மூழ்கினர். அப்



போது வருணன் மகளால் ஏவப்பட்ட தோழி ஒருத்தி முதலை வடிவங்கொண்டு கடலில்வந்து முந்தானையின் முடிப்பைக் கத்தரித்துவிட்டு அக்னி நந்தனை வருணலோகத்துக்குக்கொண்டுபோய் விட்டாள். அங்கு அவனுக்கும் சாரசைக்கும் காந்தர்வ விவாகம் நடந்தேறியது. அந்தப் பிராமணன் அங்கே வருணராஜன் குமாரத்தியுடன் போகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தான்.

இங்கே சமுத்திரத்திலிருந்து வெளியேறின சுரபியானவள் கணவனைக்காணாமல் தேடத்தொடங்கினாள். அருகிலிருந்தவர்கள் அவளைநோக்கி, "அம்மா தெய்வச்செயலுக் கென்னசெய்யலாம்? இறந்த கணவன் பிழைத்து வரப்போகிறானா? கடலுள் வீழ்ந்தவனை இந்நேரம் எந்தமீனோ, திமிங்கிலமோ விழுங்கியிருக்கும். ஆகையால், வீட்டுக்குப் போவோம்வா" என்று கூப்பிட்டார்கள். அதற்கு, அவள், "பந்துக்களே, என் பிராணநாதனைக் கடலுக்கிரையாகவிட்டு நான்மட்டும் தனியாக வீட்டுக்கு வருவேனா? எவ்விதமாயாவது கடலைப் பங்கப்படுத்தி, என் கணவனை மீட்டுவருவேனே யல்லாமல் யான் அடியெடுத்து வைக்கமாட்டேன்" என்றாள்.

பிறகு, சுரபிதேவியானவள் ஆசமனம் செய்து பத்மாசனமிட்டு உட்கார்ந்துகொண்டு கணவன் திருவடிகளை மனத்தில் தியானித்து யோகஞ்செய்தாள். அந்த யோகத்திலிருந்து கிளம்பின தீயும் இவளுடைய பதிவிரதாக்னியாகிய தீயும் ஒன்றுசேர்ந்து கடலை வற்றச் செய்து, கடல் ஜந்துக்களையும் நாசம் செய்ய ஆரம்பித்தன. அந்த அக்னிதாபத்துக்குப் பொறுக்க மாட்டாமல்வருணன் வந்து, தூதர்களைக் கூப்பிட்டு விசா

ரிக்க, அவர்கள் நடந்த செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக்கேட்ட வருணன், ஓடோடியும் சென்று தன் மகளை நோக்கி, "அம்மா உன்னால் நமது ராஜ்யத்திற்கே அழிவு வந்துவிட்டது. அந்த மகா பதிவிருதையினுடைய கணவனை அவரிடம் ஒப்புவித்து விடு. நீ இதுவரையில் அநுபவித்த சுகம் போதும்" என்று சொன்னான். அதைக்கேட்ட சரசை "தந்தையே, என் நாயகரை விட்டுத் தனியே நான் பிரிந்து இருக்கமாட்டேன். ஆகையால் என்னையும் அவருடன் கூடவே அனுப்பி விடுங்களென்று கேட்டுக் கொண்டாள். அப்படியே வருணதேவன் அந்தப் பிராமணனையும் தன் மகளையும் கொண்டுவந்து சுரபி தேவியினிடத்தில் விட்டுவிட்டு, "தாயே! இதோ உமது கணவன் வந்தார்" இவரை யழைத்துக்கொண்டு போகலாம். என்று தண்டனிட்டு நின்றனன். உடனே அவள் கண்விழித்துப் பார்த்தாள். அப்போது சரசை அவள் காலில் விழுந்து, "அக்கா, நான் தெரியாமற் செய்த பிழையைப் பொறுக்கவேண்டு"மென்று வேண்டிக் கொண்டாள். உடனே சுரபிதேவி தன் கணவனையும் சக்களத்தியையும் அழைத்துக்கொண்டு வீட்டிற்குப் போய் நெடுங்காலம் இன்புற்றிருந்து கடைசியில் மோக்ஷத்தையு மடைந்தாள்.

**கற்புடையவள் கடலையும் வற்றுவிப்பாள்.**

## 10. பிரபாவதி சரித்திரம்.

பாடலிபுரம் அரசனாகிய சந்திரசேகரனுக்குப் பிரபாவதி யென்றொரு புதல்வியுண்டு. அவள் இயற்கை யறிவும் செயற்கையறிவும் நிரம்பப்பெற்றவளாய்



அழகுக்கு ஓர் வரம்பாயிருந்தாள். அவளை மகததேச ராஜகுமாரனாகிய சித்திரகனென்பவனுக்கு விவாகஞ் செய்து கொடுத்தான். பிரபாவதி கணவனையே தெய்வமாக நினைத்து வழிபட்டு வந்தாள். சிலநாட் சென்றதும் தன் தேசத்திற்குச் செல்ல விரும்பிய சித்திரகன் பிரபாவதியினிடம் தன் கருத்தைத் தெரிவித்தான். அவளும் சம்மதித்தாள். உடனே இருவரும் இரண்டு குதிரைகளின் மேலேறிக்கொண்டு பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள். காட்டில் அநேக மிருகங்களையும் பட்சிகளையும் வினோதமாகப் பார்த்துக்கொண்டும் விளையாடிக்கொண்டும் போனார்கள். சாயங்காலமானவுடன் ஒரு மரத்தடியில் சென்று படுத்துக்கொண்டு உறங்கிப்போனார்கள்.

பாதிராத்திரியில் விழித்துக்கொண்ட சித்திரகன் பிரபாவதி தன்னை மறந்து நித்திரை செய்வதை யறிந்து அவளைப்பரிசோதிக்கவேண்டி "பிரபாவதி" என்று மூன்று தரம் மெல்லிய குரலாற் கூப்பிட்டான். மிகுந்த தூக்கத்தால் அம்மாது கணவன் கூப்பிடுவதை உணராமையால் அதையே நற்சமயமாகக் கொண்டும் அதுவே குற்றமாக நினைத்தும் தன் குதிரைமேலேறிக் கொண்டு தன்னூரை நோக்கிப் பிரயாணமானான்.

கொஞ்ச நாழிகைபொறுத்துக் கண்விழித்துப் பார்த்த பிரபாவதி, கணவனைக் காணாமல் திக்பிரமை கொண்டு, நாற்புறமும் ஓடியலைந்து பார்த்தும் பயன்படாததுகண்டு, ஒருவேளை மகததேசத்திற்குத்தான் போயிருப்பார் என்றெண்ணிக்கொண்டு தன் குதிரை மீதேறிப் போகத் தொடங்கினாள். வழியில் வந்து மறித்த சில திருடர்களைத் தனது கற்புத் தீயினால்

எரித்து விட்டு அப்பால் சென்று ஒரு முனிவராச்ரமத்தை நண்ணினாள். அங்குப் போய் அவரைத் தண்டனிட்டு நடந்த சமாசாரத்தை விண்ணப்பம் செய்து கொண்டாள். முனிவர் நடந்த விஷயங்களை ஞான திருஷ்டியால் அறிந்து, "பெண்ணே, நின் மனோபாவத்தை யறிவதற்காக நின் கணவன் இவ்வாறு செய்தான்" என்று சொல்லி, அவளைத் தமதாச்ரமத்தில் வைத்துக்கொண்டு சம்ரக்ஷித்து வந்தார்.

சித்திரகன் தன்னகரத்தைச் சேர்ந்து தாய் தந்தையர்களுக்குத் தான் செய்துவந்த விஷயத்தைச் சொல்ல, அவர்கள் கேட்டு, "அடா அறிவீனனே! மஹா பதிவிரதா சிரோமணியை இப்படியுஞ் செய்யலாமா?" என்று கூறினார்கள். அதைக் கேட்ட சித்திரகனும் தான் செய்த இந்த அக்ரமத்துக்கு விசனமடைந்து சித்தப் பிரமையினால் பயித்தியம் பிடித்தவனாகத் திரிந்து கொண்டிருந்தான். இவ்விடத்தில் பிரபாவதி முனிவரிடத்தில் சில நாளிருந்து மகா தத்துவ பரிபாகமடைந்து ஒரு நாள் தன் திவ்விய வஸ்திராபரணங்களை யெல்லாம் கழற்றி அம்முனிவர் திருவடிகளிற் சமர்ப்பித்து, "ஓ முனிபுங்கவரே! உலகத்தில் எப்படிப்பட்டவர்களுக்கும் திரவியமே ஆபத்துக்கிடமா யிருக்கிறது. அதன் மீது ஆசையை விட்டவர்களுக்கு ஒரு துன்பமுமில்லை. ஆகையால் நான் இனிப்பயமில்லாமல் என் தேசத்துக்குப் போவேன். தேவரீர் இவைகளைக் கண்காணித்தருளல் வேண்டும்." என்றுகூறினாள். அதற்கு அம்முனிவர், "குணவதியே! எல்லாப் பற்றுக்களையும் துறந்த முனிவனாகிய எனக்கு இந்நகைகளா லாவதென்ன? இவற்றையெல்லாம் நீயே எடுத்துக் கொள். உனக்கு வழியில் எவ்வித ஆபத்துக்களும் வாராதிருக்குமாறு செய்கிறேனென்று சொல்லிச் சில மந்திரங்களை உபதேசித்தனர். இனி நீ பயமின்றிப் போகலாமென்று விடையும் அளித்தனர். பிரபாவதி குதிரை மேலேறிக் கொண்டு ஒரு பயமுமின்றியே தன் மாமனாரது ஊர் போய்ச் சேர்ந்தாள். ஊர் போய்ச் சேர்ந்து அங்குள்ளவர்களைச் சமாசாரம் விசாரிக்கையில் எதிரியரசன் வந்து தங்கள் தேசத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான் என்ற செய்தியைக் கேட்டனள். உடனே பிரபாவதி தனது நாயகன் திருவடிகளை மனதிற் றியானித்துக்கொண்டு அஷ்டாக்ஷர மந்திரத்தை உச்சரித்தாள். அவ்வளவில் அளவிடமுடியாத ரதகஜ துரக பதாதிகள் தோன்றிச் சத்துருவை எதிர்க்கச் சென்றார்கள். உடனே சத்துரு, அரண்மனையை விட்டு ஓடிப் போனான். பிறகு பிரபாவதி தனது மாமன் மாமியிருக்குமிடஞ் சென்று தண்டனிட்டுத் தான் இன்னாள் என்பதைத்தெரிவித்துக்கொண்டனள். அதைக் கேட்ட அவர்கள் மிகச் சந்தோஷ மடைந்தார்கள். பிறகு தன் கணவனிருக்குமிடஞ் சென்று தன் பதிவிரதா மகிமையால் அவனது சித்தப்பிரமையை நீக்கி, அவனை அரசனாய் முடிசூடும்படிச் செய்தனள். பிறகு வெகுகாலம் கணவனுடன் வாழ்ந்திருந்து, வைகுந்தமடைந்தாள்.



**கற்புடையவளுடைய மகிமையே மகிமை.**

# 11. சுமுகி சரித்திரம்.

முன்னொரு காலத்தில் ஒரு கிராமத்திலுள்ள குயவனொருவனுக்கு சுமுகி என்னும் பெயருடைய பெண் ஒருத்தியிருந்தாள். அவள் உலகத்து மற்றக் குழந்தைகளைப் போல விளையாடுவதும் சிரிப்பதுமாயில்லாமல் மவுனமாயிருப்பதும், எல்லா வேலைகளையும் பொறுமையாகச் செய்வதுமாயிருந்தாள்.

தன் புதல்வியின் நடை கொடிகள் இவ்வாறிருப்பதைக்கண்ட அக்குயவன் சிந்தாக்கிராந்தனாகி "ஓ! தெய்வமே! இப்படிப்பட்ட பெண் எனக்குப் பிறக்க வேண்டுமா? இவளுக்கு என் பிராணனிருக்கும் போதே விவாகஞ் செய்து பார்த்துவிட்டுப் பிறகு இறந்துபோக வேண்டும் என்னும் எண்ணமுடையவனாய்த் தனது பந்துக்களில் ஒருவனுக்கு விவாகஞ் செய்வித்தான். அவனுக்கு வேறே ஆண் சந்ததிகளில்லாததினால் மருமகனைத் தன் வீட்டிலேயே வைத்துக் கொண்டு தன் தொழிலை நடத்தி வந்தான்.

சில நாளைக்கெல்லாம் கிழவனாகிய குயவன் மரணமடையவே அவனுடைய மருமகனானவன் தன் மனைவியை நோக்கி, "பெண்ணே! நீயோ ஒன்றுமறியாதவள். நானும் மந்தபுத்தியுள்ளவன். ஆகையால் நாம் ஜீவிக்கிறதற்கு ஏதேனுமொரு மார்க்கம் தேட வேண்டும். ஆகையால் நீ தினந்தோறும் நமது குலத்து இதர மாதர்களுடன் ஊருக்கு வெளியே போய் நல்ல களிமண்ணைக் கொண்டுவா; நான் பாண்டங்கள் செய்கிறேன்; அதனால் நமது ஜீவனத்தை நடத்திக் கொள்ளலாம்." என்று சொன்னான். அவன்



அவ்வாறுசொல்லி அதன்படியே ஜீவனத்தையும் நடத்திக்கொண்டு வந்தான்.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் சுமுகியானவள் மண்கூடையைச் சுமந்துவருகையில் அதைத் தூக்க மாட்டாது கீழே போட்டுவிட்டாள். அவளுடைய பந்துவர்க்கத்தாரும் அவளைப் பார்த்து எவ்வித உதவியும் செய்யாமல் போய்விட்டார்கள். அவ்விடத்தில் சுமுகி புலம்பிக் கொண்டிருக்கையில் அவ்வழியே வந்த கௌதமமுனிவர் இதைக்கண்டு கிருபை கூர்ந்து "அம்மா! நீ யார்? இவ்வாறு வருத்தமுறக் காரணமென்ன?" என்று கேட்டார். சுமுகி முனிவரை அடிபணிந்து தன்குடும்பவரலாறு முழுவதையும் தெரிவித்தாள். அப்போது கௌதமமுனிவர் அவளைப் பார்த்து பதிவிருதா தர்மத்தை உபதேசித்து யோகஞ் செய்யும் முறைமையையும் போதித்தார். அவள் அதைக் கேட்டுத் தனது நாயகன் திருவடிகளை மனத்திற் கொண்டு யோகத்தைச் செய்ய ஆரம்பித்தாள். அப்பொழுது அக்கூடையானது அவள் தலைக்குமேல் அந்தரத்தில் ஒரு முழ உயரத்தில் வந்துகொண்டிருந்தது. அப்புறம் அவள் வீடு சேர்ந்து கணவனுக்கு நடந்த சங்கதிகளைத் தெரிவித்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பின்பொரு நாள் எல்லாக் குயத்திகளும் மண் கொண்டு வருவதற்காகச் செல்லுகையில் நடுவழியிலிருந்த ஒரு ஆற்றில் இருகரையும் புரண்டு வெள்ளமோடிற்று. அதைக் கண்ட அவர்கள் எல்லாரும் திரும்பித் தம் வீடுகளுக்குப் போக யத்தனிக்கையில், சுமுகி அவர்களைப் பார்த்து, "பயப்படாதீர்கள். என் பின்னே வாருங்கள்." என்று சொன்னாள். உடனே

ஆறு வழிவிட்டது. எல்லாரும் சுகமே போய் மண்ணைக் கொணர்ந்தார்கள். இவ்வதிசயத்தைக் கேட்ட அக்குயவர்களின் பெரிய தனக்காரன் ஒரு நாள் சில ஸ்திரீகளை அனுப்பி அவ்வூரில் நடக்க இருந்த ஒரு திருவிழாவுக்குச் சுமுகியை அழைக்கும்படி ஏவினான். இவளை வந்து கூப்பிட்ட ஸ்திரீகளுக்கு அவள், "என் தெய்வம் இங்கேயிருக்கிறது. நான் வரவில்லை; போங்கள்" என்றுகூறிவிட்டாள்.

சிலகாலங்கழித்து, அவ்வூரரசன் இவள் கற்பைப் பரிசோதிக்க வெண்ணி, அவளது குடிசைக்கு நெருப்பிடும்படி ஆக்யாபித்தான். அவ்வாறே நடுராத்திரியில் அவளுடைய குடிசை தீ வைக்கப்பட்டது. அதைக் கண்ட சுமுகியின் கணவன் மிகுந்த பயத்துடன் மனைவியை எழுப்பினான். அவள், "பயப்பட வேண்டாம், பிராணநாதா!" என்றுசொல்லி அஷ்டாக்ஷர மந்திரத்தையும் தனது நாயகன் திருவடிகளையும் மனதில் தியானித்து மழை பெய்யச் செய்து அத்தீயை அவித்தாள்.

பிறகொருநாள் சுமுகியானவள், பானை சட்டிகளை விற்பதற்காக எடுத்துக்கொண்டு போகையில் அவைகள் அவளுடைய தலைக்குமேல் முழஉயரம் அந்தரத்தில் வருவதை அவ்வூர் மந்திரி கண்டு ஆச்சர்யப்பட்டு அரசனுக்கறிவித்தான். உப்பரிகையிலிருந்து இதைக் கண்ணுற்ற அரசனும் மிகவுமாச்சர்யப்பட்டு, இவளை இன்னும் நன்றாய்ப் பரிசோதிக்க வேண்டுமென்று மனத்துள் எண்ணி, இவள் தனது கணவனுக்குத் தினந்தோறும் இரண்டு ஜாமத்துக்கு முந்தியே அன்னந் தயார் செய்து படைத்து விடுகிறாள்.



நாளையதினத்தில் அதைநிறைவேற்றாமல் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு, தன் ராணியை நோக்கி, "காதலி! நமது அரண்மனைக்குப் பாண்டங்கள் கொண்டுவந்து கொடுக்கும் குயத்திகளில் சுமுகி என்பவளுடைய கூலியை மாத்திரம் நாளையதினம் இரண்டு ஜாமங்கழித்துக் கொடுப்பாயாக; அவளுடன் ஏதாவது பேச்சுக் கொடுத்துக் கொண்டேயிருந்து நீ இக்காரியத்தைச் செய்ய வேண்டும்" என்று கட்டளையிட்டான். அரசன் மனைவி அவ்வாறே செய்கிறேனென்று சொல்லினள். மறுநாள் வழக்கப்படி பாண்டங்களைக் கொண்டு சென்ற சுமுகிக்குக் கூலியை உடனே கொடாமல் ராஜாத்தி ஏதேதோ பேச்சுக்களையெல்லாம் பேசிக் கொண்டிருந்தாள். ஒன்றரை ஜாமமாயிற்று. அப்பொழுது சுமுகி, "அம்மா! எனது நாயகர் பட்டினியாயிருப்பார்; அவருக்கு அன்னம் தயார் செய்து படைத்தல் வேண்டும். ஆகையால் தயவுசெய்து என்கூலியைக் கொடுப்பீர்களாக!" என்று வேண்டிக்கொண்டாள். அதைக் கேட்ட அரசியும் இதோ கொடுக்கிறேன் கொடுக்கிறேன் என்று காலதாமதஞ் செய்து கொண்டேயிருந்தாள். அதைக் கண்ட சுமுகி தனது கணவன் தாள்களை மனதில் தியானித்துச் சூரியனை அப்பாலிப்பால் அசையவொட்டாமல் செய்தாள். அப்பொழுது அரசன் அருகிலிருந்து நாழிகை வட்டிலைக் கொண்டு நாழிகைகளைக் கணக்கிட்டுக்கொண்டிருந்தான். நாழிகையோ மூன்று ஜாமத்துக்கு மேலாயிற்று. சூரியனோ ஒன்றரை ஜாமத்தில் இருந்த விடத்திலேயே இருக்கிறான். இதை [illegible]யையும் அம்மா பார்த்த அரசன் மிகுந்த

தைத் தண்டனிட்டு நமஸ்கரித்துத் தான் செய்த பிழையைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டு, பல்லக்கின் மீது ஏற்றுவித்துச் சகல வாத்தியங்களும் முழங்க அவளுடைய வீட்டுக்குப் போக விடுத்தான். அன்றியும் அவர்களுக்கு அளவிறந்த செல்வத்தையும் கொடுத்தான். பிறகு, சுமுகி வெகு காலம் கணவனுடன் இகலோக போக்யங்களை அனுபவித்து இறுதியில் சாயுச்சியத்தையும் அடைந்தாள்.

பதிவிருதைக்குப் பஞ்ச பூதங்களும் பணி கேட்கும்.

## 12. புஷ்பவேணி சரித்திரம்.

காஞ்சீபுரத்தில் அரசு செலுத்திக் கொண்டிருந்த புஷ்பரதன் என்பவனுக்குப் புஷ்பவேணி என்று ஒரு புத்திரி யுண்டானாள். அவள் சகல சாஸ்திரங்களிலும் வல்லவளாய் அழகுக்கோர் அணிகலமாய் விளங்கினாள். அவளது கன்னிமாடத்திற்கு ஒரு நாள் சதாசிவன் என்னுமொரு முனிவர் வந்தார். அம்முனிவருக்குப் புஷ்பவேணி சகலவித உபசாரங்களும் செய்து ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, "மஹாநுபாவரே! உலகத்தில் பெண்களுக்கு பதிவிரதா மகிமை எப்படி உண்டாகும்? ஆத்மஞானத்தையும் எப்படி உண்டாகும்? இவைகளை எனக்கு உபதேசிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

அம்முனிவர் அவளது வேண்டுகோளுக் கிரங்கி, "பெண்ணே! ஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வம். ஆகையால் தினந்தோறும் கணவனுக்கு முன்னே [illegible] வேண்டும். பிறகு, நீராடி மடியுடுத்துக் கணவன் பாதங்களிரண்டையும் தொட்டுக் கண்ணிலொற்றிக் கொள்ளவேண்டும். பிறகு [illegible] வேலைகளைச் செய்து சமையலையும் முடித்து வேளை தவறாமல் அன்னமிட வேண்டும். கணவன் சொல்லுக்கெதிர் சொல்லக்கூடாது. இவ்வாறு நடந்துவருபவளே பதிவிரதை என்று சொல்லப்படுவாள். அவளுக்கே ஞானோதய முண்டாகும்" என்று கூறித் தம் வழியே போனார்.



புஷ்பரதன் தன் மகளுக்கு விவாகஞ் செய்விக்க வேண்டுமென்று விரும்பித் தன்பெண்ணுக்கு எல்லாத் தேசங்களிலுமுள்ள ராஜகுமாரர்களுடைய படங்களையும் வரவழைத்துக் காட்டினான். அப்பொழுது அவள் ஒருவனையும் விரும்பாமல் மாளவதேசத்தரச குமாரன் சுப்பிரகாசன் என்பவனையேதான் வரிப்பதாகக் கூறினாள். உடனே அரசன் ஒரு பிராமணன் கையில் மணவோலையை எழுதிக் கொடுத்து மாளவ தேசத்துக் கனுப்பினான். மாளவராஜன் அதைக் கண்ணுற்று மகனைக் கூப்பிட்டுச் சங்கதியை உணர்த்தினான். சுப்ரகாசன் தந்தையை நோக்கி, பிரமன், விஷ்ணு, ருத்ரன், என்னும் திரிமூர்த்திகளும் தம் மாதர்களைத் தனியாய்விடில் என்ன அவமானத்தை விளைவிப்பார்களோ என்னும் எண்ணமுடையவர்களாய் அவர்களைத் தனியேவிடாமல் வாக்கிலும் மார்பிலும் உடம்பின் ஒரு பகுதியிலும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இவ்வுலகத்தில் பதிவிருதையாகிய மனைவி வாய்ப்பது அரிது. ஆகையால் எனக்குக் கலியாணம் வேண்டியதில்லை." என்று சொல்லி வைராக்கியங்கொண்டு மந்திரி குமாரனாகிய நீதிமானென்பவனையும் அழைத்துக்கொண்டு கானகத்துக்குப் புறப்பட்டுப் போய், அசலராஜனும் [illegible]

யினது ஆச்சிரமத்தை அடைந்து அவரையுந் தண்டனிட்டு, அவருக்குச் சிசுருஷைகளைச் செய்து வந்தான்.

மாளவராஜன், ஓலைகொண்டுவந்த பிராமணனுக்கு விஷயத்தைத்தெரியப்படுத்தவே அவன் அதனைப்புஷ்பரதனிடத்தில் தெரியப்படுத்தினான். புஷ்பரதன் புதல்விக்குச்சொன்னான். உடனே புஷ்பவேணி தனதுபெற்றோர்களை நோக்கி "மாதாபிதாக்களே! நான் இனி என்னாயகனாகிய சுப்பிரகாசனைத் தேடி அவர் எங்கிருந்தாலும்அழைத்துக்கொண்டுவரப்போகிறேன். எனக்குப் போதுமான சேனைகளைத் தயார் செய்து என்னுடன் அனுப்ப வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனள். உடனே அரசன், மகள் மீதுள்ள அளவில்லா அன்பினால் "பெண்ணே! நீ எப்படி அவனிருப்பிடத்தைத் தெரிந்து கொள்ளமுடியும்? அவனை ஒருதரமேனும் பார்த்தவளல்லவே; அப்படியிருக்க அவன் உனக்கெப்படி கணவனாவான்? ஆகையால் நீ போகவேண்டாம். நான் சேனைகளை யனுப்பி அவன் எவ்விடத்திலிருப்பினும் தேடி வருவித்து அவனையே உனக்குக் கணவனாகச் சேர்த்து விவாகஞ் செய்விக்கிறேன். கவலைப்பட வேண்டாம்" என்று சொன்னான். அதற்கு அவள் ஒப்பாமல், "தந்தையே, இனி என் நாயகனைக் காணாமல் ஒரு நிமிஷமேனும் இரேன். ஆகலின் நான் போயே தீருவேன்" என்றனள். உடனே அரசன் ஒரு சேனையைத் தயார்செய்து அவளை அனுப்பினான். அவளும் வடதிசையை நோக்கிப் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தாள். புஷ்பவேணி, காடுகளிலும் மலைகளிலும் சுப்ரகாசனைத் தேடிக்கொண்டு திரிந்தாள்.



இப்படியிருக்கையில் அசலர் என்னுங் குருவானவர் சுப்ரகாசனை நோக்கி, "இனி நீ உன் தேசத்துக்குப் போகலாம். நீதேசத்துக்குப் போவாயாகில் உனக்குப் பரம சாந்தமும் நற்குணமும் உள்ள பதிவிரதையான மனைவிவாய்ப்பாள்" என்றுகூறினார். குருவார்த்தையைக் கேட்ட சுப்ரகாசன் குதிரை மீதேறிக்கொண்டு தன் நகரத்துக்கு வருகையில் ஒரு ஆலமரத்தடியில் தங்கினான். காய்கனிகளை உண்டு நித்திரை செய்கையில் அன்றிரவு நாலாஞ் சாமத்தில் ஒரு பாம்பானது சீறிக்கொண்டு ராஜகுமாரனைக் கடிக்க வந்தது. உடனே மந்திரிகுமாரன் ராஜ குமாரனை எழுப்பி விஷயத்தைத் தெரிவித்தான். உடனே இருவரும் தங்கள் கத்திகளை யுருவிக்கொண்டு அதை வெட்டுவதற்குத் தயாராக இருந்தார்கள். இதை யறிந்த அப்பாம்பு இவர்கள் தன்னைப் பார்க்க முடியாதபடி மின்னலைப்போன்று மிகுந்த ஜோதி மயமாய் விளங்கிற்று. உடனே அவர்களிருவரும் அதைக் கண்ணாற் பார்க்குஞ் சத்தியற்றவர்களாகிக் கண்ணை மூடிக்கொண்டார்கள். அதை யறிந்த அப்பாம்பு உடனே ஓடி வந்து ராஜகுமாரனைக் கடித்து விட்டுப் போய்விட்டது. உடனே சுப்ரகாசன் விஷந் தலைக்கேறி மரணமடைந்தான். மந்திரி குமாரன் மிகுந்த துக்கமடைந்தவனாய் ராஜகுமாரன்மீது விழுந்து புரண்டழுது கொண்டிருந்தான்.

இந்த சமயத்தில் சுப்ரகாசனைத் தேடிக்கொண்டு வந்த புஷ்பவேணி அவ்விடம் வந்து சேர்ந்தாள். அங்குஅழுது கொண்டிருக்கும் மந்திரிகுமாரனைப்பார்த்து, "நீர்யார்! இங்கு, இறந்துகிடப்பவர்யார்?" என்று கேட்டாள். அவன் உள்ள விஷயத்தை உரைத்தான்.

உடனே இவள், அவன்மீது விழுந்து புரண்டு அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது, மந்திரி குமாரன்; அம்மா! அணைகடந்த வெள்ளம் திரும்புமா; வீணே அழுவதிற் பயனில்லை மேல் நடக்கவேண்டியதைப் பாருமென்று சொன்னான். அதற்கவள் தன்னுடைய விருத்தாந்தங்களனைத்தையும் மந்திரி குமாரனுக்கு உணர்த்தினாள், உடனே, அவன் ஆச்சரியப்பட்டு ஆ! இப்படிப்பட்ட மாதர்களும் உலகத்திலிருக்கிறார்களா என்று மிகவும் ஆச்சரியமடைந்தனன். உடனே புஷ்பவேணியானவள் பெருந்தீ மூட்டி அதில் அரசகுமாரனைப் போட்டுத் தானும் விழப்போனாள், அப்பொழுது அவளது கற்பின் மகத்துவத்தால், மும்மூர்த்திகளும் அவ்விடத்துக்குவந்து புஷ்பவேணியை நோக்கி, அம்மா! நின் பதிவிரதத்துக்கு நாங்கள் மிகவும் மகிழ்ந்தோம், என்று சொல்லி சுப்பிரகாசனை எழுப்பித் தந்தார்கள்.

உடனே, ராஜகுமாரன் மந்திரிகுமாரனுடனும், புஷ்பவேணியுடனும் தனதாசிரியர் இடத்துக்கு மறுபடியும் சென்று அவரிடம் விடைபெற்றுக் கொண்டு தனது நாடடைந்தான். இவற்றையெல்லாமறிந்த காஞ்சி நகரத்தரசன் தனது மகளையும் மருமகனையும் தனது ஊருக்கு இட்டுச்சென்று, விமரிசையாகக் கலியாணஞ் செய்வித்தான். புஷ்பவேணி வெகுகாலம் தன் கணவனுடன் இன்பம் அனுபவித்திருந்து இறுதியில் மோக்ஷம் அடைந்தாள்.

கற்புடையவளே பொற்புடை யமிர்தம்.



## 13. பத்மாவதி சரித்திரம்.

ஜெகன்னாதம் என்னுந் திவ்விய க்ஷேத்திரத்தில் ஜெயதேவர் என்றொரு பகவத் பக்தரிருந்தார் பிரம்மனை வருணத்திற் பிறந்தவராகிய அம்மஹானுக்குத் திருந்திய செல்வமும் அருந்தவக் கல்வியும் செவ்விய தேகமும் திவ்விய போகமும் கிளிபோல் மொழியும் கெண்டைபோல் விழிகளும், கமலமலர் நிகர்தாள்களும் விமலமான தோள்களும் பதியின் பாலடக்கமும் அதியுடனொடுக்கமும் பரமானந்த பக்தியும் விசித்திரமான புத்தியும் கற்புடைய மானமும் விற்பனத் தியானமும், சந்திரனைப்போன்ற முகமும், பவளம் போன்ற வாயும், மெலிய இடையும், மெதுவான நடையும், முத்தைப்போன்ற பல்லும் உள்ள பத்மாவதி என்னும் பெயருடைய மனைவியொருத்தி யிருந்தாள். அவள் தினந்தோறும் விடியுமுன்னெழுந்து நாயகனைத் தொழுது நீராடி வீட்டு வேலைகளையெல்லாம் முடித்து நாயகனுக்குப் பிரியமான பதார்த்தங்களைச் சேகரித்து அறுசுவை யன்னங்கள் செய்து பரிமாறி உபசாரங்களைச் செய்து அவர் கட்டளையை மீறாமல் நடந்து வருவாள். ஜெயதேவர் பக்தர்களுக்கும் பிராமணர்களுக்கும் மற்றுமுள்ள ஏழைகளுக்கும் உணவும் உடையும் அளித்து வந்ததனால் அவருடைய செல்வமெல்லாம் குறைந்து நாளடைவில் ஒன்றுமேயில்லாமற் போய்விட்டது. பிறகு உஞ்சவிருத்தி செய்து ஜீவனஞ் செய்துவந்தார். பத்மாவதி, அப்பொழுதும் அன்புடன் அதிதிகளை உபசரித்து வந்தாள். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் பத்மாவதியினுடைய தகப்பனார் அவள் வீட்டுக்கு

வந்தார். அவரை உபசரித்து, உணவளித்து, கொஞ்ச தூரம்போய் வழிவிடுவதற்காகப் பத்மாவதி சென்றிருந்தாள். அப்பொழுது ஜெயதேவர் நிஷ்டை கலைந்து வெளியிற் போனார். அவ்விடத்திலொரு வர்த்தகன் கண்டு அவரைத் தன்னூருக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சிலநாள் வைத்திருந்து, வெகுவிய ஆடையாபரணங்களும் செல்வமும் நல்கி ஒரு தேரின் மீதேற்றிச் சிலரைக் காவலாக அழைத்து ஊருக்குப்போக விடுத்தனன். ஊருக்கு வருகிறவர்களை ஒரு காட்டில் சில கள்ளர்கள் வளைத்துக் கொள்ளவே, கூடவந்தவர்கள் எல்லாப் பொருள்களையும் அவர்களுக்குக் கொடுத்துவிட்டு ஓடி விட்டார்கள். பிறகு, அவர்கள் ஜெயதேவரை வளைத்துக் கொண்டார்கள், அவர் தேருக்காக நம்மை வளைக்கிறார்களென்று நினைத்துத் தேரினின்றும் இழிந்து தேரைக் கொண்டுபோகும்படி சொன்னார். அவர்கள் ஜெயதேவரைப் பிடித்துக் கொண்டுபோய் கையையும் காலையும் வெட்டி ஒரு பாழுங் கிணற்றில் தள்ளிவிட்டுப் போய்விட்டார்கள். பாழுங்கிணற்றிலிருந்த ஜயதேவர் பகவானைக் குறித்து அநேக விதங்களாய்த் துதித்துக்கொண்டு பரமானந்த நிஷ்டையிலிருந்தார். இவர் செய்தி இப்படியாக; நாட்டிலிருந்த இவர் மனைவி தன் தந்தையை வழியனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்து பார்க்கையில் தன் நாயகனைக் காணாது துன்பமடைந்து, கண்டவர்களையெல்லாம் கேட்டுக்கொண்டே திரிந்துவந்தாள். இவ்வாறு அலைவதைக்கேட்ட இவள் தகப்பனார் இவளிடம் வந்து, "குழந்தாய்! அவர் எங்காவது மலைகளின் குகைகளில் வாசஞ் செய்து தவஞ்செய்கிறாரோ! என்னமோ;



நீ விசனப்படாதே." என்று தேற்றித் தன் வீட்டில் அழைத்துக் கொண்டுபோய் வைத்துக்கொண்டார். அங்கே பத்மாவதி, நல்லுடை யுடுக்காமல் நல்லுணவுங் கொள்ளாமல் தரையிற் படுத்துக்கொண்டு நாயகனையே நினைத்த வண்ணமாயிருந்தாள்.

இது இப்படியிருக்க, கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்நாட்டரசன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றனன். அவன் வேட்டையை முடித்துக்கொண்டு திரும்பி வருகையில் ஜெயதேவர் நிஷ்டையிலிருக்கும் கிணற்றை எட்டிப்பார்க்கையில், ஏதோ மனித உருப்போல் தோன்றுவதைக்கண்டு, ஏவலாளரைவிட்டு அவரைக் கரையேற்றினான். கரையேற்றினவுடன் அரசன் அவரது அடிகளை வணங்கி, "சுவாமி, நீர் தேவரோ சித்தரோ? சொல்லு" மென்றுகூற அதைக் கேட்ட ஜெயதேவர், "மன்னவனே! என்னை ஏன் எடுத்தீர்? மேலான எனது நிஷ்டையை ஏன் கெடுத்தீர்? நான் தேவனுமல்லேன்; சித்தனுமல்லேன்; ஒரு ஏழைப் பிராமணன். முன் ஜென்மங்களிற் செய்த ஊழ்வினையின் பயனால் எனக்கு இந்தக் கதி சேர்ந்தது. எந்தக் காலத்திலெதை அநுபவிக்க வேண்டுமோ அதை அநுபவித்தே தீரவேண்டும். கர்மம் யாரையும் விடாது." என்று சொல்லிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டு நிஷ்டையிலிருக்க ஆரம்பித்தார்.

உடனே அரசன் இவரொரு மகாத்மா என்று மனதிலெண்ணி ஒரு சிவிகையிலேற்றி சற்குருவெனப் போற்றி பலவித உபசாரங்களையும் செய்து போற்றி வந்தான். ஒரு நாள் அரசன் அவரை நோக்கி

முத்தியடையும் படியான மார்க்க மெது வென்று கேட்டான். இவர் ஒரு நற்குணவதியை விவாகஞ் செய்துகொண்டு இல்லறத்தில் ஒழுகுவதே சிறந்த முத்திமார்க்கமாகும் என்று புகன்றார்.

இதைக்கேட்ட அரசன் அவரை நோக்கி, சுவாமி! அடியேனைச் சம்சார வாழ்க்கையி லிருக்கும்படி கட்டளை யிட்டீர்களே. தேவரீருக்கு மனைவியுண்டோ என்று கேட்டான். ஜெயதேவர் உண்டென்று சொன்னார். அரசன் நடந்த செய்திகளை அவர் வாய்மூலங் கேட்டறிந்து உடனே அநேக ஏவலாளர்களையும் பல்லக்கு முதலியவைகளையும் அனுப்பி, பத்மாவதிதேவியை அழைத்து வரும்படி அனுப்பினான்.

இங்கிருந்து புறப்பட்டுப்போன ஏவலாளர்கள் பத்மாவதி யிருக்கும் ஊரையடைந்து வீடு விசாரித்துக் கொண்டுபோய் பத்மாவதி தேவியைக்கண்டு சமாசாரத்தைச் சொன்னார்கள். உடனே பத்மாவதி உடலை விட்டுப் பிரிந்த உயிர், உடலில் வந்து சேர்ந்தாற் போலும் மகிழ்ச்சியை அடைந்து, வந்தவர்களுக்கு மிகுந்த உபசாரங்கள் செய்து விசாரித்தனள். பிறகு, அவர்கள் கொண்டுவந்திருந்த ஆடையாபரணங்களை அணிந்து கொள்ளும்படி வேண்ட, பத்மாவதிதேவி தான் கணவனை விட்டுப் பிரிந்த நாளில் உடுத்தியிருந்த ஆடையை யன்றி வேறொன்றை உடுத்தேனென்று சொல்லிவிட்டு, அதே உடையுடன் கால்நடையாகவே புறப்பட்டாள். அதைக்கண்ட ஏவலாளிகள் அவளைப்பலாத்காரமாகச்சிவிகையின்மேலேற்றிக் கொண்டு போயினர். பத்மாவதி கிரவுஞ்ச நகரில்



பிரவேசித்துக் கணவனிருப்பிடத்துக்குச் சென்று பார்க்கையில், கையுங்காலும் வெட்டுண்டிருப்பனைக் கண்ணுற்றாள். பார்த்துப் பிரமித்துப்போய்த் தரையில் விழுந்துருண்டு பெருமூச்சுவிட்டு வாய்விட்டழுது பலதரந் தொழுது இது யார் செய்த வேலை? இதை வினை! என்று பெருமூச்சு விட்டாள்.

பத்மாவதி சொன்ன வார்த்தையைக் கேட்டு, ஜெயதேவர் "கை குறைந்தாலென்ன? கால் குறைந்தாலென்ன? உடம்பையே இழந்து விட்டாலும் என்ன? விதியை வெல்ல எவராலாவது ஆகுமா?" என்று பல நீதிகளை எடுத்துப் போதித்தார். இவ்வாறு அங்கு வாழ்ந்து வருகையில் ஜெயதேவருடைய கை கால்களை வெட்டி யெறிந்த பாவிகள் ஸாதுக்கள்போல் வேஷந்தரித்து அரசன் முன் வந்தார்கள். அவர்களை ஜெயதேவர் இன்னாரென் றறிவாராயினும் அரசன் முன்பாக அவர்களை மிகவும் புகழ்ந்துகூறி, அவர்களுக்கு மிகுந்த உபசாரங்களைச் செய்வித்து, வேண்டிய சன்மானங்களுஞ் செய்வித்து, அவர்களைத் தேரின்மீதேற்றுவித்து ஏவலாளர்களைக் கொண்டு வழிவிட்டு வரும்படிச் செய்தார். ஏவலாளர் அவ்வாறே கொண்டு செல்லும் பொழுது ஒரு காட்டை யடைந்து அவ்விடத்தில் அவர்களை இறக்கி விட்டு நீங்கள் இவ்விடத்திலிருந்து செல்லுங்களென்று சொல்ல, அதைக்கேட்ட அந்தத் திருடர்கள் தங்கள் பரிசுகள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு, ஜெயதேவ ஸ்வாமிகளைப்பற்றி இழிவாகச் சில மொழிகளைப் புகன்றார்கள். அவ்வாறு சொன்ன மாத்திரத்தில், பூமி பயலென்று

வெடிக்க அவர்கள் அவர்களுடைய திரவியங்களுடன் பாதாளத்தில் அமிழ்ந்து போயினர். இதைக்கண்ட ஏவலாளர் அரசனிடம் வந்து நடந்ததை விண்ணப்பிக்க, அரசன் ஜெயதேவருக் கறிவித்தான். உடனே ஜெயதேவர் "சாதுக்களுக்கு இந்த ஆபத்துவரலாமா" என்று மிகவும் வருந்தி அரசனையும் அழைத்துக் கொண்டு காட்டிற்குச் சென்று, அவர்கள் மடிந்த இடத்தைப் பார்த்துத் தம்முயிரையும் விட எத்தனித்தார். சுவாமிகள் உயிரை விடத் துணிந்ததைக்கண்ட அரசனும் உயிர்விடத் துணிந்தனன். அக்காலை பரமசிவன் தோன்றி, இருவரையும் உயிர் விடுதலினின்றும் தடுத்து அந்தத் திருடர்களையும் எழுப்பித்தந்தனர். பரமசிவன் ஜெயதேவரை வாழ்த்தி, நீங்கள் நாடுபோனதும் நாராயணன் காட்சி கொடுத்தருளுவார் என்றுங் கூறிப்போனார்.

இது இவ்வாறிருக்க, நகரத்தில் அரசனது மனைவி பத்மாவதியினிடம் போய் அன்புடன் பணிந்து, "அம்மா ஒன்றுமறியாத நான் நற்கதி யடையும் பொருட்டு உபதேசஞ் செய்து என்னை யாட்கொள்ள வேண்டும்" என்று வேண்டினாள். அப்பொழுது பத்மாவதி அரசன் மனைவிக்குப் பற்பல ஆசிகள் கூறி, "நானொன்றையும் விசேஷமா யறியேன். ஆனால், எனக்குத் தெரிந்தவற்றை ஒளிக்காமல் சொல்லுகிறேன். அதென்னவெனில், ஸ்திரீகளுக்குப் பதியே பரவாசுதேவன்: பதியே ஜெகதீச்வரன்; நாதனே முத்தியளிக்கும் நாதன்; அவனுக்குச் செய்யும் பணிவிடைகளே முத்திதரும் பூசைகள்; பதியின் திருநாமத்தை பஜித்



தலே பிரும்மத்தியானம்; பதியுடன் இறத்தலே மோட்சம்; பதியிறந்த அக்கணமே தன்னுயிரை விட்டு விடுவதே மோக்ஷம் அடையும் சூக்ஷமம்; அன்றியும் கற்புள்ளவளே விற்பன விவேகி; கற்பழிந்தவள் கணிகைக்குங் கீழ்ப்பட்டவள்; கற்பைக் காத்தலே பெண்மைக்குரிய சகல கிரியைகளும் ஆகும்; கற்பழிந்தவள் செய்யுஞ் சகல தருமங்களும் கருமங்களாய் முடியும்; கற்பே பரலோகத்தைக் காட்டும். கற்புடையவளாலேயே இக்காசினி நிற்கிறது; கற்புடையவளுக்குத் திரிமூர்த்திகளும் பயப்படுவார்கள். இவ்வாறு பெரியோர்கள் சொல்வதன்றிச் சாத்திரங்களும் முறையிடுகின்றன. அன்றியும் சாவித்திரி கற்பால் இறந்த புருஷனை எழுப்பினாள். தமயந்தி கற்பை யழிக்க எத்தனித்த வேடனை எரித்தாள். சந்திரமதி அக்னியை ஜலம் போலக் குளிரச்செய்தாள். ரேணுகாதேவி ஜலத்தைத் திரட்டினதும், பிருந்தை தன் புருஷனைப் போலவந்த பகவானுடைய மாயையைத் தெரிந்து கொண்டதும், ஜலந்தரன் திரிமூர்த்திகளை வென்றதும், அருந்ததி நாரதர் அளித்த கற்கடலைகளை வேகவைத்துக்கொடுத்ததும், அநுசூயாதேவி மும்மூர்த்திகளையும் பாலராகச் செய்ததும், நளாயினி ஏழுநாள் பரியந்தம் பொழுது விடியாமற் செய்ததும், லக்குமி பரமசிவன் பிரமஹத்தியை நீக்கினதும், அக்னிதேவன் மோகத்தைத் தீர்க்க அவன் மனைவி அருந்ததியின் ரூபமெடுக்கக் கூடாமற் றிகைத்ததும், பார்வதி பரமசிவனார் இடப்பக்கத்தைப் பெற்றதும், கற்பினாலல்லவா? அரசியே! அருந்ததி ஸ்திரீயாயிருந்தும் நட்சத்திர ரூபமாய்த் துலக்க முற்றாள். ஆகையால் பெண்மைக்குரிய குணங்

களெல்லாம் அலையப் பெற்றிருந்தும் திருப்பாற் கடலிற் பிறந்தவளாயிருந்தும் கற்பிழந்ததால் கணவன் சாபத்தால் கல்லுருவாயினள், தற்காலத்தில் கலியாணச் சடங்குகளிலும் கற்பிழந்த அகலிகை கல்லுருவானதால் விபசாரமென்னும் அம்மியை மிதியென்றும் பதிவிரதைத் தன்மையுள்ள அருந்ததி நட்சத்திர ரூபமாயிருப்பதால் கற்பென்னும், அருந்ததியைக் காட்டி வணங்கென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால், கற்புள்ளவளுக்கு ஆசாரம் பூசை தியானம் நிஷ்டை முதலானவைகளும் வேண்டியதில்லை. கற்பைக் காத்தலே ஆசாரம் பூசை தியானம் நிஷ்டை என்று சொல்லப்படும். தேவகுருவாகிய பிருகஸ்பதி பகவான் மனைவியாகிய தாரை வியபிசாரஞ்செய்து எல்லாராலும் நிந்திக்கப்பட்டாள். ரேணுகை ஆகாயத்திற் போகும் கார்த்தவீரியனை ஜலத்தின் நிழலிற் கண்டு இப்படிப்பட்ட மனிதர்களுமிருக்கிறார்களா என்று நினைத்தமாத்திரத்தில் கற்பழிந்து ஜலந்திரட்டக் கூடாமல் பரசுராமனால் வெட்டுண்டாள். ஆகையால் பெண்கள் அதிக ஜாக்கிரதையாகக் கற்பைக் காத்தல் வேண்டும். இறந்தவர்களை யெழுப்புதலும் திரிமூர்த்திகளை வரவழைத்தலும் பூமியைத் தலைகீழாகச் செய்தலும் எளிதாகும். கற்பைக் காத்தல் அரிதாகும். ஏனெனில் சஞ்சலமுள்ள மனதை மடக்கியடக்கும். பிரும்ம நிஷ்டையும் பதிவிரதைத் தன்மையும் சமானமென்றே சொல்லத்தகும். புருஷர்களுக்குச் சலனமுள்ள மனத்தை யடக்கும் பிரும்ம நிஷ்டையே மோட்சமாகும். ஸ்ரீகளுக்கு மனதைச் சிதறவிடாமல் கற்பைக் காத்தலே முத்தியளிக்குஞ் சித்தியாகும்.



தவசிகளுக்குத் துன்மார்க்க ஸ்திரீகள் விஷமாவார்கள். உத்தமபுருடர்களுக்குத் தெய்வம் ஒன்றே. உத்தம ஸ்திரீகளுக்குக் கணவன் ஒருவனே. பாவையருக்குப் பதியே தெய்வமாவான்." என்று பற்பல நீதிகளுரைத்தாள்.

இதைக்கேட்ட இராணி, பத்மாவதியை நோக்கி, "அம்மா! தாங்கள் சொல்லுவதுபோலவே கணவனுடனெதிர்த்துப் பேசாமலும், கணவனுக்குப் பணிவிடை செய்வதிற் கூசாமலும், கணவனை தந்தை தாயென்றும், கணவனை குரு தெய்வமென்றும் பக்தியுடனவருக்குப்பணிவிடை செய்யலாம்; பதிவிரதைத் தன்மையையுங் காப்பாற்றலாம் பதி இறந்தவுடன் பிராணனை விடுவது மாத்திரம் வெகு பிரயாசையாகும். அப்படி இறந்து போகிறவர்கள் இவ்வுலகத்திலில்லை. வாயாற் சொல்லுவதேயன்றி அவ்வாறு செய்வது அருமையென்றனள்.

இதைக்கேட்ட பத்மாவதி சிரித்து, 'பதிவிரதையாகிய சீதாப்பிராட்டி நினைத்தமாத்திரத்தில் பூமி படீரென்று வெடிக்கவில்லையா! சகுந்தலை நினைக்க ஆகாயவாணி பேசவில்லையா? உயிர்பிரிந்து போதல் தொல்லையா? இராவணன் இறந்ததும் அவன்மேல் விழுந்து மண்டோதரி பிராணனை விட்டுவிடவில்லையா? ஆகையால் கணவனிறந்தானென்று கேட்ட மாத்திரத்தில பிராணனை விடுபவளே உத்தம பத்தினியாவாள். என்பது பெரியோர் வாக்கு. என்னது கொள்கையும் அதுவே." என்று கூறினாள். இதைக் கேட்ட ராணி புத்தியிலும் கர்வம் பிடித்தவளாகையால் அதை யேற்றுக்கொள்

ளாமல் தன் அந்தப்புரத்தை யடைந்து பாங்கியர்களைக் கூப்பிட்டுப் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள். "பார்த்தீர்களா! சகிகளே! இந்தப் பத்மாவதி மாத்திரம் பத்தினியாம். மற்றவர்களெல்லாம் அவிசாரிகளாக வன்றோ தோன்றுகிறது. இப்பொழுது சொன்ன மாதிரியாகவே முன்னம் ஒருதரம் கணவனிறந்த ஸ்திரீயின் அழுகுரலைக்கேட்டு "ஆஹா! கணவனிறந்து வெகு நாளாகியும் துணிவோடு உயிருடனிருந்துகொண்டு அழுகிறதற்கும் மனம் வருமா! என்னவிப்படி யிருக்கக் கூடுமா?" என்கிற பலவார்த்தைகள் ஆடினாள். இவ்வாறு தன்னைத் தானே புகழ்ந்து கொள்வது அறிவீனமல்லவா? இவ்வுலகில் மணவாளன் மரித்தால் மங்கையர் உடன்கட்டையேறுவார்கள். அப்படிச்செய்வதும் ஏகதேசம். இப்படியிருக்க, இந்த பத்மாவதி புருஷனிறந்ததே தன்னுயிரை விடவேண்டுமென்பதும் அப்படிப் பிராணனை விட்டவள் தான் உத்தம ஸ்திரீயென்பதும் சரியாகுமா? சொன்னபடி தன்னால் நடக்கக் கூடுமா? ஓ! தாதிகளே! எனக்குரிய தாதிகளே! நீங்களே சொல்லுங்கள். தன்னாற் செய்யக் கூடாமையான காரியத்தைப் பிறருக்குச் சொல்லக் கூடுமா? வார்த்தைகளால் வெல்லக் கூடுமா? தன்னால் எடுக்கக்கூடாத பாரத்தைப் பிறரையெடுக்கச் சொல்லும் பாவனைபோலல்லவோ இருக்கிறது" என்று சொன்னாள்.

இதைக்கேட்ட தாதிகள் அம்மா! ராஜன் மெச்சினவளே ரம்பை யென்பதுபோல் உலகத்திலுடன் கட்டையேறுவதே பிரயாசை. அதிலுமிது கலியுகம். இக்காலத்தில் உடனே உயிர் விடுவது அசாத்தியம்;



அப்படி விடுவதற்கு உயிர் தன்வச மிருந்தாலல்லவோ நடத்தலாம். முக்காலத்திலு மிக்காரியம் நடந்திருக்க மாட்டாது. அநேக சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டும் பிறருக்குப்போதித்து அப்படி நடக்கச் சக்தியில்லாப் பேதையைப்போ லிருக்கிறதென்று உபசாரவார்த்தைகள் சொன்னார்கள்.

இதைக்கேட்ட அரசி கெக்கலிகொட்டி நகைத்துப் பத்மாவதியைப் கைத்து "ஓ பாங்கிகளே! இந்த நிமிஷத்தில் நீங்கள் ஒரு பட்சியைக்கொன்று அதனிரத்தத்தில் ஒரு துணியை நனைத்துப் பத்மாவதியிடம் கொண்டுபோய் ஜெயதேவரைப் புலிகொன்றுவிட்டது இது அவருடைய வஸ்திரம் என்று சொல்லுங்கள். உடனே நான் சொன்னவண்ணம் உயிரை விட்டுவிடுகிறாளா பார்ப்போ"மென் றுரைத்தாள்.

அதைக்கேட்ட தாதிகள் அம்மா இது ஒருவேளை காரியத்தில் பொல்லாங்காய் முடிந்தாலும் முடியும். ஆகையால், இக்காரியஞ் செய்யாமலிருப்பதே யோக்கியமென்று சொன்னார்கள். அதைக்கேட்ட அரசி ஓ தாதிகளே! மகாபதிவிரதைகளான கைகேயி சுமித்திரை கௌசலை குந்தி முதலானவர்கள் கணவனிறந்து முயிருடனிருக்கவில்லையா? ஸ்திரீகளுக்குப் புருஷன் பேரில் அதிக இச்சை. அதிலும் தங்கள் பிராணன் மீது அதிக வாஞ்சையல்லவோ! இந்தப் பத்மாவதி சொன்ன வண்ணம் நடப்பது உண்மையாயிருக்குமானால் ஜெயதேவர் கைகால்கள் வெட்டுண்டு பாழுங்கிணற்றில் வீழ்ந்திருந்தபோது எப்படிப் பிரிந்துயிருடனிருந்தாள். அப்போது பிராணனை விடாமலிருந்த;

காரணமென்ன? அல்லாமல் நீங்கள் பதியிறந்தானெனக்கேட்டதே பிராணனை விட்டவர்களைப் பார்த்ததுண்டா? மஹாலட்சுமியான சீதை இராமலட்சுமணர்கள் இறந்தாரெனக் கேள்விப்பட்டவுடன் அவர்களைப் பார்க்க விரும்பினாளேயன்றி உடனே பிராணனை விடத்துணிந்தாளா? இது பொய்யான வார்த்தையல்லவோ?, அந்த மண்டோதரியும் ராவணன்மேல் விழுந்து அழுது உயிர்விட்டாளேயன்றி உடனே உயிர் விட்டாளா? கேட்டவுடன் உயிர் விடுவதற்கொருவராற் கூடுமோ" வென்று சொன்னாள்.

அப்போது தாதிகள் அம்மா இந்த வண்ணம் நடந்ததெனக் கேள்விப் பட்டதுமில்லை, பார்த்ததுமில்லை. ஆனால் நளாயினி சூரியோதயமாகாமற் செய்தாளென்றும் தமயந்தி வேடனை யெரித்தாளென்றும் சந்திரமதி அக்கினியிற் குதித்தாளென்றும் சாவித்திரி இறந்த புருஷனுக்கு உயிர் கொடுத்தாளென்றும் சீதை கணவனுடன் வனஞ்சென்றாளென்றும், புராணங்களில் முறையிடுவதேயன்றி பதியிறந்தாரெனக் கேட்டவுடன் சதியிறந்தாளென்றெந்தப் புராணத்திலுஞ் சொல்லவில்லை. ஆனாலும் யார் எண்ணம் எப்படி இருக்கக் கூடுமோ? நம்மாலறியலாகுமோ? முன்னம் இப்படி நடந்திருந்தாலு மிருக்கலாம். இல்லவே இல்லையெனச் சொல்லவுங் கூடாதெனச்சொல்ல, மேலுநன் மனைவி "ஓ தாதிகளே! ஆதிமூலப் பொருளாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய புதல்வியாகிய சுந்தரி அவ்வாசுதேவனுடன் பிறந்தாளாகிய சுபத்திரை பெற்ற அபிமன்யு என்னுந் தன் கணவன் இறந்தானென்



பதைக் கேட்டவுடன் தன் பிராணனை விடாமலிருந்தாளென்றால் குட்சியினிமித்தம் பிட்சை யெடுத்துண்ணும் துச்சகுணமுள்ள இப்பத்மாவதி ஜெயதேவரிறந்து போனாரென்பது கேட்டமாத்திரத்தில் உயிரை விட்டு விடப்போகிறாளா? உயிரை விடுவது லேசான காரியமா? வாளினாலாவது விஷத்தாலாவது பிராணனை விட எத்தனிப்பாள். அப்போது அப்படிச் செய்யவொட்டாமல் தடுத்து என்னைக் கூப்பிடுங்கள். நான் வந்து தடுத்துப்போடுகிறேன் சீக்கிரம் நான் சொன்னபடி செய்யுங்கள். ஒரு பறவையின் கழுத்தை அறுங்கள்" என்று சொல்லத் தாதிகள் பயந்து "ஓ அம்மா! பத்மாவதி மகாபதிவிரதை யென்று சொல்லுகிறார்கள். கணவனைப் பிரிந்த நாளுடுத்த வஸ்திரத்துடனேயே வெகு நாள் வரைக்கும் இருந்து அந்த வஸ்திரத்துடனேயே கணவனைக் கண்டாள். இதுவேபோதுமான சாட்சியா யிருக்கிறது. அல்லாமலுங் குணங்குறிகளும் அப்படியே காண்கிறது ஒருவேளை பிராணனை விட்டாலும் விடுவாள். ஆகையால் இக்காரியஞ்செய்யாமலிருப்பதே நலமென்று மறுத்தார்கள்.

இராணி தாதிகளைப் பார்த்து 'ஓ தாதிகளே! நான் முதலில் பத்மாவதியிடம் போயிருக்கிறேன். நீங்கள் நான் சொன்னபடி செய்துவாருங்க'ளென்று கட்டளையிட்டுப் பத்மாவதியினிடம்போய் 'அம்மா! காட்டிற்குப்போன அரசன் மீதும் ஜெயதேவ ஸ்வாமிகள் மீதும் பருத்துக்கொழுத்த வேங்கை யொன்று பாய்ந்ததாம் என்ன கதியானார்களோ நான்போகும் போதே வேண்டாமென்று தடுத்தேன் என் வார்த்தையைக்

கேட்காமற் போனார்கள். என்ன விபரீதம் நடந்ததோ கைகால்களில்லாத சுவாமிகளுக்கு என்ன துன்பம் நேரிட்டதோ? எனக்கோ மெத்த சந்தேகமாயிருக்கிறது. ஆனால் தாதிகளைத் தூதுவர்களுடன் அனுப்பியிருக்கிறேன். ஒரு நொடியில் உண்மை தெரியும்' எனப் பற்பல விபரீத வார்த்தையாடி துக்கமுகத்தைக் காட்டினாள் பத்மாவதியி னுள்ளத்தில் துன்பத்தை நாட்டினாள். விசனக்கினியை மூட்டினாள். இதைக்கேட்ட பத்மாவதி அரசியின் வார்த்தையை மெய்யென நம்பி மனங்குழம்பி! ஐயோ பாவியாகிய நான் சுவாமிகளுடன் போகாமல் அறிவீனத்தினா லிங்கிருந்து விட்டேனே. முன்னம் இப்படியே கெட்டேனே. துன்பத்துக் குட்பட்டேனே, நமது சுவாமிகள் புலியென்றும் பூதமென்றும் பார்க்கமாட்டாரே எல்லாம் ஈசுவர சங்கல்பப்படி முடியுமென்று நம்முடம்பைப் பாதுகாவாரே, என்று பலவிதமாக எண்ணி, நிச்சயமாக அவர் மேற் புலிபாய்ந்ததா என்று பலதரம் கேட்டாள். அதற்கு இராணி ஆம் ஆம் என்றனள். அவள் வார்த்தையை மெய்யென்று நம்பி துக்கிக்கத் தொடங்கினார் அந்த சமயத்தில் தாதிகள் ராஜாத்தி சொல்லிய மாதிரியே செய்து உதிரந்தோய்ந்த துணியை எடுத்துக்கொண்டு வந்து பத்மாவதியின் எதிரில் வந்து பத்மாவதியின் முகவிலாசத்தையும் அழகு மேனியையும் தேம்பித் தேம்பி பழுவதையும் பார்த்து மிகுந்த இரக்கமுற்றவர்களாய் சுவாமிகள் இறந்து விட்டார் என்று எப்படிச் சொல்ல மாட்டுவோம் சொன்ன மாத்திரத்திலேயே உயிரை விட்டுவாள்போ லிருக்கிறதே. இதிலென்ன விபரீதம் விளையுமோ என்று எண்ணங்



கொண்டவர்களாய் ஒன்றுஞ் சொல்ல நாவெழாதவர்களாக இருந்தார்கள். இப்படிப்பட்ட கொடுமையான அபாண்டத்தை நாம் எப்படிச் சொல்லுவதென்று கண்ணீர் விட்டுக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது அரசி விரைவாயெழுந்து இதென்ன வஸ்திரம் இரத்தமயமாயிருக்கிறதே இது ஜெயதேவஸ்வாமிகள் அணிந்துகொண்டிருந்த தல்லவா அவர்மீது புலி பாய்ந்ததாகக் கேள்விப் பட்டோம். அது உண்மையாகப்போய் விட்டதனால் சுவாமி மரணமடைந்தாரோ? என்று சொல்லிக்கொண்டே தாதிகளைப்பார்த்து சைகைசெய்தாள். இராஜாத்திக்குப் பயந்து தாதிகள் ஆமாமம்மணி! சுவாமிகளைப் புலி கொன்றுவிட்டதாம் என்று சொல்லிவிட்டு அழுதார்கள். அதைக்கேட்ட பத்மாவதி, ஆஹா! இது நிச்சயமான வார்த்தையா என அரசி 'உண்மையில்லாத வார்த்தைகளைப் பாங்கிகள் சொல்லுவார்களா'? என்ற சொன்னாள்.

இதைக்கேட்ட வுடனே பத்மாவதி பூமியில் விழுந்து கடகடவென் றுருண்டு அழுது புரண்டு முகத்திலும் மார்பிலுங் கரங்களாலடித்துக் கொண்டு ஓ! பிராணநாயகா என்று கூவிக்கொண்டு மனஞ் சோர்ந்து சாவுக்குச் சரியான மூர்ச்சை யடைந்து உடனே தெளிந்து ஆ! என் பிராணநாயகர் என்னை விட்டிறந்தபின் இனி அரை நொடிப்பொழுதேனும் என் பிராணனிருக்குமா? ஓ! தெய்வமே அற்பமான புலியடித்துக் கொல்லவும் நீ பார்த்திருந்தையே! என்னைத் தனித்திருக்கச் செய்தாயே என் கழுத்தைக் கொய்தாயே என் பிராணநாயகா நானும் இதோ வந்தேன் வந்தேனென்

றலறி வெகுவாய்ப் பதறிக் கதறி நாயகனைத் தொழுது கொண்டே பிராணனை விட்டாள். அந்த ஆத்துமாவானது சோதிப் பிரகாசமாகி ஆகாய மார்க்கமாகப்போய் விட்டது. இந்த அதிசயத்தைக்கண்ட அவ்வூரந்தணர்கள் ஆச்சரியங் கொண்டு இதென்ன விந்தையென்று பத்மாவதியினிடத்துக்கு வந்து விஷயந்தெரியலானார்கள். தங்கள் ஸ்மரணை கெட்டார்கள். அங்கேயிருந்த ராணியும் பிரமைகொண்டு திக்குமுக்கிட்டு ஒன்றுந் தோன்றாதவளாய் அசைவற்று நின்றிருந்தாள். தாதிகளோ அங்கங்கே விழுந்து விட்டார்கள். பிறகு அரசன் மனைவி ஐயோ! மோசம்வந்தது இதற்கு நானென்ன சொல்வேன். உலகத்திலிப்படிப்பட்டவர்களிருக்கிறார்களோ! ஆஹா! நான் இருவ அபலாரை நம்பாள் என்கிறபடி நான் பாதகியாயிருக்கும் பத்தினியைக் கொன்று விட்டேனே! அரசன் செய்த தர்மத்தையெல்லாம் பாழாக்கி விட்டேனே! நரகத்துக்காளாகி விட்டேனே! பாவியாய் நடுத்தெருவில் நின்றுவிட்டேனே! பலவிதங்களாய்ப் பிலாந்து கண்ணீருதிர்த்து கைகளைப் பிசைந்து பூமியிலுழைந்து மெய்மறந்து பெருமூச்சு விட்டு மூர்ச்சையாய் விழுந்து விட்டாள்.

அதைப் பார்த்த பாங்கிகள் கைகால் நடுக்கமெடுத்து இவளும் இறந்து விட்டாளோ! அரசன் வந்தால் என்ன சொல்லுகிறதென்று நினைத்தவர்களாய் ராணிமேல் பனிநீர் தெளித்து விசிறிகொண்டு விசிறினார்கள். அப்போது அரசி மூர்ச்சை தெளிந்து எழுந்து பத்மாவதியைப் புரட்டிப் பார்த்தாள். மூச்சின்றிப் பிணமாயிருக்கக்கண்டு ஐயோ! பிராணன் போய் விட்டதே! இராஜ தர்மங்கெட்டதே! ஸ்திரீஹத்தி மேலிட்டதே!



என்னைச் சுட்டதே! பட்டணத்தைப் பாவஞ் சூழ்ந்து கொண்டதே! இனி என் மானம் போச்சுதே! நானே தேடிக்கொள்ளலாச்சுதே அபகீர்த்தி வாச்சுதே! பாங்கிகளே! இனி நாமென்ன செய்யலாம் யாரை நோகலாம் நான் அரசன் வருவதற்கு முன்னே பிராணனை விட்டுவிடுகிறேன். விஷங்கொண்டு வாருங்கள். குடித்து உயிர் விடுகிறேன் இனி என் பிராணனை அரைக்கணமும் வைக்கலாகாது. பாவியின் முகத்தை மன்னனுக்குக் காட்டலாகாது இனி அரைக்கணமுஞ் சாகாமலிருக்க மாட்டேனென்று தரையில் தலையைமோதி பிராணனைவிட எத்தனித்தாள். அப்பொழுது தாதிகள் ராணியை அவ்வாறு செய்யவொட்டாமல் தடுத்துப் பிடித்துக்கொண்டு ஓவென்று அலறி யழத்தொடங்கினார்கள் அங்கிருந்த சில பிராமணர்கள் இவைகளையெல்லாம் பார்த்திருந்து இராணியை நோக்கி அரசியே பத்மாவதியை எழுப்ப ஜெயதேவஸ்வாமிகளாலாகும் அவர்திணைக்காலிது அருமையோ. சுவாமிகள் வந்தவுடன் நிகழ்ந்ததைக் கபடமின்றியுரைத்தால் அவர் பத்மாவதியைத் தடையின்றி எழுப்புவார் உன்னைத் தேற்றுவார் தடையின்றிக் காப்பாற்றுவார் பாவத்தை மாற்றுவார் துயரத்தை மாற்றுவார் என்றுரைத்துத் தங்களிருப்பிடஞ் சென்றார்கள். பிறகு தாதிமார்கள் பத்மாவதியை ஓர் அறையில் அடக்கஞ்செய்து அரசன் மனைவி வேந்தன் வரவை எதிர் பார்த்திருந்தாள்.

இங்கு இவ்வாறிருக்கையில் காட்டிலிருந்து நாட்டை நாடிவந்த அரசன் ஜெயதேவருடைய பெரு

மையைக் கொண்டாடி. இன்றைக்குப் பரமசிவனு
தரிசனம் கிடைக்கும்படியான பாக்கியமேதோ இப்
பிறப்பிற் செய்த தவமோ? முற்பிறப்பிற் செய்த
தவமோ? சங்கரனைத் தரிசிக்கும்படியான பாக்கியம்
குரு சுவாமிகளா லல்லவோ நேரிட்டது. பத்மாவதி
யின் வாக்கியமல்லவோ கள்ளரைப் பாதலத்தில் அமி
ழ்த்தி விட்டது. சுவாமிகள் பாழுங் கிணற்றில் விழு
ந்ததனாலல்லவோ என் தாய் வெகு நாள் பிரிந்திருக்க
நேர்ந்தது. மகாபதிவிரதையான பத்மாவதியும் சாந்
தமூர்த்தியான சுவாமிகளும் நமது பட்டணத்தி லெழு
ந்தருளியிருக்க நாம் என்ன தவஞ் செய்தோமோ?
ஆஹா! நமக்கும் பாக்கியமே பாக்கியம்! நமது
பெரியோர்கள் சிலாக்கியமே சிலாக்கியம்! காட்டில்
பரமசிவனைத் தரிசித்தோம். இனி நாட்டில் மஹா
விஷ்ணு தரிசனந் தருவாரா? சுவாமிகளுக்குக் கை
கால்கள் வளருமா? எனக்கானந்தந் தருமா? இன்
றைக்கு நானடைந்த இன்பமே மேலான இன்பம்
என்று பத்மாவதியையும் ஜெயதேவரையும் துதித்துக்
கொண்டே பட்டணத்திற்குள் பிரவேசித்தான்.

அப்போது நகரத்தில் இருள் சூழ்ந்திருப்பதை
யும் வேதஓசையும் பகவந்நாம சங்கீர்த்தனமும் இல்
லாமலிருப்பதையும் அழுகை ஓசை மிகுவதையும் சந்
தோஷமில்லாமல் எல்லோரும் தங்கள் தங்கள் வீட்
டை விட்டு வெளி வராதிருப்பதையும் கண்டு குரு
ஸ்வாமிகளைப் பார்த்து சுவாமி! இப்படிப் பட்டணம்
பாழடைந்திருப்பதற்குக் காரணம் யாது? நமது பட்
டணத்தில் பாவம் நேரிட்டதோ? அல்லது அடியேன்
செய்த கொடுமையோ ஒன்றுந் தோன்றவில்லையே?



பட்டணம் சென்றதும் பகவான் காட்சி தந்தருளுவ
ரென்றுரைத்த பரமசிவத்தின் வாக்கு, பொய்யாய் விடு
ம்போலிருக்கிறதே; என்ன காரணத்தினாலோ என்
நெஞ்சந் துடிக்கிறது!" என்று சொன்னான். அதைக்
கேட்ட சுவாமிகள், நீ சொன்னபடி எனக்கும் நெஞ்
சந் துடிக்கிறது. உத்தமரில் யாருக்கோ விபத்து வந்
திருக்கிறது போல் காண்கிறது. சீக்கிரம் பிரஜை
களைக் கேளுமென்று சொன்னார். உடனே அரசன்
ரதத்தை விட்டுக் கீழிறங்கி அங்கிருந்தவர்களை நோக்
கி இப் பட்டணத்தில் என்ன தீங்கு நேரிட்டது சொல்
லுங்களென்று கேட்டான். அதற்கு ஜனங்கள் ஒன்
றுஞ் சொல்லமாட்டாமல் வாளாவிருந்தார்கள்.
பிறகு மந்திரிகளை நோக்கிக் கேட்டான். அதற்கு
மந்திரிகள் அரசனை நோக்கி, "பிரபுவே! நமது பட்ட
ணத்தில் தீங்கு நடந்திருக்கிறதென்பது உண்மை.
அது உமது மனைவியைக் கேட்டாலன்றி வெளிப்
படாது என்று சொன்னார்கள். அதைக் கேட்ட மன்
னன் மிகுந்த வாட்டமுற்றவனாய் அந்தப்புரத்திற்குச்
சென்று பார்க்கும் பொழுது, அங்கு மனைவியைக்
காணோம். ஆனால் ராணியின் அழுகுரல் மாத்திரம்
கேட்டது. பாங்கிகளைக் கூப்பிட்டு விஷயமென்ன
வென்று விசாரித்தான். அவர்கள் உள்ள சங்கதியை
அப்படியே வெளியிட்டார்கள். கேட்ட அரசன்,
இடியேறுண்ட நாகம்போல் பதைத்து, "ஆ! பத்மா
வதி என்னும் தாயார் மரணமடைந்து விட்டார்களா!"
என்று கத்திக்கொண்டே மூர்ச்சையாய் விழுந்து
விட்டான்.

அப்பொழுது ஜெயதேவர் அவ்விடத்துக்கு வந்து, அரசன் மனைவி அழுவதையும், அரசன் மூர்ச்சித்துக் கிடப்பதையும் கண்டு தாதிகளை நோக்கி, அரசிக்கு என்ன தீங்கு நேரிட்டது சொல்லுங்கள் என்று கேட்டார். அதைக் கேட்ட தாதிகள் நடந்த விஷயங்கள் அனைத்தையும் ஒன்றுகூட விடாமல் சொல்லி, பத்மாவதியின் ஆத்மா ஜோதிவடிவமாய்ப் போய் விட்டது என்றுங் கூறினார்கள். அதைக் கேட்டு அவர் பிரமித்து ஆ! நானிறந்தேனெனக் கேட்டு உயிர் துறந்தாளா? என்மேலிவ்வளவு பக்ஷம் வைத்திருந்தாளா! அன்பே மரணத்துக் கிடந்தந்ததோ? இவ்வுலகி லிப்படியுமுண்டோ? என்று பற்பல விதங்களாகத் துக்கித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அரசன் மூர்ச்சை தெளிந் தெழுந்திருந்து வாளையுருவிக் கையிலேந்திக்கொண்டு தன் மனைவி யிருக்குமிடத்தை நோக்கி அவளை வெட்ட ஓடினான். உடனே அரசன் மனைவி மிகப்பயந்து ஜெயதேவ ஸ்வாமிகளைச் சரணமடைந்து காப்பாற்ற வேண்டுமென வேண்டிக் கொண்டாள். உடனே ஜெயதேவர் அரசனை நோக்கி "ஐயா! பதறவேண்டாம். சற்றுப் பொறுங்கள். ஆத்திரக்காரருக்குப் புத்திமட்டு என்பதையறியீரோ?" என்று சொல்லி, அரசன் மனைவியைப் பார்த்து, "அழவேண்டாம் அம்மணி! நானிருக்கிறபோது உங்களுக்கு ஒரு குறையும் நேரிடாது. பத்மாவதி மடிந்தது கடவுள் செயலேயன்றி வேறல்ல. உன்மேல் ஒரு குற்றமும் கிடையாது. எப்பொழுது பிறக்கவேண்டுமோ அப்பொழுது பிறப்பும், இறக்க வேண்டியபோது இறப்பதும் உயிர்களுக்கு இயற்கை. ஆகையால் பத்மாவதி



மடிந்தது கடவுள் செயலேயன்றி வேறல்ல; நிந்தையில்லாமல் பொந்தி போகாதென்பதுபோல, வீணாயுன்மேல் நிந்தையேற்பட்டது." என்று உரைத்து அரசனை நோக்கி, உனது கோபத்தையடக்கு. பத்மாவதியை அடக்கஞ் செய்யும் வழியைத் தேடு, என்று சொன்னார். இதைக் கேட்ட அரசன், "சுவாமி! நல்ல வார்த்தை சொன்னீர்கள். என் தாயைக் கொலை செய்த பாதகியை இரு துண்டாய் வெட்டிப் போட்டு நானும் வெட்டிக்கொண்டுயிர் விடுகிறேன்; பிறகு எல்லோரையும் அடக்கஞ் செய்யும் வழியைத் தாங்கள் பாருங்கள்" என்று சொல்லி, அரசியை வெட்ட எத்தனிக்கையில், ஜெயதேவர் பரபரப்புடனெழுந்து அரசன் கையைப் பிடிக்க எத்தனித்தார். அவ்வளவில் பகவத் கடாக்ஷத்தினால் கைகால்கள் வளரப் பெற்றார். தனக்குக் கைகால்கள் வளரப்பெற்றதையுமுணராமல் விரைவுடன் போய் அரசன் கையைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டார். பிடித்துக்கொண்டு ஸ்ரீ மந்நாராயணனைப் பலவாறு தோத்திரஞ் செய்யத் தொடங்கினார். ஸ்ரீ மஹாவிஷ்ணுவை அவரது அவதாரங்களில் செய்த எல்லாத் திருவிளையாடல்களையும் கூறித் தோத்திரஞ் செய்தார். அப்போது பகவான் பிரத்தியக்ஷமானார். உடனே அரசன் தன் கையிலிருந்த வாளைக் கீழே போட்டுவிட்டு, பகவானை சாஷ்டாங்கமாகத் தெண்டனிட்டு நமஸ்காரஞ்செய்தான். உடனே பகவான் ஜெயதேவரைத் தழுவிக்கொண்டு, ஓ! புண்ணிய சீலனே! என்னை வருந்தி யழைத்த காரணம் யாதோ? உரைப்பாய்." என்று கூறினார்.

அப்பொழுது ஜெயதேவர், "ஓ அனுதரக்ஷகா, இப்பேதையேன் தங்களைப் பிரத்தியக்ஷமாய்ச் சேவித்த பிறகும் வேறு வரமும் வேண்டுமா? அடியேன் தேவரீரை வரவழைத்த காரணம் தேவரீருக்குத் தெரியாதோ; அப்படியிருக்க என்னை வினவுதலும் வேண்டுமோ" என்று அடிகளில் தண்டனிட்டார். அப்போது பகவான் ஜெயதேவரை வாரியெடுத்து மார்போடணைத்துக்கொண்டு, "ஓ சீலனே! உன்னாலாகாத காரியமுமுண்டோ? நீ நினைத்தால் பத்மாவதி உயிர் பெற்றெழாளோ? நானென்னும் அகங்காரத்தைக் கொள்ளக்கூடாதென்றல்லவா என்னை யிவ்வளவு வருந்தியழைத்தாய். ஜீவகாருண்யத்தில் சிறந்த உத்தமனே! ஆசாபாசங்களைத் துறந்தவனே! சாந்தஸ்வரூபனே! பிரம்மானந்த நித்திரையில் ரமித்தவனே! உன் மனைவி பத்மாவதியை எழுப்பிவிடட்டுமா? அல்லது இவ்வரசனுக்குச் சிரஞ்சீவிப் பட்டங்கொடுக்கட்டுமா?" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

அதைக் கேட்ட அரசன் பகவானைப் பணிந்து, எம்பெருமானே! எனது தாயாகிய பத்மாவதியம்மாளையே எழுப்பித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டான். உடனே பகவான், "பத்மாவதி எழுந்திருப்பாயாக!" என்று சொல்லியருளினர். அப்போது பகவானுடைய வாயிலிருந்து ஒரு ஜோதியானது புறப்பட்டு பத்மாவதியினுடலில் புகுந்தது. பத்மாவதி நித்திரை நீங்கி யெழுந்தவள்போல் எழுந்திருக்கலானாள். எழுந்து ஜெயதேவஸ்வாமிகளது திருவடிகளில் வணங்கி, பகவானையும் வணங்கி ஸ்வாமிகளுக்குப் பின் புறமாய் நின்றாள்.



உடனே பகவான் ஜெயதேவருக்கும் பத்மாவதிக்கும் அரசனுக்கும் பிரும்மஞான மடையும் வரத்தைக் கொடுத்துப் போய்விட்டார். பிறகு வெகுகாலம் வாழ்ந்திருந்து மூவரும் மோட்சத்தை அடைந்தார்கள்.

**நாயகன்பொருட்டு உயிர் தரிப்பவளே நற்குலமங்கை.**

## 14. சுசீலை சரித்திரம்.

வடமதுரைக் கடுத்த அவந்தி நகரத்தில் பிராமணர்கள் வாசஞ்செய்யும் அக்கிரகாரத்தில் சுதாமா என்றொரு பிராமணரிருந்தார். அவர் இளமையிலே பலராமன் கிருஷ்ணன் ஆகிய இருவர்களுடன் சாந்தீபர் என்னுங் குருவினிடம், சகல சாஸ்திர புராணங்களையும் கற்றுத்தேர்ந்தவர். கண்ணபிரானிடத்தில் பக்தி கொண்டவர். இவ்வாறிருக்கையில் அவருக்கு முதுமைப் பருவமானது வரத்தொடங்கிற்று. அக்காலத்தில் வறுமையும் வளர்ந்து வந்தது. சுதாமா அந்த தரித்திரத்தை லட்சியம் செய்யாமல் பகவானிடத்தில் தைலதாரை போல் இடைவிடாத பக்தியைச் செலுத்திவந்தார். இவர் மூப்புக்காலத்தில் தமக்குத் தொண்டு செய்வதற்காக பதிவிரதைக் குணமுடைய சுசீலை யென்பவளை மணந்தார். விவாகஞ் செய்துகொண்ட பிறகு அவருக்கு இருபத்தெழுவர் புத்திரர் உண்டாயினர்.

சுசீலை கலியாணமானது முதல் தாய் தந்தை குரு தெய்வம் ஆகிய சகலமும் கணவனே யென்று மனத்துட்கொண்டு பிரிய வசனங்களுடன் நாயகனுடைய

பணிவிடைகளைச் செய்து வந்தாள். சுதாமா காட்டிற்குச் சென்று, விளைந்து கீழே யுதிர்ந்து கிடக்கும் புல்லரிசிகளை இரத்தினங்களைத் திரட்டுபவர் போல் ஒவ்வொன்றாய்த் திரட்டி ஒரு பிடி சேர்ந்தவுடன் அதைக் கொண்டுவந்து மனைவியினிடம் கொடுப்பார். அவளதை வாங்கிக் குத்திக் கஞ்சியாகக் காய்ச்சி அதில் ஒரு பாகத்தை அதிதிகளுக்குக் கொடுத்து விட்டு, மிகுந்ததைக் கணவனுக்கும் குழந்தைகளுக்கும் கொடுத்து விட்டுத் தான் பட்டினியா யிருப்பாள். ஒரு குழந்தைக்குக் கஞ்சி வார்க்கும்போது இன்னொன்று கையை நீட்டும். வேறொன்று கையைப் பிடித்துக்கொள்ளும். அது கண்டு மற்றொரு குழந்தை தேம்பித்தேம்பி அழும். அவள், இவைகளை எல்லாம் சமாதானம் செய்து மார்போடணைத்துத் தேற்றுவாள்.

ஒரு சமயம் குழந்தைகள் "அம்மா! பக்கத்து விட்டுப் பையன் கடுக்கன் காப்பு அரைஞாண் முதலியவற்றை அணிந்து கொண்டிருக்கிறானே, நீ எனக்குமட்டும் ஏன் அவைகளை அணியமாட்டேனென்கிறாய். நான் செய்த குற்றமென்ன? இப்பொழுதே எனக்கு அவைகளை எடுத்து அணிவாய்'?" என்று கேட்கும். இதைக் கேட்டு இன்ன பதில் சொல்வதென்று அறியாதவளாய் மூர்ச்சித்துப் பிறகு நாளைக்கு அணிகிறேன் என்று சொல்லிச் சமாதானம் செய்வாள். பிறகு மறுநாள் கேட்கும் போதும் இப்படியே கடன் பட்டவன் கொடுத்தவனுக்குச் சொல்லும் பதிலைப் போலவே நாளைக்கு நாளைக்கு என்றே சொல்லுவாள். இவ்வாறு சொல்லிவருவதைப் பார்த்து ஒரு நாள் அந்த இருபத்தேழு பிள்ளைகளும்



ஒன்று கூடி இன்றைக்குக் கொடுத்தாலே கொடுத்த படி என்று தொந்தரவு செய்யத் தொடங்கினர். அவர்களுடைய உபத்திரவத்தைப் பொறுக்க மாட்டாதவளாய் சுசீலை கணவனைப் பார்த்துத் தண்டனிட்டுப் பின் வருமாறு கூறலானாள்.

"ஓ எனது பிராணேசரே! நமது குழந்தைகள் பசி தீர அன்னமில்லாததினால் ஏங்கி யழுது சோர்ந்து போயிருக்கிறார்கள். ஐயோ! அறுசுவை யன்னமில்லாமலிருந்தாலும் கஞ்சியாவது வயிறு நிறையக் குடித்தாலல்லவோ தேகத்தில் பலமிருக்கும். அவர்கள் செய்கிற துன்பங்கள் என்னாற் சகிக்கக் கூடவில்லை. அண்டை அயல் வீட்டுப் பிள்ளைகள் அறுசுவையோடு கூடிய அன்னத்தை மூன்று வேளையும் புசித்து இடையில் பலகார வகைகளையுந் தின்றும் நல்ல ஆடையாபரணங்களை அணிந்தும் விளையாடுவதைக் கண்டு இவர்கள் தாங்களும் அம்மாதிரி வேண்டுமென்று கேட்கிறார்கள். இத்தகைய கொடிய தரித்திரத்தைத் தாங்கள் நினைத்த மாத்திரத்தில் அதமாக்கி விடுவீர்கள். லக்ஷ்மீபதியாகிய ஸ்ரீகிருஷ்ண பகவானை நண்பராக அடைந்துள்ள தங்களுக்கு விரும்பின மாத்திரதில் செல்வம் கிடைக்கக் கூடியதே" என்று சொன்னாள்.

அதைக் கேட்ட சுதாமர், "பெண்ணே! நான் சொல்வதைக் கவனமாகக் கேள். எறும்பிலிருந்து யானைவரையில் சகல ஜீவராசிகளிலும் உள்ளும் புறமுமாய் வசிக்கும் கண்ணபிரான், எல்லா உயிர்களையும் காப்பாற்றுபவரா யிருக்கையில் உன் பிள்ளைகளை ரட்சி

ப்பதற்கு நான் என்ன கர்த்தனோ? அவரவர் முன் ஜென்மங்களிற் செய்த வினைகளுக்கேற்றபடி தரித்திரர்களாகவோ செல்வர்களாகவோ பிறப்பார்கள். சிவபெருமான் கையில் தாங்கியிருப்பதோ பொன்மலை; தான் குடியிருப்பதோ வெள்ளிமலை; தனது நண்பனோ நவநிதிகளுக்குந் தலைவனான குபேரன்; அவரோ தேவர்களுக்குத் தலைவர். இப்படிப்பட்டவர் கபாலத்தைக் கையிலேந்திப் பிச்சையெடுக்க நேரிட்ட காரணம் என்ன? அதுபோல நாமும் நமது பிள்ளைகளும் பூர்வத்தில் என்ன கர்மத்தைப் பண்ணியிருக்கிறோமோ அதற்குத்தக்க பலனை ஈசுவரன் நமக்கு அளிக்கிறார். வீணில் ஏன் காலத்தைக் கழிக்கிறாய்? பகவந் நாமத்தைத் தியானஞ்செய்து கொண்டிரு" என்று கூறினார்.

இவ்வாறு கூறிய மணாளனது வார்த்தையைக் கேட்ட சுசீலை, "ஸ்வாமி! இப்படிச் சொல்லிவிட்டால் என்ன செய்கிறது? குழந்தைகள் படுந்துன்பத்தைப் பார்க்க என்னால் முடியவில்லையே! தெய்வம் காட்டுமேயன்றி ஊட்டாது" என்று பெரியோர் சொல்வார்களன்றோ? ஆகையால் தம் துணைவராகிய கிருஷ்ண பரமாத்மாவினிடம் போய் நமது குழந்தைகள் பசியின்றிப் புசித்திருக்கப் போதுமான திரவியம் வாங்கி வரல் வேண்டும்" என்று கூறினள். இதைக்கேட்ட சுதாமா "பெண்ணே! நான் பரந்தாமனாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவானைச் சேவிக்கப் போகிறேனாகையால் அரசனிடத்திற்கும், ஆசானிடத்திற்கும், தெய்வத்தினிடத்திற்கும், விருத்தர்களிடத்திற்கும், மனைவியிடத்திற்கும், குழந்தைகளிடத்திற்கும் புத்திமான்கள் வெறுங்கை



யோடு போகலாகாது. ஆகையால் நீ ஏதாவது அவருக்குப் போக்கியமான பலகாரவகைகள் செய்து தருவாயாகில் நான் கொண்டுபோய்க் கொடுத்துப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறினார்.

அதைக் கேட்ட சுசீலை, நாள்தோறும் கணவன் கொண்டுவந்து கொடுக்கும் நெல்லில் மிகுத்து வைத்திருந்ததை அவலாகச் செய்து, இனி கிழிய இடமில்லாதிருந்த ஒரு கந்தையை அநேக முடிப்புகளாக மடித்து, அதில் அவலை முடிந்து கணவன் கையிற் கொடுத்து வணங்கி நின்றனள். சுதாமா அந்த அவலை வாங்கிக் கொண்டு காடு மலை வனங்களைக் கடந்து துவாரகைக்குப் பிரயாணமாயினர். சில நாளில் கடற்கரையை அடைந்து, அங்குள்ள ஓடக்காரனை நயமொழிகளால் வேண்டி ஓடத்திலேறி துவாரகை சேர்ந்தனர். அவ்விடத்தில் அரண்மனையை அடைந்து அநேக தேசத்தரசர்களாலும் பதினாயிரம் கோபியர்களாலும் சூழப்பட்டிருக்கும் பகவானைக்கண்டார். இவரைக் கண்டவுடனே பகவான் எதிர்கொண்டழைத்துக் கட்டிக்கொண்டு ஆசனத்திலிருத்தி அர்க்கிய பாத்ய முதலிய சோடசோபசாரங்களுஞ் செய்து, அறுசுவையன்னத்தை யூட்டிப் பஞ்சணையில் படுக்கவைத்து, அவர் பாதங்களை வருடி, "ஸ்வாமி! தங்களுடைய பாததூளி பட்டதனால் இந்நகரம் புனிதமடைந்தது. தங்கள் தரிசனத்தால் நானும் கிருதார்த்தனானேன். தேவரீருடைய கிருகத்தில் பெண்டு பிள்ளை முதலிய எல்லோரும் க்ஷேமமாயிருக்கிறார்களா? அநேக நாட்களுக்குப் பின் என்னிடத்திற்கு வந்தீரே? எனக்கு என்ன கொண்டுவந்தீர்?" என்று கேட்டார்.

பொழுது சுதாமர் அறுசுவை யுண்டிகளும் புசுிய
பலாதிகளும் உண்ணும் இயல்புள்ள பகவானுக்கு
இந்த ஊசல் அவலையா கொடுக்கிறது; இது பாலு
ண்பவனுக்குக் காடியைக் கொடுத்தாற்போலுமாயி
ற்றே'' என நினைத்து ஒன்றும் பேசாமலிருந்தார்.
உடனே பகவான் அவரது அங்கம் முழுவதையும் பரி
சோதித்துக் கந்தையிற் கட்டிவந்த அவலை எடுத்து
ஒரு பிடி வாயிற் போட்டுக் கொண்டு மகாபதிவிரதா
சிரோமணியால் செய்யப்பட்ட அவல் மிகவும் ருசி
யாயிருக்கிறதென்று நினைத்து அப்பதிவிரதைக்கு
அஷ்ட ஐச்வர்யங்களும் உண்டாகக் கடவது என்று
திருவுள்ளத்தில் நினைத்தருளினார். மற்ற அவலை அங்
கிருந்தவர்கள் புசித்துச் சந்தோஷித்தார்கள். பிறகு
பகவான் சுதாமாவை நோக்கித் தாங்கள் போய்வரலா
மென்று புகன்றனர். சுதாமாவும் பகவானுடைய
சாமீப்யத்தில் அடைந்த ஆனந்தப் பெருக்கால் தாம்
கோரிவந்த விஷயத்தை மறந்து விடைபெற்றுக்கொ
ண்டு கடற்கரை யடைந்து ஓடக்காரனுக்கு முன்
போலவே இன்மொழி புகன்று அக்கரை போய்ச்
சேர்ந்தார். அப்பால் தன்னூரை நோக்கிச் செல்கை
யில், அவர்கட்டியிருந்த கந்தையானது பீதாம்பரமாக
வும், துளசிமணிமாலை முத்து மாலையாகவும், கையில்
தரித்திருந்த புற்பவித்திரம் நவரத்தின கசித [illegible] வித்ர
மாகவும், அநேக விரதங்களினாலுப [illegible] திக
ளினமையாலும் எலும்புமாத்திரமேயிருந் [illegible] மா
னது பகவான் கரத்தினால் [illegible]ட்டிய அன் [illegible] திக
ளான மன்மத வடிவத்தையும் அடை [illegible] தை
எல்லாம் கவனித்த அவந்திராஜன் தூதர்க [illegible] சனி



டம் சென்று அறிவித்தார்கள். உடனே அரசன்
தனது ரதத்தைக் கொண்டுபோய் அதில் முனிவரை
ஏற்றிக்கொண்டு அவரை அடிபணிந்து அவரது கிரா
மத்தருகில் கொண்டுவந்து விட்டுப் போனான். அவ்
விடஞ்சென்ற சுதாமா தமது வீடு அடையாளந் தெரி
யாமல் திகைத்துக் கடைசியாய்த் தமது மனைவியா
லனுப்பப்பட்ட தோழியால் தெரிந்துகொண்டு போய்ச்
சேர்ந்தார். வீட்டை அணுகும்போது சுசீலையான
வள் பொற்பாத்திரத்தில் ஜலமும் பொற்றட்டில் பூஜை
க்குவேண்டிய திரவியங்களு மெடுத்துக் கொண்டு
பொற்றட்டின்மேல் கணவன் திருவடிகளைப் பொரு
ந்த வைத்து ஜலத்தினால் திருமஞ்சனம் செய்து அக்ஷ
தைகளா லர்ச்சித்து இன்னும் பலவித உபசாரங்களை
யும் செய்து கைலாகு கொடுத்து வீட்டிற்கு அழை
த்தேகினள். உள்ளே அழைத்துக் கொண்டுபோய்
ஊஞ்சலில் இருக்கச் செய்து பலவிதமான ஆலவட்
டங்களால் விசிறிக்கொண்டு நடந்து வந்த களைப்பை
ஆற்றினள். அப்பொழுது, சுதாமா மனைவியைப்
பார்த்து, "பெண்ணே! உன் விருப்பப்படி பகவான்
எல்லா ஐஸ்வர்யங்களையும் அளித்தார். நீ இவைகளை
வைத்துக்கொண்டு உன் புத்திரர்களைச் சுகமே போஷி
த்துக் கொண்டிரு. நான் வனத்திற்குப் போய் பக
வத் தியானஞ் செய்து கொண்டிருக்கிறேன் என்று
சொல்லி எழுந்து போகவும் ஆரம்பித்தார்.
அவரைச் சுசீலை திருவடிகளில் தண்டனிட்டுத்
தடுத்து இந்த திரவியங்களை நமது பிள்ளைகளுக்காக
வேண்டினேனே யன்றி அடியாளுக்கன்று. இவர்கள்
இதனை அனுபவித்துக் கொண்டு சுகமாயிருக்கட்டும்.

அடியாள் தங்கள் பின்னே வருகிறேன்." என்று சொல்லலாயினள். அவ்வாறே இருவரும் புறப்பட எத்தனிக்கையில் கிருஷ்ணபிரான் காட்சிகொடுத்து என்னால் கொடுக்கப்பட்ட திரவியம் ஒருபோதும் அழியாது. நீங்கள் பிறந்த நாள் முதல் தரித்திரத்தையே அநுபவித்தவர்களாகையால் சில நாள் ஐஸ்வரியத்தை அநுபவித்துப் பிறகு எனது சாயுச்சிய மடையுங்களென்று கட்டளை யிட்டுவிட்டுப் போனார் அவ்வாறே அவர்கள் நெடுநாள் ஐஸ்வரியங்களை அநுபவித்துக் கொண்டும் பகவானை மறவாமல் தியானித்தும் வந்து இறுதியில் மோட்ச சாம்பிராச்சியத்தை அடைந்தார்கள்.

பதிவிருதையாலே பாக்கியமெல்லா முண்டாகும்.

## அமிர்தவல்லி சரித்திரம்.

இமயமலைச்சாரலை அடுத்ததாகிய நேபாள தேசத்தை வில்வலனென்னும் பெயருடைய அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு, எல்லாக் குணங்களும் அழகும் பொருந்திய அமிர்தவல்லி என்னும் பெயருடைய பெண் ஒருத்தியிருந்தாள். அவள் தினந்தோறும் அதிகாலையி லெழுந்து நீராடி வீட்டுவேலைகளை முடித்துக் கணவனுக்கு வேண்டிய உபசாரங்கள் அனைத்தையும் குறைவறச் செய்து முடிப்பாள். இவ்வாறு அவள் கற்புடை மாதர்க்குரிய குணங்கள் எல்லாம் சுமையற்றுப் பதிவிரதாசிரோமணி யென்று எல்லாரும் போற்ற வாழ்ந்து வருநாளில், அவ்வூரில் மிகுந்தசாதுவாகிய ஒருபிராமணனிருந்தான். அவன் இறந்து



போகுந் தருவாயிலிருந்தான். அப்பொழுது அவனுடைய புத்திரன் அவனைப் பார்த்து, "தந்தையே, இனி எனது ஜீவனத்துக்கு மார்க்கமாக என்ன திரவியம் தாங்கள் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டான் அதற்கு அவன் பிள்ளையைப் பார்த்து, "அப்பா! என்னிடத்தில் எவ்விதமான திரவியங்களு மில்லையென்றுசொல்லிப் பொறுமை கடலினும் பெரிது என்னும் வாக்கியத்தை ஓர் ஏட்டிலெழுதி, அவன் கையிற் கொடுத்து, இதை உனக்கு ஏதாவது குறை நேரிட்டகாலத்தில் இவ்வூரரசனிடம் கொடுப்பாயாகில் உனக்குத் தேவையான திரவியம் கிடைக்கும் என்று கூறிவிட்டு இறந்தார். இறந்தவருக்குச் செய்யவேண்டிய கடன் செய்து முடித்து அவன் அச்சீட்டைக் கொண்டுபோய் அரசனிடம் கொடுத்தான். அரசன் அச்சீட்டை வாங்கித் தன் வாளுறையிற் சொருகிவிட்டு சாதுவின் மைந்தனுக்கு வேண்டிய அளவு திரவியங் கொடுத்து அனுப்பி விட்டான்.

சிலநாட் கழித்தபின் அரசன் வேட்டைக்குச் சென்றிருக்கையில் அரண்மனையில் அரசனது படுக்கைபோடும் வேலைக்காரன் அரசன் படுக்கையை விரித்து, வெகு நாளாய் அதிற் படுக்க எண்ணங்கொண்டிருந்தானாகையால் அன்று அரசனில்லாததினால் அதிற் படுத்துக் கொண்டான். படுத்தமாத்திரத்தில் என்று மறியாத சுகத்தினால் நித்திரைபோய் விட்டான்.

அப்போது அரசன் மனைவி படுக்கை யறைக்குச் சென்றுபார்க்கையில், அரசனது போர்வையை வேலைக்

காரன் உடல் முழுவதும் போர்த்துக் கொண்டபடியால் தன் கணவனென்று நினைத்து அவன் பக்கத்தில் படுத்து அதிக நித்திரையால் தன்னை மறந்தாள்.

அப்பொழுது காட்டுக்கு வேட்டையாடப்போயிருந்த அரசன் நாட்டை அடைந்து அரண்மனையிற் பிரவேசித்துக் கட்டிலிற் றுயில்கின்ற தன் மனைவியையும் வேலைக்காரனையும் கண்ணுற்று, அடங்காக்கோபமுள்ளவனாய் அவர்களிருவரையும் இருதுண்டாக வெட்டவேண்டுமென்று நினைத்து உடைவாளை உருவினான். அவ்வளவில் அவ்வுறையில் முன்னே வைத்திருந்த சீட்டு கீழே விழுந்தது. அதை வேந்தன் கையிலெடுத்துப் பார்க்கையில் அதில் பொறுமை கடலினும் பெரிது என்று எழுதியிருக்கக்கண்டு அதுபிராமணன் கொடுத்த சீட்டென்கிற ஞாபகமில்லாதவனாய் அந்தரத்திலிருந்து விழுந்த சீட்டென்றே நினைந்து வெட்டுதற்கு மனந்துணியாதவனாய் வெளியேசென்று மந்திரியை நோக்கிச் சங்கதியைச் சொல்ல, அதைக் கேட்ட மந்திரி யோசித்து, "இறைவனே, நான் ஒரு உபாயம்பண்ணுகிறேன் பாரும்." என்றுசொல்லி அரசி படுத்திருக்கும் கட்டிலண்டை போய்க் கையைத்தட்டினான். அக்கை யொலியைக்கேட்ட இராணி மந்திரியைப் பார்த்து விரைவாக எழுந்து மெல்லிய குரலுடன் நானும் அரசனும் படுத்திருக்கும் அறைக்குள் பயமின்றி வரத் தகுமா? இது நல்லவர் செய்கையா என்று சொல்லிக் கொண்டே அந்தப் புரத்திற்குப் போனாள். மந்திரி அவள் கூடவே சென்று காட்டுக்குப் போன அரசன் எப்பொழுது இங்கு வந்தார். சொல்லுமென அரசி மன்னவன் முதல் ஜாமத்திலேயே



இங்கு வந்து படுத்துக்கொண்டார் என்று சொன்னாள். உடனே மந்திரி அரசன் வந்ததை நான் அறியேன். காட்டுக்குப் போய்வந்த அலுப்பால் அவர் தன்னை மறந்து நித்திரை செய்கிறார். நீர் நல்ல புத்திசாலியாயிருந்தும் தெரியாதவரைப்போல அந்தப் புரத்தில் வந்ததுமல்லாமல் என்னை இம்மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கிறீர். எவ்வளவு அவசரமான காரியமாயிருந்தாலும் ஏவலாளரை விட்டு எழுப்பவேண்டுமே யன்றி நீர் வருதல் தகாது. அரசன் இப்பொழுது அலண்டு நித்திரைசெய்கிறார். அவரை இப்பொழுது எழுப்புதல் தகாது. அப்படி யேதாவது முக்கியமான காரியமிருந்தால் எழுப்பலாம் என்று கூறினாள். இதைக்கேட்ட மந்திரி இவள் மகா பதிவிரதையென்று தெரிந்துகொண்டு அமளியிற் றுயிலும் வேலைக்காரனைத் தட்டியெழுப்பினான். உடனே வேலைக்காரன் திடுக்கிட்டெழுந்து மந்திரியைப் பார்த்துக் கிடுகிடென்று நடுங்கினான். அமைச்சன் அவனைப் பார்த்து உன் பக்கத்தில் யார் படுத்துறங்கினது? உண்மையைச் சொல் என்று கூறினான். வேலைக்காரன் நானொருவனன்றி வேறொருவரும் படுக்கவில்லை யென்று சொன்னான். நீயேன் அரசன் கட்டிலிற் படுத்தாயென்று கேட்க, வேலைக்காரன் நெடுநாளாயிருந்த ஆசையால் படுத்தேனென மொழிந்தான். அமைச்சன் அரசனைப்பார்த்து இப்பொழுது சந்தேகம் நீங்கிற்றோவென அரசன் நீங்கவில்லை என்றான்.

பிறகு, ராஜன் ராணியை அழைத்து நீ வேலைக்காரனுடன் படுத்துக் கொண்டதால் கொதிக்கும் கொப்பறையில் மூழ்கி வந்தாலன்றி இங்கே இருக்கக்

கூடாது "உன் தாய்வீடுபோய்ச்சேர்" என்றுகூறினான். அதைக்கேட்ட அந்தப் பதிவிரதை அன்னியனால் தீண்டப்பட்ட இவ்வுடலத்தா லாவதென்ன என்னு மெண்ணங் கொண்டவளாய் அனலில் மூழ்குவதற்கு உடன் பட்டனள். உடனே அரசன் எரி மூட்டுவித்து எண்ணெயைக் கொதிக்க வைத்தனன், அரசி அதிற் குதிக்க எத்தனித்தாள். அப்போது அரசன் தன் மனைவியினிடத்தில் இரக்கமுற்று, "மாதே, உனக்காக இச்சீட்டு பகவான் அருளால் விழுந்தபடியால் உன் மீது குற்ற மிருக்க நியாயமில்லை." நீ விழவேண்டாம் என மறுத்தனன். அதற்கம்மாது அன்னிய புருஷனால் தீண்டப்பட்ட இவ்வுடலை வைத்துக்கொண்டு நானிருப்பதில் பயனென்ன? ஆகையால் கொப்பறையில் விழச் செய்வேனென்றனள். அதைக் கேட்ட இறைவன், உன்னிமித்தம் தெய்வத்தா லனுப்பப்பட்ட இச்சீட்டை அக்கினிக் கொப்பறையி லிடுகிறேன். "அது எரிந்து போகாமலிருந்தால் அதுவே உனது தூய்மைக்குச் சாட்சியுமாக இருக்கட்டும்" என்று சொல்லிச் சீட்டைக் கொப்பறையிற் போடப் போனான்.

அப்போது மந்திரி அரசனைப் பார்த்து, "இறைவனே, இச்சீட்டு முன்னொரு அந்தணனாற் கொடுக்கப் பட்ட சீட்டாயிற்றே." இதைத் தாங்கள் அக்கினியி லிட்டு அது எரிந்து விடுமேல், அப்பொழுது சந்தோஷம் இன்னும் அதிகமாக வல்லவோ ஆகிவிடும். ஆகையால், இச்சீட்டைக் கையில் வைத்துக்கொண்டு இதிற் கூறியிருக்கும் பொறுமை கடலினும் பெரிது என்னும் முதுமொழி உண்மையானால் இவள் பதி



விரதா தன்மை குன்றாதவளென்பது உண்மையானால் இச்சீட்டு வெந்து போகாமல் போட்டபடியே யிருக்கக்கடவது என்று சொல்லிக்கொண்டு போடுவது உத்தமம் என்றனன். அதைக்கேட்ட அரசன் அவ்வாறே செய்யச் சீட்டு ஒருமாறுதலும் அடையாமல், போட்டவாறே இருந்தது. எல்லாரும் இதைப்பார்த்து ஆச்சரியம் அடைந்திருக்கையில் இராணி சீட்டு நிலை குலையாமல் இருந்ததனால் அன்னியனைத் தீண்டிய என் தேகத்துக்குப் பரிசுத்தம் வந்துவிடுமா என்று சொல்லிக் கொண்டே எண்ணெய்க் கொப்பறையிற் தாவிக் குதித்திட்டனள். அப்பொழுது இவளது பதிவிரதா மகிமையினால் அங்குள்ள நெருப்பு அவிந்தது மன்றி எண்ணெயும் குளிர்ந்து போயிற்று. இதைக் கண்ட தேவர் பூமழை பொழிந்தனர். உடனே அரசன் தன் மனைவியைக் கட்டியணைத்துப் பலவாறு புகழ்ந்து கொண்டாடினான் தம்பதிகளிருவரும் வெகு காலம் வாழ்ந்து இறுதியில் வீடும் அடைந்தார்கள்.

கற்புடையவட்குக் கனலியும் அஞ்சும்.

## 15. ருக்குமிணி சரித்திரம்.

விதர்ப்ப தேசத்திலுள்ள குண்டினபுரியில், பீஷ்மகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு அநேககுமாரர்களிருந்தும் புத்திரியில்லாக்குறையால் எம்பெருமானைப்பிரார்த்திக்க, அவரது கிருபையால் ஸ்ரீமகா லட்சுமி தேவியே அவனுக்குப் புத்திரியாய்ப்பிறந்தனள், அக்குழந்தைக்கு அவன்றன் ருக்குமிணியென்று நாமகரணமிட்டு நாளொருமேனியும்

பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தான். இவ்வாறிருக்கையில், ஒரு நாள் அரசனானவன் தன் புத்திரியை மடியில் உட்கார வைத்துக்கொண்டு சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் போது தீர்த்தயாத்திரை செய்து அநேக தேசங்களைப் பார்த்து வந்த சில பிராமணர்கள் அரசன் சமுகத்துக்குவந்தார்கள்.

அவர்களைப்பார்த்து அரசன் வேண்டியவரையில் பூசித்து ஒரு வார்த்தை சொல்லத் தொடங்கினான். "ஓ! பிராம்மணோத்தமர்களே! நீங்கள் வெகு தேசங்கள் சுற்றி வருகிறீர்களே, எல்லாத் தேசங்களிலும் சிறந்தது எது? எல்லா அரசர்களிலும் ரூபவந்தனும் நீதிமானும் செல்வமுள்ளவனும் பல பராக்ரமுடையவனும் ஆகிய அரசன் யாவன்? இவற்றையான் அறிந்துகொள்ளும்படி நீங்கள் கிருபை செய்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்தான்.

அதுகேட்ட பிராமணர்கள், "அரசே நவரத்னங்களில், நாகரத்னம்போலவும், மிருகங்களிற்சிங்கத்தைப் போலவும், தியானத்திற் பிரும்மத்தியானம் போலவும் நகரங்களிற் சிறந்தது துவாரகை. அந்நகரமானது மேல் கடலின் நடுவில் நிகரற்று விளங்குகிறது. அதற்கு அரசன் ஸ்ரீகிருஷ்ண பகவான். அவர் கோடி சூரியப் பிரகாசம் பொருந்திய வடிவழகுடையவர். பல பராக்கிரமத்தில் நிகரில்லாதவர். குபேரனையும் நாணச் செய்யும் செல்வமுடையவர். சத்துவகுணமே பிரதானமாயுள்ளவர். அவருடைய குணங்களையும் புகழையும் சொல்லுவதற்கு ஆயிரம் நாவுள்ள ஆதிசேஷனாலுமாகாது. ஆதிமத்யாந்த ரகிதராகிய ஸ்ரீமந்நாராய



ணனை அவருக்கீடாக ஒருவேளை சொன்னால் சொல்லலாமேயன்றி வேறொருவரையும் சொல்லலாகாதென்றனர்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட பீஷ்மகராஜன் மிகுந்த சந்தோஷமடைந்திருக்கையில் இவற்றையெல்லாம் அருகிலிருந்து கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த உருக்குமிணிப் பிராட்டியார் தேகம் மயிர்க் கூச்செறிந்து தனக்குத் தகுந்த நாயகன் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவே என்று மனதில் நினைத்தாள். இதேசமயத்தில் துவாரகையில் ருக்மிணிப் பிராட்டியாருடைய குணாதிசயங்களைக் கேட்ட கண்ணபிரானும் அந்த ருக்மிணியையே தனக்கு மனையாளாகக் கொள்வேனென்று மனதில் சங்கல்பித்துக்கொண்டார்.

இவ்வாறு சிலநாள் செல்ல பீஷ்மகராஜன் பருவமுதிர்ந்த தனது புதல்விக்கு விவாகஞ் செய்விக்க வேண்டுமெனக் கருதிப் பாங்கிகளைக் கூப்பிட்டுத் தன் புதல்விக்கு எந்த நாயகன்மீது விருப்பமிருக்கிறதோ அதைக் கண்டறிந்து வாருங்களென்றார். அரசன் கட்டளைப்படியே அவர்கள் சென்று கேட்டவளவில் ருக்மிணிப் பிராட்டியார் அவர்களை நோக்கி, தேவகி வசுதேவ குமாரரும் அதிரூபசுந்தரரும் ஜகத்காரணராயும் மனோவாக்குக் கெட்டாதவராயும் அன்பர் உள்ளத்தில் வாசஞ் செய்பவராயும் உள்ள துவாரகா வாஸருமாகிய ஸ்ரீகிருஷ்ணமூர்த்திக்கே நான் மாலையிடுவேன் என்று ஒரே நிச்சயமாகக் கூறினாள்.

அதைக்கேட்ட பாங்கிகள் அரசனிடம் அறிவித்ததும் அரசனும் தன் பந்துக்களை யழைத்து நடந்த

விஷயத்தைக் கூறி ஆலோசித்தார். அவர்கள் ஸ்ரீகிருஷ்ண பகவானுக்கு ருக்மிணியைக்கொடுத்து விவாகஞ் செய்வதில் தங்களுக்கு முழுச் சம்மதமுண்டு என்று சொன்னார்கள். அதைக்கேட்ட அரசன் மிகுந்த சந்தோஷமுடையவனாய் ஸ்ரீகிருஷ்ணபகவானுக்கு மாமனாராக நான் என்ன பாக்கியஞ்செய்தேனோ என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான்.

இவ்வாறிருக்கையில் ருக்மிணிப் பிராட்டியாருடைய மூத்த தமயனாகிய ருக்மி என்பவன் அங்கு வந்து பந்துக்களுடையவும் தகப்பனாருடையவுமாகிய எண்ணங்களை அறிந்து, கிருஷ்ணபகவான்மீது குரோதங் கொண்டவனாய், தந்தையையும் பந்துக்களையும் நோக்கிச் சேதிதேசத் தரசனாகிய சிசுபாலனுக்கு ருக்மிணியைக் கொடுத்து விவாகஞ் செய்விப்பதாய் நிச்சயித்துக் கலியாண பத்திரிகை எழுதி எல்லாருக்கும் அனுப்பும்படி மந்திரிமார்களுக்குக் கட்டளையிட்டான். பிறகு அவன், வரும் அரசர்கள் தங்குவதற்குவேண்டிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தான்.

இவையெல்லாம் தாதிகளாலறிந்த ருக்மிணிப்பிராட்டி, "தெய்வமே! இதற்கு நான் என்னசெய்வேன்! என்னிஷ்டப்படி கிருஷ்ணபகவானை மணஞ்செய்து வைப்பவர் ஒருவருமில்லையா? முதலில் ஒரு நாயகனை மனதிலெண்ணிப் பிறகு வேறொருவனுக்கு மாலையிடுதல் மாபாதகமன்றோ! கற்பழியுமன்றோ! மேலும் அவள் கணிகைக்குங் கீழ்ப்பட்டவளாவாள். ஓ கேசவனே! எனது தமயன் கருத்தைமாற்றி, என்னை நீர் விவாகஞ் செய்து கொள்ளமாட்டீரோ?" என்று சொல்லிக்கொ



ண்டே மூர்ச்சை போயினள். பிறகு தாதிகள் செய்த பலவித உபசாரங்களால் தெளிந்தும், நீராடாமலும் நல்ல ஆடையாபரணங்களை அணியாமலும் அன்னகாரங்களை யருந்தாமலும் நித்திரை கொள்ளாமலும் இரவு பகல் எப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணபகவானையே தியானித்துக் கொண்டே யிருந்தாள். இவ்வாறிருக்கையில் ஒரு யோசனை தோன்றப் பாங்கிகளைக் கூப்பிட்டுத் தனது வித்யா குருவாகிய அக்னி வேச்ய முனிவரைக்கூப்பிட்டு வரச்சொன்னாள். முனிவர் வந்துசேர்ந்தார். அவள் அவருக்குசாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு, ஸ்வாமி அடியாள் கிருஷ்ணபகவானையன்றி மற்றெவரையும் மணம் புரிவதில்லை என்கிற விரதங்கொண்டுள்ளேன். இவ்வாறான என்னைச் சிசுபாலனுக்குக் கொடுத்து கலியாணஞ் செய்விக்க என் தமயன் எண்ணங் கொண்டிருக்கிறான். அவனது எண்ணத்தை மீறி நடக்க என்தாய் தந்தையரும் அசக்தராயிருக்கின்றனர். ஆகையால், நான் எனது உயிரை மாய்த்துக் கொள்ள நிச்சயித்திருக்கிறேன். நான் பிராணனைப் போக்கிக் கொள்ளாமல் வாழவேண்டும் என்பது தங்களுடைய விருப்பமானால் தாங்கள் எனக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும் என்று கூறினள். முனிவர், அவ்வுபகாரம் யாதென்றுகேட்க, ருக்மிணி [illegible]! தேவரீர் துவாரகைக்குப்போய் அடியேன் [illegible]த்தை பகவானுக்குத் தெரி[illegible]தவதுடன் [illegible]க்கும் கும் கிருபத்தையும் அவ[illegible]டம் சேர்ப்பிக்கவேண்டும். என்று ஓலையில் தன் [illegible]மெல்லாவற்றையும் விவரமாக எழுதி அனை[illegible]த்து முனிவரைப் ப[illegible] னள். அம்முனிவர் [illegible]ட்டிக்கு அ[illegible]

67774

கூறித் தான்போய்க் காரியத்தை நன்மையாக முடித்து வருவதாகவும் சொன்னார். சொல்லி முனிவர் அந்நாட்டைக்கடந்து விரைவில் துவாரகை அடைந்து, கண்ணபிரானிடத்தில் செய்திகளைச் சொல்லி ஓலையையும் கொடுத்தனர். பகவான் அதை வாங்கிக்கொண்டு முனிவருக்கு அநேக சன்மானங்களைச் செய்தனர்.

பிறகு ஸ்ரீகிருஷ்ணபகவான் தமது ரதத்தில் ஏறிக்கொண்டு, முனிவரை உடன் ஏற்றிக்கொண்டு விதர்ப்ப நாட்டிலுள்ள குண்டினபுரிக் கருகாமையிலுள்ள ஒருசோலையிற் றங்கித் தன் வரவை ருக்மிணிப் பிராட்டியாருக் கறிவிக்கும்படி அம்முனிவரையே அனுப்பினார். இதற்குள் பலராமர் யாதவசேனைகளுடன் புறப்பட்டுக் கிருஷ்ணபகவானுக்குத் துணையாக வந்து சேர்ந்தார். முனிவர் அரண்மனையை நோக்கி நடந்து கொண்டிருந்தார். அதற்குள் ருக்மிணிப் பிராட்டியார் இன்னும் போன பிராமணர் வரவில்லையே, தாலி கட்டவேண்டிய முகூர்த்தம் வந்துவிட்டதே என்று ஏங்கி யிருந்தாள். பகவானுக்கென்று சமர்ப்பித்த இந்தத்தேகத்தை இன்னொருவனுக்கு உபயோகிக்கலாமோ? அப்படிச்செய்வதைக் காட்டிலும் உயிரை விடுவதே உத்தமமென்று யோசித்துக் கொண்டிருக்கையில் பிராமணர் வந்து விட்டார். வந்த பிராமணர் பிராட்டியாருடைய அருகில் சேர்வதற்கு முன்னமே ஸ்ரீகிருஷ்ணபகவான் உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றுவதற்காக வந்து நமது சோலையிடத்தில் தங்கியிருக்கிறார்" என்று அமிர்த வருஷத்தை வருஷிப்பது போல் சொன்னார். அதைக்கேட்ட ருக்மிணி அவ



ரைப் பணிந்து தண்டனிட்டாள். அவர் தமதிருப்பிடம் சென்றனர்.

அப்பொழுது ருக்மி அனுப்பிய ஓலையைப் பார்த்து அரசர்கள் எல்லாரும் விவாகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அவர்களையெல்லாம் ருக்மி உபசரித்து, மாப்பிள்ளையாகிய சிசுபாலனது வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது பீஷ்மகராஜன் பகவான் வந்திருக்கிறதைக் கேள்விப்பட்டு எதிர்கொண்டழைத்து வருகையில், பகவான் அங்கே சித்தரிக்கப் பட்டிருந்த ஒரு மாளிகையைக்கண்டு, இதுயாருக்கு அமைக்கப்பட்ட விடுதியென்று கேட்க, அரசன் சிசுபாலனுக்கு அமைக்கப்பட்டதென்று கூறினான். அதைக் கேட்ட பகவான் உடனே அதனுள் சென்று மாப்பிள்ளைக்கென்று விநோதமாய் அமைத்திருக்கும் சிங்காதனத்தில் போய் உட்கார்ந்தார்.

பிறகு, சேதிதேசாதிபனாகிய சிசுபாலன் வருவதையறிந்த ருக்மி எதிர் கொண்டழைத்து தக்க விடுதிகள் அமைப்படாமையால் குதிரைக் கொட்டாரத்தில் இருக்கும்படி ஏற்பாடு செய்தான். பிறகு ருக்மிணிப் பிராட்டியார் கௌரி பூஜை செய்வதற்காக வெளியே வருகிறாளென்பதைக் கேட்ட அரசர்கள் எல்லாரும் ஒருமிக்கத் திரண்டு நோக்கினார்கள். அவர்களுடன் ஸ்ரீகிருஷ்ணபகவானும் ஒரு பக்கத்தில் நின்றிருந்தார். அந்தப் புரத்திலிருக்கும் ருக்மிணிப் பிராட்டியார் அடங்கா மகிழ்ச்சியுடன் ஸ்நானம் செய்து சர்வாலங்காரங்களுடன் கௌரி பூஜைக்குப் புறப்பட்டாள்.

போய்ச் சேர்ந்து கௌரிக்குப் பூஜை செய்துவிட்டு ஸ்ரீ கிருஷ்ண பகவானையே மணவாளனாக அடைய வேண்டுமென்று கௌரியைப் பிரார்த்தித்துக்கொண்டு பிராமண மாதர்களுக்குப் பலவித தானங்கள் செய்து அவர்களாசீர்வாதத்தைப் பெற்றுக் கோயிலினின்றும் வெளிப்பட்டுப் பகவான் எங்கேயிருக்கிறாரோ என்னு மெண்ணமுடையவராய் வந்தார். அப்போது அவ்விடத்தில் ரதாரூடராய் இருக்கும் பகவானைக்கண்டு புளகமெய்தித் தேரருகே போனார். அப்பொழுது பகவான் பிராட்டியாருடைய கையைப்பற்றித் தேரின்மேலேற்றிக் கொண்டு சாரதியைத் தேரைச் செலுத்தக் கட்டளையிட்டு சங்கநாதம் முழக்கினார். அவ்வொலியினால் எல்லா அரசரும் திடுக்கிட்டுப் போனார்கள். சிறிது நேரஞ் சென்றபின் பயந்தெளிந்து அரசர் ருக்மிணியைப் பகவான் கொண்டுபோவதைப் பார்த்து அதைத் தடுக்க வெண்ணிப் போர்புரியலானார்கள். அதைக் கண்ட பலராமர் வெகுண்டு தமது கலப்பை யாயுதத்தால் எல்லா வரசர்களையும் சின்னாபின்னப்படுத்த எத்தனித்தார். அப்போது அவர்கள் ஓட்டம் பிடித்தார்கள். சிலர் பயந்து சிசுபாலனிடம் போய் உயிரிருந்தால் உப்பு மாறியாவது ஜீவனம் செய்யலாம். ஒரு பெண் நிமித்தம் இத்தனைபேர் உயிர் விடுவது நியாயமல்ல. நமது ஊர் போய்ச்சேருவோம் வா. இவளைப்போல் எத்தனையோ பெண்களைச் சம்பாதிக்கலாம் என்றார்கள். அதைக்கேட்ட சிசுபாலன் அவர்கள் சொன்னவாறே செய்யலானான்.



அப்போது ருக்மி என்பவன் அதிக வேகமாய்த் தன் தேரைச் செலுத்திக் கொண்டுபோய் பகவானை மறித்துச் சண்டை செய்யத் தொடங்கினான். கிருஷ்ணனைப் பலவாறு வைதான். அவன் வைததானது பகவானது செவியில் நாராசத்தைக் காய்ச்சி விட்டதுபோலிருந்தது. அதனால் பகவானுஞ் சினங்கொண்டு வில்லை வளைத்து நாணேற்றிட்டு ஒரு அம்பினால் ருக்மியுடைய வில்லைத்துண்டித்து அவனது தேரையும் பொடியாக்கி மற்றோர் கணையால் சாரதியைக் கொன்று குதிரைகளையும் அதமாக்கி ருக்மியினுடைய தேகத்தையும் சல்லடைக் கண்களாகத் தொளைத்தார். பிறகு, அவன் வேறொரு தேரின்மேலேறி யுத்தத்துக்கு இவன்மேல் ஒரு பாணத்தையேவிக் கொல்ல நினைத்த பகவானை நோக்கிப் பிராட்டியார் பின் வருமாறு கூறலுற்றார். சுவாமி! என்னுடன் பிறந்தானாகிய இவன் தேவரீருடைய மகிமையை அறியாமல் மூடத்தனமாய்ச் சண்டைசெய்கிறான். எனது தாய் தந்தையர்களோ தேவரீர் தங்களுக்கு மருமகனாய் வாய்த்ததைப்பற்றி மிகுந்த சந்தோஷமடைந்திருக்கிறார்கள் இந்த சமயத்தில் இவனது வதையை அவர்கள் கேட்பார்களாகில் புத்திர சோகத்தினால் அவர்கள் மிகுந்த துக்கமடைவார்கள். ஆகையால் அடியாள் நிமித்தமாக அவனைக் காப்பாற்ற வேண்டும் என்று பிரார்த்தித்தாள். அதைக் கேட்ட பகவான் அவ்வேண்டுகோளுக் கிரங்கி அவனைக் கொல்லாமல் தேர்க்காலுடன் பிணைத்துக்கட்டி அம்புகளால் இவனது தலையில் ஐங்குடுமி வைத்து அவனை அவமானப்படுத்தினார். இப்படி இருக்கையில் தம்மையெதிர்த்த அரசர்களை அழித்து விட்டு வந்த

பலராமர் கண்டு கிருஷ்ணபகவானை நோக்கி, ஏனப்பா இந்த ராஜகுமாரனை இப்படி அவமானப் படுத்துகிறாய்? இதைவிட அவனைக் கொன்றுவிடுவது மேல் என்று கூறினர். அதைக் கேட்ட கண்ணபிரான் அவனைக் கட்டவிழ்த்து விடுவித்து விட்டார். அவனும் பகவான்மீதுள்ள க்ஷாத்திரத்தை நீக்காமலே தவஞ் செய்வதற்காகப் போனான்.

பிறகு பலராம கிருஷ்ணர்கள் துவாரகையை அடைந்தார்கள். அவ்விடம் போனதும் நகரத்தை அலங்கரித்து வைத்தார்கள். பிறகு நல்ல சுபமுகூர்த்தத்தில் அநேக ரிஷிகள் தேவர்கள் இவர்கள் முன்னிலையில் விவாகம் சிறப்பாய் நடந்தது. ஏழைகளுக்கும் பிராமணர்களுக்கும் அன்னதானம் சொர்ணதானம் முதலிய எல்லாத் தானமும் செய்தார்கள்.

கலியாணமானது முதல் ருக்மிணிப் பிராட்டியார் ஸ்ரீகிருஷ்ணபகவானை தெய்வமெனக் கருதி எப்பொழுதும் உபசரிப்பதிலும் பணிவிடை செய்வதிலும் தளராமல் செய்து வந்தார்.

இவ்வாறிருக்கையில் பகவானுடைய மற்றொரு பிரிய நாயகியாகிய ராதை என்பவள், முன்போல பகவான் தன்னிடத்தில் பிரியமாயிராமல் ருக்மிணியிடத்திலும் இதர கோபிகைகளிடத்திலும் பிரேமையுடையவராயிருப்பதைப் பற்றிக் கண்ணீருதிர்த்தாள்.

அப்பொழுது நாரதமுனிவர் அவ்விடம் வர, அவரை விதிப்படிப் பூசித்துவிட்டு ராதை வாட்டமான மனதுடன் அவர் எதிரில் நின்றாள். அதைக் குறிப்



பாலறிந்த நாரதன், அம்மா, உன்மனதில் ஏதோகுறையிருப்பதுபோல் தோன்றுகிறது. அதை வெளியிட்டால் தகுந்த பரிகாரந்தேடுகிறேன் என்ற சொல்ல, ராதையானவள் சுவாமி! எனக்குள்ள மனக்குறையை என்னவென்று சொல்லுவேன். ஆயினும் தாங்கள் கேட்கும்பொழுது நான் சொல்லாமலிருப்பது தக்கதன்று. என்குறை யாதெனில், எனது உயிர்த்தலைவராகிய ஸ்ரீகிருஷ்ண பகவான் சிலகாலமாக என்னை யெடுத்துப் பாராமலும், என் விருப்பத்தைப் பூர்த்திசெய்யாமலு மிருப்பதன்றி, என்னுடன் ஒரு வேளையாகிலும் இன்பமாகப் பேசுகிறதும் இல்லை. இவ்வாறு என்னை வஞ்சித்து எனது சக்களத்தியாகிய ருக்மிணியினிடத்தில் விசேஷ காதலுடையவரா யிருக்கிறார். இவ்வகையான எனது குறையை நீக்கி எனது மனக்கோரிக்கையை முடித்துத்தரக்கூடியவர்கள் ஒருவரும் இல்லை. என்போன்ற பாவிகளும் உளரோ என்று சொன்னாள்.

அதைக்கேட்ட நாரதர், "அம்மணி! நீ துக்கிக்க வேண்டாம். கிருஷ்ணபகவான் [illegible] னிபரல்லர். [illegible] மத்யந்த ரஸிகர் அவருக்கு ஒருவர் மேன்மையும் [illegible] வர் தாழ்மையும் [illegible] படி இருக்கிற புருஷோத்தமன் மீது குற்றங் கூறுதல் கூடாது. மேலும் பதிவிரதைகளுக்கு அழகுமன்று. [illegible] ஸ்திரீ புருஷர்களுள் கலகம் உண்டாவது உலக [illegible] ல்பே. ஆயினும் [illegible] நாட்களில் ஒருவிதமாய் [illegible] ஆயினும், உன்னுடைய [illegible] பொழுது இருந்த கஷ்டமென்று [illegible]

கின்றது. இதைப்பற்றி யான் அதிக சிரமம் எடுத்துக் கொள்ளவேண்டி வரும்போலிருக்கிறது. நான் வேலை செய்வதன் பலனாக உனது மனோரதம் நிறைவேறி விட்டால் எனக்கு என்ன கொடுப்பாய் என்று கேட்டனர்.

அதைக்கேட்ட ராதை முனிவரை நோக்கி, ஸ்வாமி! தாங்கள் எனது கணவரை எப்பொழுதும் என்னிடம் நீங்காதிருக்கும் வகை செய்தால் அவரது எடைக்குச் சரியான தங்கம் தேவரீருக்கு யான் தருகிறேன் என்று கூறினள்.

நாரதர் அதற்கிசைந்து ருக்மிணிப் பிராட்டியின் மாளிகையில் பகவான் எழுந்தருளி யிருக்கிறார் என்பதை யுணர்ந்துகொண்டு அங்குப்போய்ச் சேர்ந்தார். நாரதர் வரக்கண்ட பகவான் எதிர்கொண் டோடிவந்து அர்க்கிய பாத்ய முதலியவைகளால் ஆராதித்து முனிசிரேஷ்டரே! தங்கள் வரவால் இக்குடிசை புனிதமெய்தியது. நாங்கள் கிருதார்த்தர்களானோம். எங்கள்மீது விருப்பம்வைத்து இவ்விடத்திற்குத் தாங்கள் எழுந்தருளியதன் காரணம் யாதோ? அருள்புரிந்து சொல்லவேண்டும் என்று ருக்மிணிப் பிராட்டியாரும் ஸ்ரீகிருஷ்ண பகவானும் பிரார்த்தித்தார்கள்.

அப்போது நாரதர் அவர்களைப்பார்த்து நினைக்கவும் தொழவும் அரிய பரம்பொருளாகிய தேவரீரைச் சேவித்துப் போகலாமென்னு மெண்ணமுடையவனாய் ராதையின் வீட்டுக்குச் சென்று பார்த்தேன். அங்கே தங்களைப்பற்றி விசாரிக்கையில் ராதை மனத்துயரங் கொண்டு புலம்பினாள்; செய்தி யாதென்று கேட்டேன்



அவள் இவ்வாறு சொன்னாள் என்று நடந்த விஷயம் அனைத்தையும் தெரிவித்தார். அதைக்கேட்ட பகவான் நாரதரே! ஆசாரிய பக்தியில்லாத சிஷ்யனைப்போலவும் தெய்வபக்தியில்லாத மனிதனைப்போலவும் கணவனே கடவுளென்றும் மணாளன்வாக்கே மறைமொழியெனவும் நாயகன் தியானமே நாராயணன் தியானமெனவும் கருதாமல் தானென்னுங் கர்வந் தலைக்கேறி என்னிடத்தில் அசட்டையாக விருக்கும் ராதையினிடத்தில் எனக்குச் சிறிதும் பிடிப்பில்லை. அவளது பதிவிருதா பலத்தை உமக்குக் காட்டுகிறேன்! வாருமென்று அழைத்துக்கொண்டு நாரதருடன் ராதையின் வீட்டைச் சேர்ந்தார். அப்போது ராதை பிரும்மானந்தமடைந்து ஒரு தராசைக் கொண்டுவந்து நிறுத்தி அதின் ஒரு தட்டில் பகவானை வீற்றிருக்கச்செய்து மற்றொரு தட்டில் தன்னிடமிருக்கும் பொன் எல்லாவற்றையும் போட்டும் கிருஷ்ணன் இருக்குந் தட்டு கொஞ்சமேனும் மேலெழாததைக்கண்டு கலவையுற்றவளாகித் தனது தேகத்திலுள்ள நகைகள் எல்லாவற்றையும் கழற்றிப் போட்டாள். அப்பொழுதும் பகவானிருந்த தட்டு சிறிதும் மேலெழவேயில்லை. அதைக் கண்டு ராதை மிகுந்த விசனமுற்றாள். உடனே பகவான் அங்கிருந்த பணியாளரை விட்டு ருக்மிணியை அழைத்து வரும்படி ஏவினார். உடனே ருக்மிணிப் பிராட்டியார் வந்து சேர்ந்தனர். வந்தவுடனே நடந்த விஷயங்களைக் கேட்டறிந்த பிராட்டியார் உடனே தராசிலிருந்த பொன்னையெல்லாம் அப்புறப்படுத்தி விட்டு ஒரு திருத்துழாய் தளத்தை யெடுத்து பகவானுடைய திருவடிகளை மனத்தில் தியானித்துத் தட்டி

விட்டார். உடனே பகவானிருந்த தட்டு மேலெழும்ப திருத்துழாய் வைத்திருந்த தட்டு கீழே போயது. இதைப்பார்த்த நாரதர் ருக்மிணிப் பிராட்டியாருடைய பதிவிரதா பக்திக்கு வியந்து கொண்டாடினார். அப்பொழுது ராதை நாணமடைந்து ஒன்றும் சொல்லாமல் மவுனமாயிருந்தாள்.

## 16. சாவித்திரி சரித்திரம்.

திரேதாயுக இறுதியில் மத்திரதேசத்தில் அசுவபதியென்னொரு அரசன் அரசுசெய்து வந்தான். அம்மன்னனுக்குப் புத்திரப்பேறின்மையால் வருத்தமுற்று மனைவியுடன் காடுசென்று சாவித்திரிதேவியை நோக்கித் தவஞ் செய்தான்: வெகு நாள் பஞ்சாக்கினி மத்தியிலிருந்து செய்த தவத்துக்கு உடனே வந்து சாவித்திரிதேவியானவள் பிரத்யட்சமானாள். அரச தம்பதிகள் அத்தெய்வத்தை வணங்கி, வெகு வந்தனைவழிபாடியற்றினர். சாவித்திரிதேவி அவர்களைப் பார்த்து நீங்கள் தவஞ்செய்வது எக்காரணம்பற்றி? உங்களுக்கு வேண்டுவது யாது என்று கேட்டனள். உடனே அவர்கள் தேவியை நோக்கி, "தேவி. உலகத்தில் ஒருவனுக்கு எல்லாச் செல்வமுமிருந்தாலும் புத்திரப்பேறு இல்லாவிடில் அச்செல்வங்களால் அவனுக்கு ஒரு பிரயோசனமுமில்லை. 'தென்புலவாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வரைப் பெறாதவர் வேறே எதைப் பெற்றவராயினும் ஒன்றும் பெறாதவரோ டொப்பர்' என்றுபெரியோர் கூறுவர். ஆகையால், அநேக வருஷங்களாக யாங்கள் எவ்வளவோ விரதங்கள் செய்தும் புத்திரனுண்டாகவில்லை. அக்



குறைதீர எங்களுக்கு புத்திரப் பேற்றை அருளல் வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அப்போது சாவித்திரிதேவி அவர்களை நோக்கி, உங்களுக்கு முன்னமே பிரமதேவனால் புத்திரப்பேறு கிடையாது. என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது ஆகையால் அதை மாற்றுவது என்னால் கூடாத காரியம். ஆயினும், உங்களுக்கு எவ்வுலகத்திலுமில்லாத அழகும் விசேஷகுணங்களும் கற்பும் நிறைந்த ஒரு புத்திரியைக் கொடுத்திருக்கிறேன். அப்புதல்வியின் மகிமையினால் உங்களுக்குப் பிறிதொருகாலத்தில் நூறு புத்திரர்களுண்டாவார்கள். என்று சொல்லி மறைந்து போனாள்.

சிலநாட்களுக் கெல்லாம் அரசபத்தினியாகிய மாயாதேவி என்பவள் கருப்பமுற்று நாள் சென்றவாறே ஒரு புத்திரியை ஈன்றனள். அக்குழந்தை சாவித்திரிதேவியின் வரப்பிரசாதத்தால் தோன்றியபடியால் அதற்குச் சாவித்திரி என்றே பெயரிட்டார்கள். அப்பெண் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து வந்தாள். நற்குண நற்செய்கைகளிலும் அழகிலும் கல்வியிலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இவ்வுலகத்தேயன்றி எவ்வுலகத்திலுமேயில்லை என்று கண்டவர் கூறும்படி இருந்தனள்.

இவ்வாறிருக்கையில், அவ்வரசன் சமுகத்துக்கு நாரதர் என்னும் மஹாரிஷி வந்துசேர்ந்தார். அவரைக் கண்ட வேந்தன் அர்க்கியபாத்ய ஆசமனங்களைக் கொடுத்து உபசரித்தான். பிறகு முனிவர் அரசனைப்

பார்த்து, வேந்தே! உனது புதல்விக்கு விவாகஞ் செய்வதற்குரிய பருவம் வந்து வெகு நாளாகியும் விவாகம் செய்யாமல் வைத்திருப்பது என்னோ! என்று கேட்டனர். அச்சமயத்தில் அரசகுமாரியாகிய சாவித்திரியும் அரசனுக்கு அடுத்தாற்போல் ஓர் ஆசனத்தில் வீற்றிருந்தனள். அவளை நோக்கி அரசன், பெண்ணே முனிவர் மொழிந்ததைக் கேட்டாயா? அழகு காந்தி ளைத்த ஆகத்தாளாகிய உனக்கு விவாககாலம் வந்திருக்கிறபடியால் யான் அதைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன். ஆகையால் இராஜகுமாரர்களில் எவனையாவது குறிப்பிடுவாயாகில் அவன் எங்கிருந்தாலும் வரவழைத்து விவாகத்தை முடித்துவிடுகிறேன் என்று சொல்லினன். அதற்கு சாவித்திரி அரசனை நோக்கி, ஐய! சாளுவதேசத்தை அரசு புரிந்த தும்மச்சேனன் என்னும் அரசர் விதிவசத்தால் அரச செல்வத்தைப் பகைவனிடம் விட்டு மனைவியுடன் இருவரும் அந்தகராகி, காட்டைச் சேர்ந்து உண்ண உணவும் உடுக்க உடையும் இன்றிக் கந்தமூல பலாதிகளையே உண்டு காலங்கழிக்கிறார். அவருக்கு, அழகிலும் வல்லமையிலும், குணத்திலும் சிறந்த சித்ராஸ்வன் என்னும் பெயருள்ள புத்திரர் ஒருவர் உளர். அவர் இளமை தொட்டு சத்தியந்தவறாத ஒழுக்கத்தையுடையவரானபடியால் அவரை எல்லாரும் சத்தியவானென்று அழைக்கிறார்கள். அந்தப் புண்ணிய புருஷரைத்தான் நான் நிச்சயித்திருக்கிறேன். அவரன்றி வேறு எவரானாலும் மணம் புரியேன் என்று சொன்னாள்.

அதைக்கேட்ட அரசன் நாரதமுனிவரைப் பார்த்துக் கல்லும் மண்ணும் கரைந்துருக கானம்பாடும்



மாமுனியே, முக்கால வரலாறுகளுள்ள தாம் அறியாதவை ஒன்றுமில்லை. ஈரேழுலகங்களுள் தாங்கள் பாராததேயில்லை. ஆதலால் என் மகள் வரித்திருக்கும்ராஜகுமாரனுக்கே அவளைக் கொடுத்து விவாகஞ்செய்விப்பதில் தேவரீருள்ளக்கருத்தியாது?" என்றுவேண்டினன்.

வேந்தனால் வேண்டப்பட்ட வீணை முனிவர், "அரசே! சத்தியவான் நற்குண நற்செய்கைகளிலும் பல பராக்கிரமங்களிலும் அழகு ஆண்மைகளிலும் ஒப்பாரும் மிக்காருமற்றவனே. ஆயினும் அவனுக்கு விவாகமான ஒரு வருடத்துக்கெல்லாம் அவன் இறக்க வேண்டும் என்று அவனுக்கு விதி ஏற்பட்டிருக்கிறது. நீ என்னை மிகவும் வேண்டிக் கொண்டமையால் உனக்கு இந்த ரகசியத்தை வெளியிட்டேன். இனி நீ விளக்கைப் பிடித்துக் கொண்டே கிணற்றில் விழுவதற்கு விரும்புகிறாயா?" என்று சொன்னார். அதைக் கேட்ட அரசன், மகளைப் பார்த்து, "அம்மா! நீ சொல்லுகிற சத்தியவான் மிகவும் தரித்திரன். காட்டில் வசித்துக்கொண்டு கொடிய துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருப்பவன். ஆகினும் பாக்கியமில்லையென்று சொன்னாலும் அவனுக்கு ஆயுளாவது இருக்கிறதா என்றால், அதுவுமில்லை. கலியாணமான ஒரு வருஷத்துக்கெல்லாம் இறந்துபோய் விடுவானாம். இத்தகைய நிர்ப்பாக்கியங்களுடையவனுக்கா நீ மாலையிடுவது? ஆகையால் வேறு ராஜகுமாரர்களில் எவனையாவது குறிப்பிடுவாயாக." என்று கூறினான்.

தந்தை மொழியைக்கேட்ட சாவித்திரி, "ஐயனே! மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றுறுப்புக்களில்

மனமோ சிறந்தது. அத்தகைய மனத்தால் முன்னமேயே சத்தியவானை மணப்பதென்கிற நிச்சயஞ் செய்து கொண்டேன். இப்பொழுது அதை மாற்றுவது எப்படி? ஆகையால் நான் அந்தச் சத்தியவான் தவிர வேறொருவனை அவன் எப்படிப்பட்டவனாயிருந்தபோதிலும் மணக்க உடன்படேன்." என்று சொன்னாள். இதைக் கேட்ட அரசன் இவ்வளவுறுதிகொண்ட மனமுடையவளை மாற்றுவது தன்னால் முடியாத காரியமென்று உணர்ந்து விதிவழிப்படி எல்லாம் நடக்குமென்று துணிந்து மகளுடைய கருத்துக் கிசைவானான்.

அஸ்வபதி என்னும் அரசன் சிலகாலஞ் சென்ற பிறகு, தனது சேனைகள் புடை சூழக் காட்டினை யடைந்து, துயுமச்சேன மகாராஜனைக் கண்டு, "ஐயா! உமது புத்திரனாகிய சத்தியவானுக்கு என் புத்திரியாகிய சாவித்திரியைக் கொடுத்து விவாகஞ்செய்ய விரும்புகிறேன். தங்களுடைய அபிப்பிராய மென்ன?" என்று கேட்டான். அதைக்கேட்ட துயுமச்சேனராஜன் அஸ்வபதியைப் பார்த்து, "அரசே! நாட்டை யிழந்து காட்டையடைந்து, உணவும் உடையுமின்றித் தவிக்கும் எங்களுடைய குமாரனுக்கா உங்கள் செல்வப் புதல்வியைக் கொடுக்கவேண்டும்? எங்களைத்தவிர இப்பூமியில் வேறே அரசர்களில்லையா? அளவிறந்த போக பாக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற உங்களுடைய மகள் காட்டில் எங்களுடன் கஷ்டப்படுவாளோ? இவை எல்லாம் நீர் அறியாதனவா?" என்று



அதற்கு அஸ்வபதி பின்வருமாறு கூறினார். "செல்வமும் தரித்திரமும் சகடக்கால் போன்றது. ஆகையால் வெகு விரைவில் இந்தக் கஷ்டங்கள் நீங்கிப் பழையபடி நீங்கள் அரச செல்வத்தை அடையவுங் கூடும். குலமும் குணமும் பெரிதேயன்றிச் செல்வமுஞ் சிறப்பும் பெரிதன்று." என்று கூறி அவ்வரசனை இணங்குவித்துத் தன் புத்திரியைச் சத்தியவானுக்குக் கொடுத்து விவாகஞ் செய்து முடித்தான்.

சாவித்திரி தேவியானவள் விவாகமான நாள்முதற் கொண்டு கணவனுக்குமுன் எழுந்திருந்து நீராடி ஆடையுடுத்தி வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுக் கணவன் திருவடிகளுக்குத் தண்டனிட்டுக் கணவனை தெய்வமென்றும் கொண்டு பற்பலவித பணிவிடைகளையும் செய்து வந்தாள். இவளிவ்வாறு செய்வதைக் கண்ட ரிஷிபத்தினிகளும் வியந்தார்கள்.

இவ்வாறு ஒரு வருஷ காலம் கணவனும் மனைவியும் பாலும் நீரும் போலவும் பூவும் மணமும் போலவும் நகமும் சதையும் போலவும் இருந்து பரம சந்தோஷத்துடன் காலம் கழித்து வந்தார்கள்.

முன்னமேயே சாவித்திரி விவாகமான ஒரு வருஷத்துக்கெல்லாம் கணவன் இறக்கப் போகிறானென்று கேள்விப்பட்டிருந்தாளாகையால் கலியாணமான நாள் முதல் கணக்கிட்டுக்கொண்டே வந்து அந்த நாள் வருவதற்கு நாலுநாள் முன்னதாகவே அவன் மரணம் சமீபித்திருப்பதை உணர்ந்து மூன்று நாள் ஆகாரமின்றித் தண்ணீரும் குடியாமல் இடைவிடாது

டன் விரதமிருக்கத் தொடங்கினாள். அவள் அவ்வாறு செய்வதைத் துயுமச்சேனன் அறிந்து, சாவித்திரியை நோக்கி, "அம்மா! நீயேன் இவ்வாறு அன்னந்தண்ணீரருந்தாமல் பட்டினியாயிருக்கிறாய். ஐயோ! இப்படி உபவாசமாயிருப்பதால் ஆயாசம் மேலிட்டு முகவாட்டமாயிற்றன்றோ! நீ உபவாசமிருக்கவேண்டிய காரணம் என்ன?" என்று கேட்டான். அதற்குச் சாவித்திரி அரசனை நோக்கி, "மாமா! எனக்கு இன்று முதல் மூன்று நாட்களுக்கு ஒரு விரதம் உண்டு. அந்த மூன்று நாளும் முடிவதற்கு முன் ஒரு துளி ஜலங்கூட அருந்தாமல் மூன்று ராத்திரியும் கடந்த பின்னரே பாரணை செய்யத்தகும்." என்று சொன்னாள். பிறகு அந்த மூன்று நாளும் கழிந்த பின்பும் அவள் உணவு கொள்ளாதிருந்ததைப் பார்த்த அரசன், அவளைப் பார்த்து, இப்பொழுதாவது உண்ணலாமே என்று கேட்டான். அதற்கவள், "இன்று இரவு உணவு உண்ணுகிறேன்." என்று சொன்னாள்.

அன்று சத்தியவான் தாய் தந்தையர்களை நோக்கி என்றும் வனத்தைப் பார்க்க வேண்டுமென்கிற ஆசையில்லாதவனாயிருந்தாலும், அன்றையதினம் வனம் பார்க்க வேண்டுமென்று வேட்கைமிகுந்தவனாய் விடைகேட்டனன். மாதா பிதாக்கள் உத்தரவு கொடுத்தனர். வனத்துக்குப் புறப்பட்ட சத்தியவானை நோக்கி அவன் அன்று சாயந்திரம் உயிர் நீப்பது உண்மையென்பதை யுணர்ந்த சாவித்திரி தன்னையும் உடனழைத்துக்கொண்டு போகவேண்டுமென்று பிரார்த்தித்தாள் அவனும் அவளை அழைத்துக்கொண்டு விறகுகொண்டு



வரும்பொருட்டுக் கோடரியை எடுத்துத் தோள்மேல் வைத்துக்கொண்டு போகலானான்.

இவ்வாறவர்களிருவரும் உல்லாசமாகப் போகும்பொழுது, சத்தியவான் சாவித்திரிக்கு அவ்வனத்திலுள்ள விருக்ஷங்கள், செடிகள், கொடிகள், மலைகள் அருவிகள், பட்சிகள், மிருகங்கள் இவற்றின் அழகை விரித்துச் சொல்லிக் காட்டிக்கொண்டே போனான். அப்படிப் போகையில் சாவித்திரிக்குப் பிரியமாயுள்ள புஷ்பங்களையும் பறித்துக் கொடுத்தான். அங்கோரிடத்தில் ஓர் உலர்ந்த மரத்தை அவன் கண்டு, விறகுக்காக அதைக் கோடரியால் வெட்டினான். அப்பொழுது அவனுக்குக் களைப்பு மேலிட்டது. உடனே அயர்ந்து கோடரியைக் கீழே போட்டுவிட்டுச் சாவித்திரியை நோக்கி, "கண்ணே! என் உடம்பெல்லாம் கிடுகிடென்று நடுங்குகிறது. கால்கள் நிற்க முடியவில்லை. தலைநோய் உண்டாகிறது. தெரியாமல் வனத்துக்கு வந்தேனே!" என்று சொல்லிக் கீழே விழுந்துவிட்டான். அப்பொழுது சாவித்திரி கணவனைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு உட்காரவைத்து அவனுடைய தலையைத் தன் மடிமீது வைத்துக்கொண்டு, "பிராணேசா! பயப்படவேண்டாம். சிறிது நேரம் நித்திரை செய்வீராகில், பிறகு களை தீர்ந்து சுகமாயிருப்பீர்கள்" என்று இதமொழிகளாற்சொன்னாள். சொல்லி அவ்வாறே அவனைத் தூங்கச்செய்தாள். உடனே சூரியன் அஸ்தமித்தான். சாவித்திரி தவச் சங்கல்பத்தையும் கணவனுக்கு மரணம் சமீபித்திருப்பதையும் நினைத்து "ஓ தெய்வமே! என்னை இக்கதிக்குள்ளாக்கினையல்லவா!" என்று துக்கித்துக் கொண்டிருந்தாள்.

அச்சமயத்தில் யமனானவன் காலபாசத்துடன்
சூலத்தைச் சுழற்றிக்கொண்டு அவ்விடத்து வரலாயி
னன். அவனைப் பார்த்த சாவித்திரி பயமடைந்தாளா
யினும் தைரியமடைந்து, "ஓ தேவனே! நீயார்? பூதமோ!
பிரேதமோ? பிசாசமோ? எனக்குத் தெரியப்படுத்து
வாயாக!" என்று கேட்டனள். அதற்கு யமன் அவளை
நோக்கி, "அம்மா! நான் தான் காலன் என்றும் யமன்
என்றும் சொல்லப்படுகிறவன். சூர்யனுடைய புதல்
வன். ஜீவர்களுடைய உடலையும் உயிரையும் வேறு
வேறாகப் பிரிப்பவன். உனது புருஷனைக் காலபாசத்
தாற் கட்டி என் பட்டணத்துக்குக் கொண்டுபோக வந்
தேன்." என்று சொல்லிவிட்டுச் சத்தியவானுடைய உயி
ரைப் பிடித்துக் கட்டிக்கொண்டு போனான். மஹா பதி
விரதையான சாவித்திரியும் யமன் பின்னாலேயே போக
த்தொடங்கினாள். அதைப்பார்த்த யமன், "நீ ஏன் என்
பின்னே வருகிறாய்? வரக்கூடாது. இனிமேல் நான்
போகிற வழி யுனக்குத் தெரியமாட்டாது போ" என்று
சொன்னான். அதைக் கேட்ட சாவித்திரி அவனைப்
பார்த்து, "சுவாமி! உம்மையொத்த மகாத்துமாக்களைத்
தரிசனஞ்செய்த ஸ்திரீகளுக்குத் தெரியாத வழியும் ஒன்
றுண்டோ?" என, அதைக்கேட்டயமன், "அம்மா! உனது
பிரிய வசனங்களுக்கு மகிழ்ந்தேன். நீ சீக்கிரமாக
உனது கணவனைத் தவிர்த்து வேறு ஏதாவதுவரங்கேள்!
அதைக் கொடுக்கிறேன்." என்றுசொன்னான் உடனே
அவள், "சுவாமி! என் மாமன் மாமிகளுக்குக் கண்தெரி
யும்படி செய்யவேண்டும்." என்றாள். யமன் அந்த வரத்
தைக் கொடுத்துவிட்டு நிற்காமல் போய்க் கொண்டிருந்
தான். சாவித்திரியும் கூடவே போய்க் கொண்டிருந்தாள்.



உடனே யமன் திரும்பிப்பார்த்து அவளை நோக்கி,
ஏனம்மா! இன்னும் நிற்காமல் வந்துகொண்டிருக்கி
றாய்? என்று கேட்க, சாவித்திரி உம்மைப்போன்ற
தெளிவடைந்த மகாத்மாக்கள் பிறருக்கு இம்சை செய்
ய முயலார்கள். அன்னியர்களுடைய மனக்கோரிக்கை
களை நிறைவேற்றுவார்கள். நீர் தரும மார்க்கத்தில்
வழுவாது நடப்பதால் தர்மதேவதையென்றும் பிரா
ணிகளுயிரைக் கவருதலால் யமனெனவும் பேர் பெற்
றிருக்கிறீர். ஆகையால் தாங்கள் அறியாததொன்று
உண்டோ என்று வெகுவாய் வேண்டினாள். உடனே
யமன் அவளைப் பார்த்து, "கற்பரசியே! உனது வார்த்
தைகள் அமுதம்போல் எனக்கு இன்பஞ்செய்கின்
றன. மறுபடியும் கணவனன்றி ஏதாவது ஒருவரங்
கேட்பாயாக" என்று கூறினன். அதற்குச் சாவித்திரி,
தர்மராஜனே! முன்னம் என் மாமனார் பகைவர்பால்
இழந்துவிட்ட நாடுநகரங்களெல்லாம் திரும்பக் கிடை
க்கவேண்டும்." என்றுகேட்க, அவன் அப்படியே யாகுக
என்று சொன்னான். அவ்வரத்தைப் பெற்ற பின்னும்
சாவித்திரி அவனை விடாது பின் சென்றாள். அப்படி
வருகிற சாவித்திரியை நோக்கி, யமன், "நீ இன்னும் ஏன்
பின் தொடருகிறாய்? நடக்கமுடியாததும் மிகவும் பய
ங்கரமானதும் ஆகிய மார்க்கம் இனிக் கடக்க வேண்
டியதாகும். ஆகையால் நீ வருவதை நிறுத்து." என்று
கூறினன். அதைக்கேட்ட சாவித்திரி, "அறக்கடவுளே!
அறத்தைச் செய்பவர்கள் தாங்கள் செய்யும் அறத்தில்
அணுவளவும் பிசகமாட்டார்கள் அதுபோல் கற்பு
டைய ஸ்திரீகளுக்கு உயிரினும் சிறந்தவனாகிய கணவ
னைப் போற்றிப் பூசிப்பதே மேலான அறமாகும். அக்

தனைய கணவனை இழந்துவிட்டுப் போக எனக்கு எப்படி மனம் சகிக்கும். நாங்கள் அறியாத நீதியு முண்டோ?" என்று சொன்னாள். அதைக் கேட்ட யமன் அவளைப்பார்த்து, "பதிவிரதையே! உனது மொழிகளுக்கு மனமுவந்தேன். கணவனையன்றி வேறு ஏதாகிலும் வரங்கேள்." என்றுங் கூறினான்.

அதற்கு அவள் தன் தந்தைக்கு நூறுபிள்ளைகள் பிறக்கும்படி அனுக்கிரகஞ் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அதையுங் கொடுத்தேனென்று சொல்லிக் கொண்டே எமன் போய்க்கொண்டிருந்தான். பிறகும் அவள் யமனை விடாது பின்தொடர்ந்தே போய்க்கொண்டிருந்தனள். அப்பொழுதும் யமன் அவளைநோக்கி மிகக் கடுமையானதாகிய இந்த வழியில் உன்னையன்றி வேறொருவரும் வரமாட்டார்கள். உனது கற்பின் மகிமை யெப்படிப் பட்டதோ நான் அறியேன்! மிகவும் களைத்துப்போனாய்! அம்மா! இனியாகிலும் நில்," என்று சொல்ல அதைக்கேட்ட புண்ணியவதி, "எமதருமனே; என் மனது என் நாதனுடைய திருவடிகளில் லயித்திருக்கையில் எப்படி நான் அகலமுடியும்? யாராவது உம்முடன் வார்த்தைகள் பேசுஞ் சக்தியுடையவர்களாவார்களாகில் அவர்கள் உமக்கு பந்துக்களாவார்கள். அவர்கள் பிராமணர்களாகில் ஏழு வரமும் க்ஷத்திரியர்களாகில் நான்கு வரங்களும் வைசியர்களாகில் இரண்டு வரங்களும் சூத்திரர்களாகில் ஒரு வரமும் பெறுதற்குரியவராவார்கள், க்ஷத்ரிய ஸ்திரீயாகிய நான் மூன்று வரம்பெற்றுக் கொண்டேன். இன்னும் ஒருவரம் பாக்கியிருக்கிறது. அதைக்கொடுத்தருளல்வேண்டும்" என்று கூறினாள். அதைக்கேட்டயமதரு



மன், "அம்மா, உனது பதிபக்திக்கு மகிழ்ந்தேன்! உனக்கிஷ்டமாகிய இன்னொரு வரத்தையும் கேட்பாயாக" என்று கூறினார். அதைக்கேட்ட சாவித்திரி யமனை நோக்கி, "தருமதேவரே இதற்கு முன் மூன்றுவரங் கொடுத்தீர். அவற்றால் எல்லாச்சம்பத்துக்களும் அருளிச் செய்தீர். இதற்கு முன் கேட்ட வரங்களிலெல்லாம் தவிர என்னும் ஒரு சொல்லைச் சேர்த்துக் கேட்கச் சொன்னீர். இப்பொழுதோ தவிர என்னும் வசனத்தை மறந்து இஷ்டமானதைக் கேளென்றீர். எனக்கிஷ்டமானது இவ்வுலகத்தில் என் கணவனைத் தவிர்த்து ஒன்றுமில்லை." என்று கூறி யமனுடைய இரண்டு கால்களையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தண்டனிட்டாள்.

அப்போது யமன், கற்பரசி படுந்துன்பத்துக்கு மனமிரங்கி, "அம்மா! நீ அழவேண்டாம். உனது பதியைப்பிழைக்கச் செய்தேன்." என்றுசொல்லி சத்தியவானைப் பாசத்தினின்றும் விடுவித்தான். அன்றியும் இவன் நாலாயிரவருடம் ஜீவித்திருந்து அநேக யாகங்களைச் செய்து சகல போக பாக்கியங்களையும் அநுபவிப்பான். இவனுக்கும் உனக்கும் நூறு பிள்ளைகள் பிறப்பார்கள்" என்று சொல்லி விட்டு மறைந்து போனான்.

யமன் சென்ற பின்பு சாவித்திரி அங்கிருந்து திரும்பிக் கணவன் படுத்திருந்த இடத்துக்கு வந்து, அவன் சிரசை [illegible] தன் மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனள். சிறிது நேரத்துக்கெல்லாம் யமனால் விடப்பட்ட சத்தியவான

டைய உயிர் அவனுடலில் வந்து சேர்ந்தது. உடனே நித்திரை செய்து எழுந்தவன்போல் சத்தியவான் எழுந்திருந்தான். தூங்கி விழித்தவன் மனைவியை நோக்கி, என்னை யாரோ ஒரு சூரன் பிடித்துக்கொண்டு போக அவன் பின்னே சகல லட்சணங்களும் பொருந்திய ஒரு ஸ்திரீ பின் தொடர்ந்து வந்து என்னை மீட்டுக் கொண்டு வந்ததாகக் கனவுகண்டேன்'' என்றுசொன்னான். அதைக்கேட்ட சாவித்திரி, ''சுவாமி அது கனவல்ல; நனவேயாம்.'' என்றனள். அதையவன் கவனித்துக் கேளாமல், பெண்ணே யென்னையேன் நீ இந்நேரம் எழுப்பாமலிருந்தாய்? ஐயோ! நான் என்றும் இவ்வளவு நேரம் தூங்கினதில்லையே! இருள் நிறைந்ததால் வழிகளும் காணப்படவில்லையே! வீட்டில் தாய் தந்தையர் என்னவானார்களோ! இனி இமைப்பொழுதும் இங்கே காத்திருக்கக் கூடாது. வா, எழுந்திரு; போகலாம், என்றனன்.''

அதற்கு சாவித்திரி "சுவாமி! நமது இருப்பிடம் இங்கிருந்து வெகுதூரம், வழியோ மிகக்கஷ்டமானது பூதப் பிரேத பைசாச கணங்கள் நிறைந்துள்ளது. ஆகையால், நாம் இன்றிரவு இவ்விடம் தங்கியிருந்து பொழுது விடிந்தவுடன் போகலாம்" என்றனள். அதற்கு சத்தியவான், காரிகையே, ''எனக்குத் தலைநோய் நீங்கிவிட்டது. தேகத்திலு பலம்வந்துவிட்டது இனி யரைக்கணமேனும் இங்குத்தங்குதல் கூடாது.'' என்று சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட ஆரம்பித்தான் சாவித்திரி தேவியும் கணவனைப் பிடித்துக்கொண்டே மெல்ல மெல்ல நடந்து போனாள்.



இவர்கள் செய்தி இவ்வாறாகச் சத்தியவானது தாயும் தந்தையும் ஐயோ ஒருநாளும் காட்டிற் போயறியாத பிள்ளையை இன்று காட்டிற்குப் போகச்சொன்னோமே! சிறுவர்களாகிய சத்தியவானும் சாவித்திரியும் காட்டில் என்ன சங்கடங்களை யனுபவித்துக்கொண்டிருக்கிறார்களோ! வழிதப்பினார்களோ என்னவோ! என்று பிரலாபித்துக் கொண்டிருந்தார்கள். அவ்வாறு துக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் த்யுமச்சேன ராஜனுக்குக் கண்கள் தெரியலாயிற்று, உடனே தம்பதிகளிருவரும் காடெல்லாந்தேடலானார்கள். அப்பொழுது சாவித்திரியுஞ் சத்தியவானும் வந்து அவர்களை யடிபணிந்தார்கள்.

பிறகு நால்வரும் பர்ணசாலை வந்து சேர்ந்தார்கள். உடனே அரசன் மகனையும் மருமகளையும் பார்த்து, அடங்காமகிழ்ச்சி யுடையவனாய், நீங்கள் காலையில் இவ்விடம் விட்டுப்போனவர்கள் இதுவரையில் தாமதிக்கக் காரணம் என்ன?'' என்று கேட்டான். சாவித்திரி மாமனையும் மாமியையும் நோக்கிக் காலையில் தாங்கள் காடடைந்ததும் கணவன் தலைவலியென்று சொல்லிப்படுத்துக்கொண்டதும் எமன் வந்து பாசத்தாற் கட்டியிழுத்துக்கொண்டு போனதும், தான் பின்னே சென்று நான்கு வரங்களைப்பெற்று அவனை மீட்டுவந்ததுமாகிய செய்தியையும் விவரமாகக்கூறினாள்.

அதைக்கேட்ட மாமன் மாமியர் புளகாங்கிதராய், அடி எங்கள் குலவிளக்கே, அம்மணி! நீஎவ்வளவு பெரிய காரியத்தைச் செய்தாய்! உனது பெருமையைக் கொண்டாட இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதி

பிள்ளைகளுடையதாகுமா?" என்று சொல்லிச் சத்தியவானுடைய தாயார் சாவித்திரியை அழைத்துத் தன்மடியில் இருத்தித் தலையை வகிர்ந்து கன்னத்தைத் தடவி முத்தமிட்டு, "என் கண்மணியே, உன்னைப்போல் அரியகாரியத்தைச் செய்த உத்தமிகளும் உலகில் உண்டோ," என்று புகழ்ந்தனள்.

இவ்வாறு இருந்து, அன்றிரவு கழிந்தபின் உதயமானவுடன் சாளுவதேசத்திலிருந்த மந்திரிகளும் பிரஜைகளும் இவ்விடத்திற்கு வந்து, த்யுமத்சேன மகாராஜனைப் பார்த்து, "அரசே தமது பகைவன் வெகுஜன விரோதத்தால் யமபுரத்துக்குப் போயினான். ஆகையால் உமக்குப் பட்டங் கட்டுவதற்காக வந்தோம்." என்று சொன்னார்கள். உடனே அவர்கள் வேண்டுகோளின்படி சென்று த்யுமத்சேன மகாராஜன் பட்டங்கட்டிக்கொண்டு சிலகாலத்துக்குப்பின் அந்த ராஜ்யத்தைத் தன் மகனிடம் ஒப்புவித்தான். சாவித்திரியின் தந்தையான அஸ்வபதிக்கும் பிறகு நூறு குமாரர்கள் உண்டானார்கள். சத்தியவான் சாவித்திரியுடன் வெகுகாலம் வாழ்ந்திருந்து அநேக யாகங்களைச் செய்து பெரும் புகழும் அடைந்தான்.

உத்தம பத்தினி உயிரையும் மீட்பாள்.

பதிவிரதைகள் சரித்திரம்

முதற் பாகம்

6774

சென்னை-600 008